# “ என்று எழுதியிருக்கிறதே ”

# “ It is written ”

Byron Nichols

நம்மில் பலர் மத்தேயு மூன்றாம் அதிகாரத்தில் யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததை வாசித்திருக்கிறோம். இந்த மூன்றாம் அதிகாரத்தின் கடைசி வசனத்தில் தேவன் வானத்திலிருந்து இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று பேசுவதை நாம் வாசிக்கமுடியும். அடுத்த அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டதை நாம் வாசிக்கிறோம், அங்கேதான் சாத்தான் தொடர் சோதனைகளோடு இயேசுவை எதிர்கொள்கிறான். இங்கே தேவனுடைய குமாரன் தொடர்ந்து என்று எழுதியிருக்கிறதே என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது. இப்படிச் சொன்னதின் மூலம் இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களின் மேன்மைக்கு சாட்சி பகர்ந்தார். இங்கே இயேசு கிறிஸ்து சாத்தானின் கவர்ச்சிகரமான சோதனைகளுக்கு இணங்க மறுப்பதற்கு எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை ஆதாரமாகப் பயன்படுத்தினார்.

நான் எண்ணிப் பார்க்கவில்லை, ஆனால் இயேசு கிறிஸ்து என்று எழுதியிருக்கிறதே என்னும் சொற்றொடரை 46 முறை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தியதாக எனக்குச் சொல்லப்பட்டது. இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களை மக்கள் மனதில் பதிப்பதற்கு திரும்பத் திரும்ப பழைய ஏற்பாட்டு வசனங்களை மேற்கோள் காட்டியிருக்கிறார். இயேசுவானவர் திரும்பத் திரும்ப தேவனுடைய வார்த்தையை வலியுறுத்தியது வேதவாக்கியங்களின் உண்மைத்தன்மை மீது அவருக்கிருந்த நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. உதாரணமாக, சதுசேயர்களின் கள்ள உபதேசத்திற்கும், உயிர்த்தெழுதலை அவர்கள் நிராகரித்ததற்கும், அவர் கொடுத்த பதிலைக் கவனியுங்கள் நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான

எண்ணங்கொள்ளுகிறீர்கள் என்று சாடினார் ( மத்22:29 ). இங்கே இயேசு சொன்ன வார்த்தைகளின் உட்பொருள் தெளிவாயிருக்கிறது. உயிர்த்தெழுதல் உட்பட எல்லா அர்த்தமுள்ள காரியங்களுக்கும் பதில் வேதவாக்கியங்களை உள்ளடக்கிய தேவனுடைய புத்தகத்தில் உள்ளது. மதத்தலைவர்கள் என்ற நிலையில் அவர்கள் இவைகளை நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து நிச்சயமாகவே நீதிமொழிகள் 30:5,6 போன்ற பழைய ஏற்பாட்டு வசனங்களுக்கு ஆதரவாகத்தான் பேசியிருக்கிறார், தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே கூட்டினால் அவர் உன்னைக் கடிந்து கொள்வார் நீ பொய்யனாவாய்'. இயேசு கிறிஸ்துவால் தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு உறுப்பையும் அங்கீகரிக்கவும் உறுதி செய்யவும் முடியும்.

தேவன் தாவீதை தன் இருதயத்துக்கு ஏற்ற தாசனாக கருதினார் (அப்போஸ்தலர் 13:28), தாவீதுக்கும் நிச்சயமாகவே தேவன்மீதும், அவருடைய வார்த்தை மீதும் உயரிய மரியாதை இருந்திருக்கிறது. சங்கீதம் 19:7-9 வசனங்களில் சங்கீதக்காரன் தேவன் மீதும், தேவனுடைய வார்த்தை மீதும் தனக்கிருந்த பற்றைக் காட்டினார். கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.

இவ்வுலகிலுள்ள எல்லாக் கட்டளைகளைவிடவும், ஒழுக்க நெறிகளை விடவும் வேதவாக்கியங்கள் மேலானது என்பதை அன்றும் இன்றும் ஒருவரால் எப்படிப் புரிந்து கொள்ளத் தவற முடியும்? சங்கீதக்காரனாகிய தாவீதால் சங்கீதம் 119 : 11 ல் தேவனிடத்தில் வெளிப்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பை யாரால் நிராகரிக்க முடியும்? நான் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் என்று தாவீது எழுதிக் கொடுத்துள்ள தேவனுடைய வார்த்தையை வாசிப்பதின், அறிவதின், நினைவு கொள்வதின் மதிப்பை உணர்ந்திருக்கிறார். நம் இக்கட்டான வேளைகளில் சோதனையான வேளைகளில் நம்மை மீட்க உதவும் வேதவாக்கியங்களின் மதிப்பை உலகிற்கு காட்டுவது சபையின் பொறுப்பாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தையை தனிப்பட்டமுறையில் படித்ததால் தான் என்று எழுதியிருக்கிறதே என்பதை நினைவு கூற முடிந்தது. அவருக்கு வேத வாக்கியங்களில் பரிச்சயம் இருந்தபடியால் தான் என்று எழுதியிருக்கிறதே என்பதை அறிந்திருந்தார்.

தாவீது தேவனுடைய வார்த்தைகளை வாசித்து அவைகளை படித்ததால் தான் தேவனுடைய வார்த்தையை அவருடைய இருதயத்தில் வைத்து வைக்க முடிந்தது. தாவீது தேவனுடைய வார்த்தைகளை நன்கு அறிந்திருந்தார். தாவீதும், மற்றவர்களும் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் எடுத்துச் செல்வதற்கு இன்று நம் கைகளில் வேத புத்தகம் இருப்பது போல் அன்று அவர்களிடத்தில் இல்லை. எனவே, தேவனுடைய வார்த்தை எப்போதும் தன்னிடத்தில் இருக்கத்தக்கதாக அதை ஜாக்கிரதையாகவும், அர்ப்பணிப்புடனும் மனப்பாடம் செய்து மனதில் வைப்பது தாவீதுக்கு அவசியமாயிருந்தது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எழுதப்பட்ட வார்த்தைகளுக்கு அதிக அழுத்தத்தைக் கொடுத்தார். ஏனென்றால், அது தேவனுக்கும், மனிதனுடைய கீழ்ப்படிதலுக்கும் மிக முக்கியமாக இருந்தன. தேவனால் வெளிப்படுத்தப்படாத வார்த்தைகள் மனிதனுடைய எண்ணத்தில் தோன்றியவைகள் தான்.

உயரிய தொழில் நுட்பங்களுடன் கூடிய உபகரணங்கள் நிறைந்திருக்கும் இக்காலகட்டத்தில் கூட எழுதப்பட்ட வார்த்தைகள் முக்கியப்பங்கை வகிக்கின்றன. இன்றைய நாட்களில் அதிநவீன தொழில் நுட்பங்கள் வலம் வருகின்றன. ஆனாலும், அவைகளை முழுமையாகப் பயன்படுத்தும் வாய்ப்பு பலருக்கும் கிடைப்பதில்லை.

அச்சிடப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் தரும் நன்மைகள் பலவாகும். இருந்தபோதிலும், அச்சிடப்பட்ட வார்த்தைகளை நம் நன்மைக்காகவும், பிறருடைய நன்மைக்காகவும் பயன்படுத்தும் வாய்ப்புகளை நாம் தவறவிட்டால் அது எந்த நன்மையையும் பயக்காது. என்று எழுதியிருக்கிறதே என்ற இத்தகைய தேவனுடைய வார்த்தைகளை நாம் வாசிப்போம், படிப்போம் அவைகளுக்குக் கீழ்ப்படிவோம். அவைகளை முழு முயற்சியுடன் பரப்புவோம்.

---

**ஒரு குழந்தை தன் பெற்றோரின் தேவைகளை சந்திக்க முடியாமல் போகலாம் ஆனால், அவர்களின் மதிப்பு எவ்வளவு என்பதை அறியாதவர்களாக இருக்க முடியாது.**

# நீங்கள் அவ்வளவு ஞானிகளா?

## Are you so wise?

E.Z.S. Rajanayagam

நமது தலைப்பில் இடம்பெற்றுள்ள, " அவ்வளவு " என்ற வார்த்தையை நமது அன்றாட வழக்கில், நாம் அவ்வளவாகப் பயன்படுத்துவதில்லை. பயன் படுத்தும் சில சந்தர்ப்பங்களில் கூட, ஒன்றை நேரிடையாகக் குறிப்பிடுவதற்கு இவ்வார்த்தையை நாம் தேடுவதில்லை. மாறாக, ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிட்டு, அதனடிப்படையில் பேசுவதற்கே இவ்வார்த்தை பெரும்பாலும் பயன் படும். ஆகவே, நீங்கள் அவ்வளவு ஞானிகளா? என்று நமது தலைப்பு சொல்லும்போது, நம்முடைய ஞானம் வேறு யாருடைய ஞானத்தோடோ ஒப்பிடப்பட்டிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டியதில்லை.

அப்படியானால், நம்முடைய ஒப்பிடுதல் யாருடன் தான் என்று கேட்கிறீர்கள், அப்படித்தனே? கண்டிப்பாக, நம்முடைய ஒப்பிடுதல் ஞானிகளோடு தான். அவர் கள் மத்தேயு இரண்டாம் அதிகாரத்தில் இடம் பெற்றிருப்பவர்கள். இயேசுவின் பிறப்போடு சம்பந்தப்பட்டவர்கள், ஆம், நம்முடைய ஆண்டவரும், உலக மீட்ப ருமாகிய இயேசுவானவர், யூதேயாவிலுள்ள பெத்லகேமில் குழந்தையாகப் பிறந்தபோது, அபூர்வ நட்சத்திரத்தை அடையாளமாகக் கொண்டு, சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து, அவரைப் பணிந்துகொள்ள வந்தார்கள் என்று அங்கே உள்ளது (மத்.2:1,2) கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் பற்றிப் பல விளக்கங்கள் உண்டு. ஆயினும், கிழக்கு என்பது எந்த தேசத்தைக் குறிக்கிறதென்றும், சாஸ்திரிகள் யாரென்றெல்லாம் ஆராய்வது நமது பிரதான நோக்கமல்ல. இருப்பினும், நமது தமிழ் வேதாகமத்தில், சாஸ்திரிகள் என்று சொல்லப்பட்டிருப்பவர்களுக்கு, ஞானிகள் என்ற பொருளும் இருப்பதால், அந்த ஞானிகளை இப்பொழுது நாம் தெரிந்துகொண்டு, அவர்களின் செயல்பாடு பற்றி அலசிப்பார்த்து, அவர்களின் செயல்பாட்டோடு நமது செயல்பாட்டை ஒப்பிட்டுப் பார்த்து, நமக்குப் பயன்படும் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

## I ஞானிகள், கேட்பதைக் கேவலமாக நினைக்கவில்லை ( வ.2 )

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத் தரும் முதல் பாடம். தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு ஒருவன் வெட்கப்படக் கூடாது என்பது.

மத். 2:1 – 2, வசனங்களைக் கவனியுங்கள், ஏரோது ராஜாவின் நாட்களில், யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபோது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்.

வேதாகமத்தால் ஞானிகள் என்று சொல்லப்பட்டுள்ள இவர்கள் பண்டைய மேதியா, பெர்சியாவைச் சேர்ந்த ஆசாரிய வம்சத்தார் என்று பெரும்பாலும் கருதப்படுகிறது. இவர்கள் வானசாஸ்திரம், ஜோசியம், மருத்துவம், இயற்கை ஆராய்ச்சி போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றிருந்தவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. அக்காலகட்டத்தில், இவர்கள் அநேகரால் அறியப்பட்டு, சமுதாயத்தின் மரியாதைக்கு உரியவர்களாக இருந்துள்ளார்கள். ஆகவே, காரியங்களின் தன்மையைத் தெரிந்துகொள்ளவும், அவைகளின் விஷயங் களைப் புரிந்துகொள்ளவும், மற்றவர்கள் தான் இவர்களிடத்திலே வர வேண்டு மேயொழிய, இவர்கள் யாரிடத்திலும் போக வேண்டிய அவசியமிருக்காது.

ஆனால், இப்படி சிறப்புக்கள் பல பெற்ற ஞானிகளே, இயேசுவைத் தேடும் தங்கள் முயற்சியின் ஒரு கட்டத்தில், யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்று பிறரிடத்தில் கேட்டுள்ளார்கள். இங்கே, நாம் கவனிக்க வேண் டியது யாதெனில், எதையும் யாரிடத்திலும் கேட்க வேண்டிய அவசியமில்லாத நிலையிலிருந்த அந்த ஞானிகள், இயேசுவின் காரியம் என்று வரும்போது, மற்றவர்களிடத்தில் கேட்பது தங்கள் தகுதிக்குக் குறைவானதென நினைக்காமல், கேட்பதற்கும் வெட்கப்படாமல் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள் என்பதுதான்.

வேத வசனங்களால் ஞானிகள் என்று சாட்சியிடப்பட்டு, அன்றைய உலகத்தால், தங்கள் ஞானத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றவர்களே தங்க ளுக்குத் தெரியாதவைகளைத் தெரிந்துகொள்ளப் பிறர் உதவியை நாடின போது, நாம் ஏன் தேவ இரகசியங்களை அறிந்துகொள்ள, வேத வசனங்களின் சரியான விளக்கங்களைத் தெரிந்துகொள்ள கௌரவம் பார்த்துக் கொண டிருக்க வேண்டும்? கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளு

கின்ற அநேகர், அதே கிறிஸ்துவின் காரியமாக போலி கௌரவம் பார்த்துக் கொண்டுள்ளார்கள் என்பது எவ்வளவு பரிதாபமானது தெரியுமா? என்னுடைய தகுதிக்கும், என்னுடைய படிப்பிற்கும், என்னுடைய பாரம்பரியத்திற்கும், நான் எப்படி அவர்களுடன் சேர்ந்து வேதாகமத்தைப் படிப்பது? நான் எப்படி அவர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்வது? நான் எப்படி அவர்களுடன் சேர்ந்து ஆராதிப்பது? என்றெல்லாம் அநேகர் தங்களுக்குள்ளே கேள்விகளை எழுப்பி தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டுள்ளார்கள். இதுதான் இன்றைய கிறிஸ்தவர்களின் உண்மை நிலை. ஒருவேளை ஞானிகள் அப்படி எண்ணி யிருந்தால், அவர்களால் இயேசுவை கண்டிருக்க முடியுமா? ஞானிகளே வெட்கப்படாத போது, நமக்கு எதற்கு வெட்கம்? ஞானிகளே கேட்பதைக் கேவலமாக நினைக்காத போது, நாம் ஏன் அப்படி நினைக்க வேண்டும்? நாம் அவ்வளவு ஞானிகளா?

## II. ஞானிகள் தேவனுடைய சத்தத்திற்கு மாத்திரம் கீழ்ப்படிந்தார்கள் ( வ.12 )

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத்தரும் இரண்டாவது பாடம், ஒருவன் தேவனுடைய சத்தத்திற்கு மாத்திரம் கீழ்ப்படிய வேண்டுமென்பது.

இயேசுவாகிய பிள்ளையினிமித்தம் கலக்கமுற்ற ஏரோது, தனது சிம்மாசனத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்று பயந்து, இயேசுவாகிய பிள்ளையைக் கொன்றுபோட வஞ்சக எண்ணங்கொண்டு, ஞானிகளிடத்தில் தந்திரமாய்ப் பேசி, நீங்கள் போய் பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள். நீங்கள் அதைக் கண்ட பின்பு, நானும் வந்து அதைப் பணிந்து கொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களை பெத்லகேமுக்கு அனுப்பினான் (வ.8). ஆனால், 12 – ம் வசனம், பின்பு அவர்கள் ஏரோதினிடத்திற்கு திரும்பிப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் " தேவனால் எச்சரிக்கப்பட்டு ", " வேறு வழியாய் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள் " என்று சொல்கிறது.

அந்த ஞானிகள், அந்நாட்களில் சர்வ அதிகாரமும் கொண்ட ஏரோது ராஜாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல், தேவனுடைய வார்த்தை களுக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது, நம்முடைய ஆன்மாவின் மீது, எந்தவொரு அதிகாரமும் இல்லாத மதத் தலைவர்களின் வார்த்தைகளுக்கு நாம் பவ்வியமாகக் கட்டுப்பட்டு தேவனுடைய வார்த்தைகளை ஏன் மீறி நடக்க வேண்டும்? இந்த மதத் தலைவர்களும், மார்க்க முன்னோடிகளும், குறிப்பாக இன்று வரம் பெற்றவர்கள் என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்பவர்

களும் குருடனுக்கு குருடன் வழிகாட்டுவது போன்றல்லவா ஜனங்களை நடத்திக் கொண்டுள்ளார்கள்! இயேசுவின் நாட்களில் இருந்த நிலை இன்றும் நீடித்துக் கொண்டுதானே உள்ளது. (மத்.15:14). இயேசுவுக்குச் செவிகொடுங்கள் என்று மறுரூபமலையிலே அறிவிக்கப்பட்டு (மத்.17:5), அந்த இயேசுவைக் கொண்டு புதிய ஏற்பாட்டை தேவன் கொடுத்திருக்கும் போது, அந்தப் புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளுக்குப் புறம்பாக, இந்த மதத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சௌகரியத்திற்கு கொள்கைப் புத்தகங்களை உருவாக்கிக் கொண்டு அதனடிப்படையில் ஒரு கூட்டத்தையும் சேர்த்துக் கொண்டு வழி நடத்திக் கொண்டுள்ளார்களே இது எப்படி நீதியாகும்? இவர்களெல்லாரும் குருடரான வழிகாட்டிகளில்லையா? புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் திட்டம் அவர்களுடைய கொள்கைப் புத்தகங்களில் எங்கே இருக்கிறது, காட்டுங்கள் பார்க்கலாம்!

ஆகவே, அந்த ஞானிகளைப் போலும், நமது அப்போஸ்தலர் போலும் தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் மாத்திரமே கீழ்ப்படிகிறவர்களாக நாம் ஒவ்வொருவரும் இருப்போம்.

### III. ஞானிகள் இயேசுவைப் பணிந்து, கொடுத்து, தங்கள் பக்தியை வெளிப்படுத்தினார்கள் (வ.11)

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத் தரும் இன்னுமொரு பாடம், ஒருவன் தன்னையும், தன்னிடத்திலிருப்பதையும் தேவனுக்குக் கொடுக்க வேண்டுமென்பது.

அவர்கள் (ஞானிகள்) அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து, அதைப் பணிந்து கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள் (மத்.2:11) என்று வசனம் சொல்கிறது.

இந்த வசனம், அவர்கள் இரண்டு காரியங்கள் செய்ததாக நமக்குக் கூறுகிறது. ஒன்று, அவர்கள் இயேசுவைப் பணிந்து கொண்டது. (பணிந்து என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் ஆராதித்தார்கள் என்றுள்ளது) மற்றொன்று, இயேசுவுக்கு கொடுத்தது என்பது. இந்த ஞானிகள் புறவினத்தார். இயேசுவின் தெய்வீகத்தை இவர்கள் முறையாக அறிந்திருக்க நியாயமில்லை. ஆனால், அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட கொஞ்ச காரியமே, அவர்கள் கண்டு கொண்ட சிறிதளவு காரியமே அவர்கள் அவரைப் பணிந்து ஆராதிக்கும்

படியாகச் செய்துள்ளது. ஆனால், இன்றைக்கு இயேசு பற்றியும், அவருடைய உபதேசம் பற்றியும், அவர் பூமிக்கு வந்ததின் நோக்கம் பற்றியும், அவருடைய சபை பற்றியும், அதற்குள் வரவேண்டிய அவசியம் பற்றியும், அதற்குப் பிறகான நியாயத்தீர்ப்பு பற்றியும் அதிகதிகமாய் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் நாம் அவரைப் பணிந்து கொள்கின்ற விஷயத்தில், அவரை ஆராதிக்கின்ற காரியத்தில் எந்தளவு உண்மையாய் உள்ளோம்? தயவு செய்து சிந்தியுங்கள்.

அடுத்து, ஞானிகள் இயேசுவுக்கு சிறந்ததையே காணிக்கையாகக் கொடுத்துள்ளார்கள். பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் என்று உச்சிதமான பொருள்களைக் கொடுத்துள்ளார்கள். தேவனுடைய உண்மைப் பிள்ளையாயிருந்து, அவரை ஆராதிக்கும் நாம் ஒவ்வொருவரும், நம்முடைய இருதயத்தையும், ஆத்துமாவையும் அவருக்குக்கொடுக்கிறது போல அவருடைய காரியங்களை மதித்து, அவருடைய கட்டளைகளை நிறைவேற்று வதற்கு உற்சாகமாய், சிறந்ததைக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். இன்னும், அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்கு நன்றி சொல்லும்படியாகவும் நாம் கொடுக்கவேண்டும். சங்கீதக்காரன் சொல்லுவதைப் பாருங்கள், கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? என்று ( சங்.116:12 ). பவுலடியார், கொரிந் தியருக்குச் சொல்லும் போது, இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர் களுடைய ஜாக்கிரதையைக் கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறேன் என்கிறார் (II கொரி.8:8). பரலோகத்தின் தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனையே நமக்காகக் கொடுத்தார். அதை ஒரு கணம் சிந்தித்தால், நமது கொடுத்தல் எவ்வளவு சிறப்பானதாக இருக்க வேண்டுமென்பது நன்றாகவே விளங்கும். ஆகவே, சிறந்ததையே எப்போதும் தேவனுக்கு கொடுக்க கூடியவர்களாக இருப்போம். சிறந்ததை உற்சாகமாய்க் கொடுப்பதின் மூலம் நமது கணக்குக்குத்தான் பலன் பெருகுகிறது என்பதை உணர்ந்து கொடுப்போம். (பிலி.4:17). ✝

---

## சபையும், நீங்களும்

சபைக்கடுத்த காரியங்களில் உங்களைச் சரியான அளவில் ஈடுபடுத்தா விட்டால், உங்கள் விசுவாச வாழ்க்கை மெல்ல மெல்ல மங்கிப்போகும்.

சபையில் நல்லவர்கள் இல்லை என்று குறைப்பட்டுக் கொள்ளக் கூடாது. இது மருத்துவமனையில் நோயாளிகள் தான் இருக்கிறார்கள் என்பது போல இருக்கும்.

தேவனுக்கு இரண்டாம் இடம் நீங்கள் கொடுத்தால், தேவனுக்கு நீங்கள் எந்த இடமும் கொடுக்கவில்லை என்று தான் பொருள்.

ஆவியோடும், உண்மையோடும் ஆராதனையில் பங்கு பெற்றால் முழுமையான பலனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| என்று எழுதியிருக்கிறதே | Byron Nichols | ... 1 |
| நீங்கள் அவ்வளவு ஞானிகளா? | E.Z.S. Rajanayagam | ... 4 |
| செல்வத்தை ஞானமாக ... | Jerry Bates | ... 11 |
| முதலாவது தேவனுடைய ... | Louis Rushmore | ... 15 |
| நன்றி சொல்லத் தடை செய்பவை | P.C. Philemon Rajah | ... 17 |
| மரித்தோருக்கும் ... | B. Arjunan | ... 22 |
| கேடு சூழ்ந்த குடும்பம் | E.Z. Selvanayagam | ... 27 |
| ஆவிக்குரிய காரியங்களில் ... | Benny Martin | ... 32 |

**தேவன்** — **God**

| | | |
|---|---|---|
| சகலவிதமான ஆறுதலின் தேவன் | Stanley E. Sayers | ... 35 |
| இயேசு நம் இரட்சகர் | Hans Dederscheck | ... 38 |
| என் வாழ்க்கையில் தேவன் ... | Tim Childs | ... 40 |

**தேவனுடைய வார்த்தை** — **The word of God**

| | | |
|---|---|---|
| பழைய ஏற்பாட்டிற்கான இடம் | Jimmy Jividen | ... 42 |
| ஊசியின் காதில் | John Allan | ... 44 |

**இரட்சிப்பு** — **Salvation**

| | | |
|---|---|---|
| தேவனுடைய கிருபையால் ... | J.C. Choate | ... 46 |
| நேரமே, என்னிடமிருந்து ... | Michael L. King | ... 50 |
| இது உங்களுக்கு ஒன்றுமில்லையா? | Maxie B. Boren | ... 53 |

**சபை** — **The Church**

| | | |
|---|---|---|
| நாங்கள் விசுவாசிக்கிறோம் | Bobby Key | ... 55 |
| நீங்கள் தேவனுடைய ... | Kevin L. Moore | ... 57 |

## வாழ்வதற்கான உபதேசம் — Doctrine to Live by

| | | |
|---|---|---|
| இசைக்கருவிகளை ... | Charles Box | ... 61 |
| உண்மையான மார்க்கம் | Bill Dillon | ... 63 |

## செயலில் கிறிஸ்தவம் — Christianity in Action

| | | |
|---|---|---|
| இதோ அடியேன், என்னை ... | Gary C. Hampton | ... 65 |
| மக்களைப் போய் சந்தித்து ... | Dwight Fuqua | ... 67 |
| ஏன் சுவிசேஷத்தை ... | Dan. R. Owen | ... 69 |
| நாம் போராட்டத்தில் ... | Harvey M. Starling | ... 72 |

## ஆராதனை — Worship

| | | |
|---|---|---|
| ஆராதனை | Shan Jackson | ... 77 |
| நாம் பாட வேண்டுமா? | Mike Hinton | ... 83 |

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை — Daily Christian living

| | | |
|---|---|---|
| பாதம் | Owen Cosgrove | ... 85 |
| நான் அடைந்துவிட்டேன் | Mike Sinapiades | ... 87 |
| அன்பை விளக்குதல் | Bill Nicks | ... 91 |

## கிறிஸ்தவ இல்லம் — The Christian home

| | | |
|---|---|---|
| என் பிள்ளைகளுக்கு நான் ... | Jimmy Ferguson | ... 93 |
| தாயின் பாரம் | Dan Gulley | ... 96 |
| ஒழுங்குபடுத்தப்படாத ... | Don Deffenbaugh | ... 99 |
| இளம் வயதினருக்கு ... | Paul Holland | ... 101 |

## ஹாய் குட்டீஸ் — Hey You Kits

| | | |
|---|---|---|
| நேரத்தைப் பயன்படுத்துதல் | Spc Alex Gibson | ... 105 |

# செல்வத்தை ஞானமாகப் பயன்படுத்துதல்

# The wise use of wealth

Jerry Bates

செல்வத்தை சரியாகப் பயன்படுத்துதல் என்பது வேதாகமத்தில் அதிகமாக விவாதிக்கப்படும் தலைப்புகளுள் ஒன்றாகும். இந்த தலைப்போடு அதிகம் சம்பந் தப்படாத ஒரு வசனப்பகுதி லூக்கா 16:1-13 - ம் வசனங்களில் இடம்பெற்றுள்ள அநீதியுள்ள உக்கிராணக்காரன் உவமை தான். இந்த உவமையைச் சரியானபடி புரிந்துகொள்வதற்குச் சற்று கடினமாக இருந்தாலும்கூட, செல்வத்தின் மீது கிறிஸ்தவர்களுடைய பார்வை பற்றி அதிகமாகச் சொல்லுகிறது என்று நான் நம்புகிறேன். வேதாகமத்தின் நாட்களில் உக்கிராணக்காரன் என்பவன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவனாக இருந்தான். இந்த உக்கிராணக்காரன் ஓர் அடிமையாகக் கூட இருந்திருக்கலாம், ஆனால், கண்டிப்பாக அப்படியிருக்க வேண்டுமென்று அவசியமில்லை. எது எப்படியிருந்தாலும், இந்த உக்கிராணக் காரன் தன் எஜமானுடைய சொத்தில் ஒரு பகுதியை அல்லது ஒட்டுமொத்தத் தையும் மேற்பார்வை செய்யும் பொறுப்பு பெற்றவன்.

இந்த உவமையில் உக்கிராணக்காரன் திடீரென தன் எஜமானுக்குக் கணக்கு ஒப்புவிக்கும்படியாகப் பணிக்கப்படுகிறான். இந்த உக்கிராணக்காரன் அநேகமாக ஒரு வாடகை நிலத்தை மேற்பார்வை செய்திருக்கலாம். எந்த வகையில் பார்த்தாலும் இவன் தன் எஜமானுடைய பணத்தை விரயம் பண்ணினபடியால் தான் வேலை இழக்கப்போவதை அறிந்திருந்தான். எஜமான் அவனைப் பணி நீக்கம் செய்து இத்தனை காலம் வேலை செய்ததற்கான ஊதியத்தையும் கொடுக்கப்போவதில்லை. இவன் என்ன செய்யப்போகிறான்? அந்த உக்கிராணக்காரன் தூரிதமாக ஓர் அருமையான திட்டத்தைத் தீட்டினான்.

இந்த உக்கிராணக்காரன் தன் எஜமானுக்கு கடனாளிகள் செலுத்த

வேண்டிய தொகையைக் குறைத்து எழுதும்படி கடனாளிகளிடத்தில் சொன்னான். அதன் மூலம் அவர்களுடைய தயவைப் பெற்றுக்கொண்டு தன்னுடைய பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வரை அவர்களுடைய உதவியால் வாழ்ந்துவிடலாம் என்று எண்ணினான். இவனுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு, இவனுடைய எஜமான் இந்த உக்கிராணக்காரனின் நேர்மையற்ற தன்மையை ஏன் பாராட்ட வேண்டும்? மேலும், இந்த நேர்மையற்ற மனிதனை இயேசு கிறிஸ்து எதற்காகத் தம்முடைய பிள்ளைகளுக்கு உதாரணமாகப் பயன்படுத்த வேண்டும்? சிலவேளைகளில் துன்மார்க்கமான மனிதர்களிடமிருந்துகூட பாடங்களைக் கற்றுக்கொள்ளமுடியும். ஒரு பழங்காலச் சொல், எதிரியிடமிருந்து கூட காரியங்களைக் கற்றுக்கொள்வது நியாயமானது என்று சொல்லுகிறது.

உவமைகளில் பெரும்பாலானவை நமக்குப் பாடங்களைக் கற்றுத்தருகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த உவமையிலும் காரியம் அப்படியாகத் தான் இருக்கிறது. இயேசு கிறிஸ்து தேவையில்லாமல் அந்த உக்கிராணக்காரனுடைய செயலை மெச்சவில்லை. மாறாக, அவர், அவனுடைய செயலை மாம்சப்பிரகாரமான மக்களின் எதிர்காலப் பார்வைக்கான உதாரணமாகப் பயன்படுத்துகிறார். (லூக்.16:9). வேறுவிதமாகச் சொன்னால், இவ்வுலகத்தின் சௌகரியங்கள், ஆசாபாசங்களின் மீது பற்றுள்ள மக்களின் எதிர்காலப் பார்வைக்கான உதாரணமாகப் பயன்படுத்துகிறார். இவ்வுலகத்தின் மக்கள் தங்கள் வாய்ப்புகளை, தங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துகிறார்கள். மேலும், அவர்கள் இவ்வுலகப் பிரகாரமான இலக்குகளை அடைய புத்தியுள்ளவர்களாகவும், ஜாக்கிரதையுள்ளவர்களாகவும் இருந்து தங்கள் ஆசைகளை நிறைவேற்ற எதையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் எதிர்காலத்தை ஆயத்தப்படுத்தப் பிரயாசப்படுகிறார்கள். சுருங்கச் சொன்னால், எப்படி, நாம் உவமையில் பார்க்கும் இந்த உக்கிராணக்காரன் தன் வருங்காலத்தைப் பாதுகாக்க இவ்வுலகப் பொருட்களைப் பயன்படுத்துகிறானோ, அதே போல் இவ்வுலகத்தின் மக்கள் தங்கள் இலக்குகளை அடைய இவ்வுலகத்தின் பொருட்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய ஒளியின் பிள்ளைகளிலிருந்து வேறுபடுகிறார்கள். முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் ( எபே.5:8 ). தேவன் தம்முடைய ஊழியக்காரர்கள் பணசம்பந்தமான காரியங்களில் நல்ல உக்கிராணக்காரனாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். தேவனுக்கு

உண்மையாகவே நம்முடைய பணம் அவசியமில்லாதிருக்கிறபடியால் அது சிலருக்கு ஆச்சரியமாக இருக்கும். இதற்கான காரணம் லூக்கா 16:10- 12 வசனங்களின் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வசனங்களில் கொஞ்ச மானது அதிகமானதோடு ஒப்பிடப்பட்டிருக்கிறது. அநீதியான உலகப்பொருள் மெய்யான பொருளோடு ஒப்பிடப்பட்டிருக்கிறது. மற்றவர்களுடைய உடமையோடு ஒருவருடைய சொந்த உடமை ஒப்பிடப்பட்டிருக்கிறது. நாம் கொஞ்சத்தில் உண்மையில்லாதவர்களாயிருந்தால், நிச்சயமாகவே நாம் அநேகத்திலும் உண்மையில்லாதவர்களாகவே இருப்போம். நாம் இவ்வுலகத்தின் அநித்தியமான காரியங்களில் உண்மையில்லாதவர் களாயிருந்தால், அவருடைய நித்திய ராஜ்ஜியத்தின் ஐசுவரியங்களை நிர்வகிக்கும் பொறுப்பை அவர் நமக்கு எப்படிக் கொடுப்பார்?

இவ்வுலகத்திலுள்ள எல்லாமே தேவனுடையது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது சங்.24:1 ஐ மேற்கோள் காட்டினார். பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுமே தேவனுடையதாயிருக்கிற படியால், நாம் எல்லாவற்றையும் ஞானமாகப் பயன்படுத்த வேண்டும்.

பணத்தைப் பயன்படுத்துவது ஏன் தேவனுக்கு முக்கியமானது? கொஞ்சத்தில் நாம் உண்மையில்லாதவர்களாக இருக்கும்போது, அதாவது, அநித்தியமான காரியங்களை நாம் தவறாகப் பயன்படுத்தும்போது, அது நம் இருதயத்தின் உண்மையான பற்றையும் மனநிலையையும் வெளிப் படுத்துகிறது. மத சம்பந்தமாக நாம் மிகவும் கவர்ச்சிகரமான தோற்றத்தை வெளிப்படுத்தினாலும் பணத்தைப் பற்றிய நம்முடைய உடமைகளை நாம் பிறரிடத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாக நாம் அவர்களை நம்பலாமா வேண்டாமா என்பதை அறிய விரும்புகிறோம். இந்த உவமையில் இயேசு கிறிஸ்து அடிப்படையாக இதே காரியத்தைத் தான் பேசுகிறார். தேவன் நித்திய ஐசுவரியத்தை நம்மிடம் ஒப்புவிப்பதற்கு முன்பாக அதிக முக்கியமற்ற காரியங்களில் நாம் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கிறோமா என்பதை அறிய விரும்புகிறார்.

நாம் தேவனை நம்பமுடியும் என்பதை அறிந்திருக்கிறோம். ஆனால் தேவன் நம்மை நம்ப முடியுமா? இக்கேள்விக்கான பதிலின் அடையாளம், நாம் இவ்வுலகத்தின் அநித்தியமான செல்வங்களை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது தான். செல்வம் தனக்குத்தானே தீமையானதல்ல. ஆனால், அது பெரும்பாலும் தீமைக்கு வழி வகுக்கிறது. இயேசு கிறிஸ்து உலகப் பொருளை

அநீதி என்று குறிப்பிடுகிறார். ஏனென்றால், அது பெரும்பாலும் தீய நோக்கத்திற்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இது பொதுவாக மனிதர்களை தேவனிடமிருந்து விலகச் செய்கிறது. லூக்கா 16:13 ல் செல்வம் அல்லது பணம் தேவனுக்கு பகையாகக் காட்டப்பட்டிருக்கிறது. தேவனுடைய உடைமைகளை (பணத்தை) சுயநோக்கத்திற்காகப் பயன்படுத்தும்போது நாம் உண்மையாகவே தேவனிடத்தில் அர்ப்பணிப்புள்ளவர்களாயிருப்பதில்லை. அப்போது நாமும் அநீதியுள்ளவர்களாயிருந்து, உக்கிராணத்துவத்திலிருந்து வெளியேற்றப்பட்ட இந்த நேர்மையற்ற உக்கிராணக்காரனைப் போல் தான் இருப்போம். தேவன் நம் இருதயங்களை அறிவார் ( லூக்கா 16:15 ). ஒரு எழுத்தாளர் இவ்விதமாகச் சொன்னார். இயேசு கிறிஸ்து நம்மிடம் முழுமனதோடு கூடிய அர்ப்பணிப்பை எதிர்பார்க்கிறார் என்று. அப்படியானால், நீங்கள் உண்மையாகவே யாருக்கு சேவை செய்கிறீர்கள்? தேவனுக்கா அல்லது உலகத்துக்கா? சிந்தித்துப் பார்ப்போம்.

## பிள்ளைகளின் விசுவாசத்திற்கான ஏழு வழிகள்

1. உங்கள் தனிப்பட்ட விசுவாசம் அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும்படி நடந்து கொள்ளுங்கள்.
2. அவர்களோடு சாதாரணமாகப் பேசும்போது கூட விசுவாசத்தை உட்புகுத்துங்கள்
3. உங்கள் விசுவாசத்தைத் தரம் பிரிக்காதீர்கள். அதாவது, இதற்கு அது ஆகும், இதற்கு அது ஆகாது என்றெல்லாம்.
4. பிள்ளைகளுக்காக நீங்கள் ஜெபிப்பதோடு, அவர்களோடு சேர்ந்தும் ஜெபம் செய்யுங்கள்.
5. அவர்களோடு அன்போடு பேசி, கண்ணியத்தோடு நடந்து கொள்ளுங்கள்.
6. ஆண்டவரின் வேலையை அவர்களோடு இணைந்து செய்யுங்கள்.
7. எல்லாவற்றிலும் உண்மையாய் நடந்து கொள்ளுங்கள்.

# முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுவதென்பது உங்களுக்கும் எனக்கும் இன்று எப்படி பொருள்படுகிறது?

## What does seek ye first... Mean?

Louis Rushmore

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்று சொன்னார் (மத்தேயு 6:33).

உலகம் முழுவதிலும் பெரும்பாலான மக்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளின் ஈர்ப்பால் ஈர்க்கப்பட்டு அதினால் சிறைபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் அவர்கள் விளையாட்டோடு தங்களை முழுமையாக ஈடுபடுத்தி அதன் வெற்றி தோல்விகளில் உணர்வுப் பூர்வமாகக் கலந்து கொள்கிறார்கள்.

எந்தக் காலக்கட்டத்திலும் ஓட்டப்பந்தயங்கள் பிரபலமான விளையாட்டுப் போட்டிகளாகவே இருந்து வருகின்றன. மனிதர்களை உள்ளடக்கிய போட்டியாக இருந்தாலும் சரி, மிருகங்கள் அல்லது வாகனங்களை உள்ளடக்கிய போட்டியாக இருந்தாலும் சரி, போட்டியில் ஈடுபடும் வீரர்கள் முழு மூச்சில் வெற்றிபெறத் துடிப்பதால் அங்கே பரவசத்திற்குப் பஞ்சமே இருக்காது. ஆனால், விளையாட்டுப் போட்டியில் பரவசத்தின் உச்சம், வீரர்கள் ஒருவரையொருவர் முந்த முயற்சிக்கும் அந்தக் கடைசி நேரந்தான்.

புதிய ஏற்பாடு அவ்வப்போது ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனுடைய ஆவிக்குரிய சாகசத்தை ஒரு பந்தயமாக அல்லது ஒரு போட்டியாக விவரிக்கிறது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட மற்ற எழுத்தாளர்களை விட அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவுக்காக அர்ப்பணிப்போடு வாழும் ஒரு சீஷனுடைய வாழ்க்கைக்கும் ஒரு போட்டியில் விளையாடும் வீரனுடைய வாழ்க்கைக்கும் உள்ள ஒப்புமைகளை விவரித்திருக்கிறார். உதாரணமாக, அவர் I கொரிந்தியர் 9:24 ல் பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆனாலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்

தக்கதாக ஓடுங்கள் என்று எழுதினார். பவுல் இதே விதமாக பிரிப்பியர் 2:14 ல் நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள் என்று எழுதுகிறார்.

ஓர் ஓட்டப்பந்தயத்தில் ஒரு வீரன் பந்தயத்தில் வெற்றி பெறுவதற்கு என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ, என்னென்ன செயல்களைச் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் விசுவாச ஓட்டத்தில் ஒரு கிறிஸ்தவன் வெற்றிபெற கடைபிடிக்க வேண்டும். ஆனால், இங்கே நமது பாடம் தனிப்பட்ட கிறிஸ்தவ ஓட்டத்தில் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய காரியங்களை மையமாகப் பேசுகிறது. ஓட்டப்பந்தயத்திற்கும் தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கும் உள்ள ஒப்பீட்டை இன்னும் அதிகப்படுத்தி பெரிய அளவில் அதை கிறிஸ்தவத்தோடு பொருத்திப் பார்க்க முடியுமா? நாம் ஜாக்கிரதையாக இதைச் செய்தால் வேதவசனங்களுக்கு எவ்வித பாதிப்புமின்றி இதைச் செய்து முடிக்க முடியும்.

உலகிலுள்ள போட்டிகளில் பெரும்பாலானவைகள் ஒருவருக்கெதிராக மற்றொருவர் போட்டியிடும் தனியாள் அல்லது தனிநபர் போட்டிகளாகத் தான் இருக்கின்றன. ஆனாலும், போட்டியாளர்கள் குழுவாக கலந்துகொள்ளும் போட்டிகளும் இருக்கின்றன. இவைகளுள் ஒன்று தொடர் ஓட்டப்பந்தயம் என்றழைக்கப்படும் ( Relay Race ) இந்த Relay Race என்பது 4×100 மீட்டர் ஓட்டப்பந்தயமாகும். இது ஒரு குழுவை உள்ளடக்கிய ஓட்டப்பந்தயமாகும். இதில் முதலில் ஓடுபவர் 100 மீட்டர் தூரத்தை ஓடி முடித்து அடுத்தவரிடம் கொடுப்பார். இப்படியே நாலுபேரும் தங்கள் ஓட்டத்தை முடிக்க வேண்டும். இவ்வகையான ஓட்டப்பந்தயத்தில் வேகத்தை விட விவேகம் தான் அவசியமாயிருக்கிறது. இப்பந்தயத்தில் ஓர் அணி வெற்றி பெற வேண்டுமென்றால் கூட்டுமுயற்சி அவசியமாயிருக்கிறது.

---

## தாவீதின் பாவம் படிப்படியானது

- தாவீது பத்சேபாளை பார்த்தான் (இங்கே பாவம் இல்லை)
- தாவீது தன் இருதயத்தின் இச்சித்தான் (பாவ குற்றம் வந்தது)
- தாவீது அவளைத் தனக்காக எடுத்துக் கொண்டான் (விபச்சார குற்றம்
- தாவீது உரியாவைக் கொலை செய்தான் (கொலைக்குற்றம் நடந்தது).

# நன்றி சொல்லத் தடை செய்பவை

## Obstacles For Thanks Giving

P.C. Philemon Rajah

நன்றி சொல்லவும், நன்றி செய்யவும் கர்த்தருடைய வார்த்தைகள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. 1 தெச. 5:18 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. கொலோ 3:17. வார்த்தையினாலா வது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். எப்பொழுதும், எல்லா சூழ்நிலைகளிலும் நன்றி கூறுங்கள் மற்றும் நன்றி செய்யுங்கள் (In everything give thanks to God) என நம்மை தூண்டுகிறது.

எபே 5:20 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து எபி.13:15 ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.

இந்த உலகில் நாம் நன்றி சொல்லாதவர்களாகவும், நன்றி செய்யாதவர்களாகவும் இருக்கக் காரணங்கள் குவிந்து கிடக்கின்றன. மேலும், நன்றி சொல்ல வேண்டியவை என்ற பட்டியலில் நாமாகவே சிலவற்றை, இதற்கெல்லாமா நன்றி சொல்வது? இதற்கு மட்டும் நன்றி சொன்னால் போதும் என்று பிரித்திருக்கிறோம். எனவே, நன்றி செலுத்த (செய்ய, சொல்ல) நம்மை தடை செய்யும் தடுப்புகளை இந்த பாடத்தின் மூலம் உடைக்க முற்படுவோம்.

## I. சிந்தனையற்ற நிலை (Thoughtlessness)

நாம் உடைக்க வேண்டிய முதல் தடுக்கல் அல்லது தடைக்கல் சிந்தனை யற்ற நிலை ஆகும். சிந்தியுங்கள் மற்றும் நன்றி செய்து விடுங்கள் (Think & Thank).

நாம் சிந்தித்துப் பார்க்க மறப்பதினாலேயே நன்றி செலுத்தவும் மறந்து விடுகிறோம். பரலோக கடவுள் நமக்கு செய்தவைகளை அடிக்கடி சிந்திக்க, எண்ணிப்பார்க்க மறந்துவிடுகிறோம். அதனாலேயே நன்றி செலுத்த மறந்து விடுகிறோம்.

பரலோக தேவன் நம்மீது அன்பும் கரிசனையும் உள்ளவர் என்று எண்ணிப் பார்க்க ( சிந்திக்க ) மறந்துவிடுகிறோம். சங்கீதங்களில் நிறைய சங்கீதங்கள், நன்றி பாடல்களே! வாசியுங்கள். சங் 30:1-12. வசனம் 10-12ல், கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன் ; கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன். என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப் பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உன்மை என்றென்றைக்கும் துதிப்பேன்.

மேலும் வாசியுங்கள் சங் 103:1-5 மற்றும் சங் 106:13. தாவீது ஒவ்வொன் றாக எண்ணி, எண்ணி கணக்கில் எடுத்துக் கொண்டு நன்றி செலுத்துகிறார்.

நாம் எந்த வழிகளில் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம்? உணவு, உடை, உறவு, மன்னிப்பு, மீட்பு சத்தியத்தை ( பைபிள் ) பற்றிய அறிவு, பரலோக கடவு ளின் கிருபை, இரக்கங்கள் இன்னும் பட்டியல் பல பக்கங்களுக்கு நீளும் என்ப தில் ஆச்சரியமில்லை. ஆகையால் அவைகளை ஒவ்வொன்றாக எண்ணி, எண்ணி கணக்கில் எடுத்துக்கொண்டு தேவனுக்கு நன்றி செலுத்தக் கடவோம்.

அநேக வேளைகளில் பெரிய காரியங்களுக்கு நன்றி கூறும் நாம் சிறிய காரியங்களையும் எண்ணி நன்றி கூறவேண்டும். ஒரு மனநல மருத்து வமனையில், 15 வருடம் வேலைப்பார்த்த வேன் ஓட்டுனரிடம் ஒருவர் கேட்டாராம்.

கடவுள் உனக்கு தந்த ஆரோக்கியமான மனத்திற்காக (புத்திக்காக) என்றைக் காவது நன்றி சொன்னாயா? ' என்று. ஆம்! நிறைய வேலைகளில் இவரைப் போலவே நாம் நன்றி செலுத்த வேண்டிய காரியங்களை சிந்திக்க மறந்து விடுகிறோம்.

**II. விசுவாசமில்லாமை** (Faithlessness)

நன்றி செலுத்த தடுக்கும் இரண்டாவது தடைக்கல் விசுவாசிக்க மறுத்தல் அல்லது விசுவாசமில்லாத தன்மை ஆகும். ரோமர் 1:20-21 " அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. தேவன் கொடுத்த நன்மையானவைகளை அனுபவித்தாலும், அதை தேவன் தான் கொடுத்தது என்று ஏற்க மறுப்பதும், அல்லது அதை நம்ப மறுப்பதும் நன்றி செலுத்த மிகப்பெரிய தடைக்கல் ஆகும். ஆயினும் பரலோக கடவுள் எல்லா வரமும் தருபவராக இருக்கிறார்.

யாக். 1:17 " நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை கடவுளுக்கு நன்றி கூற மறுப்பதும், அவரிடம் இருந்து பெற்றதை விசுவாசியாமலிருப்பதும் ஒன்றுதான்.

**III. திருப்தியற்ற நிலை** (Discontentment)

நன்றி செலுத்த தடுக்கும் மூன்றாவது தடைக்கல் அதிருப்தி (திருப்தியற்ற) நிலை அல்லது மனநிறைவற்ற தன்மை ஆகும். ஆகையால் நமது மனநிறைவு நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பதற்கு நன்றி செலுத்தும் முன்பாக நாம் திருப்தியை அல்லது மனநிறைவை அபிவிருத்தி செய்யும், அதை நமக்கு நாமே உருவாக்கிக்கொள்ளவும் வேண்டும்.

பிலி.4:11-12 " என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை. ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன் "

வேத வசனங்கள் நமது மனநிறைவை வளர்க்க நம்மை ஊக்கப்படுத்துகின்றன. 1 தீமோ. 6:6-8 போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.

இன்றைய நாட்களில் அநேகர் நன்றி சொல்ல மனதில்லாதிருக்கும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அநேகர் நன்றி செலுத்த நினைக்கின்றனர்,

ஆனால் மனநிறைவு அல்லது திருப்தியற்றிருக்கின்றனர். நன்றி என்று சொல்வோரில் அநேகருக்கும், இன்னும் அதிகம் கிடைக்குமா? கிடைத்தால், நல்லது என்ற மனநிலையே உள்ளது.

நன்றி என்று கூறினாலும், வேறொன்று கிடைத்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமே, என்ற மனநிலையில் இருக்கிறார்கள். ஒரு மோட்ச பிரயாணிக்கு இருக்கும் மனநிறைவை நாம் கொண்டிருக்க வேண்டும். விவசாயிகள் அறுப்பின் நாட்களுக்கு பிறகு நன்றி சொல்வார்களே தவிர, இந்த பயிரை விளைவிக்கப்பட்ட பாடுகளை எல்லாம் சுத்தமாக மறந்தேவிடுவர். விளைந்தவற்றை மட்டுமே எண்ணி மனநிறைவு கொள்வார்கள்.

**IV. சுயநலம்** (Selfishness)

நன்றி செலுத்த நம்மை தடுக்கும் நான்காவது தடைக்கல் ' சுயநலம் ' ஆகும். மத் 18:33-35 " நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.

பல கோடி ரூபாய் கடனை அடைக்க பல ஆண்டுகள் உழைத்தாலும் சிரமப்பட வேண்டியவனை, அவன் முதலாளி மன்னித்து வாழ வைத்தான். ஆனால் மன்னிப்புப் பெற்றவன், பெற்ற நன்மையை சிந்தித்துப் பார்த்து நன்றி நிறை மனம் இல்லாதவனாயிருந்தபடியால், அவனிடம் சில நூறு கடன் பெற்றவனை சில ஆண்டுகள் தண்டனை பெற்றே ஆகவேண்டி சிறையில் போடுகிறான். காரணம், அவனது சுயநலம்.

இன்றைக்கும் கொலைகாரர்களும், வட்டிக்கு பணம் கொடுப்பதை தொழிலாக செய்யும் சில கிறிஸ்தவர்களும், தேவனுடைய மிகப்பெரிய தண்டனை நமக்குண்டு என்ற எண்ணமற்றுபோய், என் பணம், நான் பிழைக்க வேண்டுமே, தனக்கு மிஞ்சினது தான் தானமும் தருமமும் என்ற மனப்போக்குடனே வாழ்வதற்கு காரணம் சுயநலம் ஆகும்.

செய்ய வேண்டிய நன்றியை ஏன் செய்ய வேண்டும்? என்று எண்ணிப் பார்க்க மறக்கின்ற இவர்கள் சுயநலமானவர்களே! அப்படிப்பட்ட சுயநல மிக்கவர்கள் சொல்வது ஏன் நன்றி சொல்ல வேண்டும்? நான் கஷ்டப்பட்டு,

பாடுபட்டு சம்பாதித்தது இதற்குப்போய் கடவுளுக்கோ, மற்றவர்களுக்கோ ஏன் நன்றி சொல்ல வேண்டும்? என்கிறார்கள் அல்லது அந்த எண்ண முடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சுயநலமிக்கவர்களே!

சிலர் மேலே சொன்னபடி நினைக்கவில்லை என்றாலும், நன்றி சொல்லும் படியான நினைப்பே வருவதேயில்லை. மேலும் சிலர், இதுக்கெல்லாமா? சொந்தப் பந்தங்களிடமா? நெருங்கியவர்களிடமுமா? நன்றி சொல்வது என்று பேசுவது தவறாகும். இயேசு தன்னிடம் நன்றி சொல்ல வந்தவனிடம், மற்ற 9 பேர் எங்கே ? என்று கேட்டார்.

அப்படியானால் நாம் நன்றி சொல்ல வேண்டுமென கடவுள் எதிர்பார்க்கிறார் என்பதை நினைவில் கொள்வோம்.

எல்லாவற்றிலும் நன்றியறிதல் உள்ளவர்களாய் இருங்கள் என்று வேதம் கூறுகிறது. சிலர் கூறுவர் முழுவதும் வரவில்லையே, வரவேண்டியது எல்லாம் வரவில்லையே பிறகு ஏன் நன்றி சொல்ல வேண்டும்? என்று. இன்னும் சிலர், எனக்கு யார் உதவினார்கள்? நான் ஏன் உதவி செய்யனும்? நான் உதவியும் செய்யவில்லை, உபத்திரவமும் பண்ணவில்லை என்று நினைப் பார்கள் இதுவெல்லாம் சுயநலமேயாகும்.

**இறுதியாக...**

நாம் தேவனுக்கு நன்றி செலுத்த தடைகளாக இருப்வைகள் என்ன?

1. சிந்தனையற்ற தன்மையா?
2. விசுவாசமற்ற தன்மையா?
3. திருப்தியற்ற (மனநிறைவற்ற) தன்மையா?
4. சுயநலமா?

## இவைகளுக்கு இந்த நாளை ஒப்புவிக்கிறேன்

அன்பு, மகிழ்ச்சி, சமுதாயம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இவைகளுக்கு இந்த நாளை ஒப்புவிக்கிறேன். நான் இதன்படி நடந்து கொண்டால், நன்றி சொல்லுவேன். ஒருவேளை நடக்க முடியாவிட்டால், கிருபையைத் தேடுவேன். இந்த நாள் முடியும் போது என் படுக்கையில் தேவனை நோக்கிப் பார்ப்பேன் நான் தேவனையே தெரிந்து கொள்ளுகிறேன்.

# மரித்தோருக்கும், ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவர்

# He is the lord to Both the Dead and the Living

B. Arjunan

மரித்து விட்டால் அவ்வளவுதான் அவர்களுடைய கதை முடிந்துவிட்டது என்று பலர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். உண்மை அதுவல்ல. மரித்தபின் ஒரு அருமையான நித்திய வாழ்க்கை ஆரம்பமாகிறது என்றே சொல்லவேண்டும். அதுவும் தேவனோடு வாழும் பாக்கியம். இயேசு மரித்தோருக்கும் ஆண்டவரா யிருக்கிறார். சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார் என்று ரோம.14 :9 – ல் வாசிக்கிறோம். மரித்துப்போன ஒருவனால் பேசமுடியாது, நடக்கமுடியாது, அவன் மீண்டும் பிழைப்பதில்லை. அப்படிப்பட்டவன்மேல் ஆண்டவர் இயேசு அதிகாரமுடையவராயிருக்கிறார். கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அவர்களுடைய சரீரம் எழுப்பப்படும். ஒரு விதையை விதைக்கும்போது அது எப்படி முளைத்து துளிர்விடுகிறதோ, அதைப்போல இயேசுவின் வருகையின்போது மரித்தோர் அழிவில்லாத வர்களாய் எழுந்திருப்பார்கள். அவர்களுடைய வருகையின்போது இது நடைபெறும். பலவருடங்களாக கர்த்தருக்குள்ளாக மரித்தவர்கள் இருப்பார்கள். அவர்களுடைய எண்ணிக்கையை நாம் அறியோம். ஆனால் ஒரு திரளான கூட்டம் அவருடைய வருகையில் எழுப்பப்படும் என காண்கிறோம். ஆண்டவர் இயேசுவை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.

ஆண்டவர் இயேசு உயிரோடிருந்த நாட்களில் ஒருமுறை நான்கு நாட்களுக்கு முன்னே மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பினார். லாசருவே வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி; இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார் (யோவா.11:43,44)

இதைப் பார்த்த ஜனங்கள் இயேசுவின் மீது விசுவாசம் வைக்க ஆரம்பித்தனர். மரித்தோருக்கும் அவர் ஆண்டவராயிருக்கிறபடியால் மரித்து நான்கு நாட்கள் ஆன லாசருவை பெயர் சொல்லி அழைத்தவுடன். மரித்த லாசருவின் உயிர் அவனுக்குள் திரும்பவந்தது, அவன் எழுந்து வெளியே வந்தான். நீங்களும் நானும் மரித்த சரீரத்தைப்பார்த்து வெளியே வா என்று சொன்னால் அது வெளியே வந்துவிடுமா? நமக்கும் அந்த விசுவாசம் இருந்தால் வந்துவிடும் என்று சிலர் சொல்லுவார்கள். அன்பானவர்களே, ஆண்டவருக்கு அந்த அதிகாரம் பிதாவாகிய தேவனால் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் அவர் மரித்தோருக்கும் ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவராயிருக்கிறார். இந்த அதிகாரத்தை மோசேயோ அல்லது யோவான்ஸ்நானகனோ பெற்றுக்கொள்ளவில்லை. ஆண்டவர் ஒருவருக்கு மட்டுமே இந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் கொடுத்திருந்தார். இயேசுவோடு சிலுவைகளில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு கள்வன் இயேசுவை நோக்கி உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் ( லூக்.23:43 ). சிலுவையில் ஜீவனை விட்ட இந்த கள்வன் இயேசுவோடு பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். அவன் ஒரு குற்றவாளி என்று அந்த அரசு அவனை சிலுவையில் இயேசுவோடு அறைந்தது. ஆனால் அந்த ஆத்துமாவுக்கு அதிகாரியான இயேசு அவனுடைய விசுவாசத்தையும், மனந்திரும்பிய அவனுடைய அறிக்கையையும் கேட்டு, அவனை நோக்கி; இன்று என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்றார்.

பேதுரு சொல்லும்போது; கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரேதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்

பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள் ( 1 பேது.3:18-20 ). நோவா காலத்தில் கீழ்ப்படியாமற்போன அந்த ஆவிகளுக்குப் போய் ஆண்டவர் இயேசு பிரசங்கித்தார். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் இரட்சிக் கப்படவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆகையால் அவர் காவலிலுள்ள ஆவிகளுக்கும் பிரசங்கித்தார் என காண்கிறோம். பேதுரு இன்னும் சற்றுவிளக்கமாக எடுத்துச் சொல்லுகிறார். எப்படியென்றால்; இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர் முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக் கப்பட்டிருந்தும், தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக அவர்களுக் கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்கிறார் ( 1பேது.4:6 ). ஆகையால் இக்காலத்தில் பாவத்தில் வாழ்ந்து மரிக்கிறவர்களுக்கும் மரித்தபின்பு நியாயத்தீர்ப்புக்கு நம்முடைய ஆத்துமா காத்திருக்கும். அவர் இப்பொழுது நம்முடைய இரட்சகராயிருக்கிறார். நாம் மரித்தபின்பு நமக்கு நியாயாதிபதியாக வீற்றிருப்பார் என்பதை மறந்துவிடவேண்டாம். ஆண்டவர் உயிர்த்தெழுந் தபோது; ஒரு மாபெரும் சம்பவம் நடைபெற்றது. அது என்னவென்றால் அவர் மரித்தோருக்கும் ஆண்டவர் என்பதை நிரூபிக்க; கல்லறைகளும் திறந்தது, நித்தி ரையடைந்திருந்த அநேக பரிசுத்த வான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்தபின்பு. இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள் (மத். 27:52, 53 ). இயேசு சொல்கிறார்; மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.1:18). இந்த திறவுகோல்களை பிதாவாகிய தேவன் அவருக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால் மரித்தோரை அவர் எழுப்ப வல்லவராயிருக்கிறார். மரித்தோர் யாவரும் அவருடைய சத்தம் கேட்பார்கள்.

இயேசு ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவர் என காண்கிறோம். ஆகையால் பேதுரு சொல்லும்போது: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம். நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமார னாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான் (யோவா.6:68,69). அவரிடத்தில் நித்திய ஜீவவசனங்கள் இருக்கிற படியால் நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று சொன்னான். அவர் சதா காலங்களிலும் ஜீவிக்கிறவராகவும் ஜீவனுள்ளவைகளுக்கெல்லாம் ஆகாரம் கொடுக்கிறவராகையால் ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவராயிருக்கிறார். பேதுரு

தம்முடைய முதல் பிரசங்கத்தில் இயேசுவைக் குறித்துப்போதிக்கும்போது; நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான் (அப்.2:36). இயேசு தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே அவர் மீது யூதர்கள் மிகவும் கோபமுள்ளவர்களாயிருந் தார்கள். ஆகையால் அவரை சிலுவையில் அறையும்படியாக ஒப்புக் கொடுத்தார்கள். அவர்களை இரட்சிக்கும்படியாக இயேசு யூத கோத் திரத்தில் பிறந்தார் என்ற செய்தியை அறிந்த அந்த மக்கள் அறிவில்லாமல் அவரை ஒப்புக்கொடுத்தார்கள். எனவே பேதுரு நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறிந்துகொள்ளுங்கள் என்று பிரசங்கித்தார். யாரை இந்த ஜனங்கள் புறம்பாக்கிப்போட்டார்களோ அவருடைய நாமத்தையே தேவன் உயர்த்தினார். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்று பேதுரு பிரசங்கிக்கத்தொடங்கினான் (அப்.4:12). ஆகையால் குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் என்று வேதம் சொல்லுகிறது ( 1 யோவா.5:12 ). நீங்கள் தேவனுடைய குமாரனை சொந்த இரட்சகராக கொண்டவராயிருக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா யிராவிட்டால் உங்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. உலகத்தில் உள்ள ஒரு சாதாரண நபரைப்போல இருப்பீர்கள். நீங்கள் அவருடையவர்களாக மாறும்போது ஜீவனுள்ளவர்களாக இருப்பீர்கள். அவரை ஏற்றுக் கொள்ளாதவராயிருப்பீர்களானால் வேதம் சொல்லுகிறது நீங்கள் ஜீவன் இல்லாதவர்கள் என்று. நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள் என்பதை இந்த வசனத்தை வைத்து உங்களை நீங்களே தற்சோதனை செய்துபாருங்கள்.

### நாம் பிழைத்தாலும் மரித்தாலும் யாருடையவர்களாயிருக்கிறோம்?

நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்; நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம் என பவுல் நமக்கு தெளிவுபடுத்துகிறார் ( ரோம.14:8 ). பவுல் இந்த விதமான நம்பிக்கையை பெற்றவராயிருந்தார். ஆகை யால் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்றார். மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்கள். உயிரோடிருந்தாலும் நாம்

கர்த்தருடையவர்கள். சிலருக்கு மரண பயம் இருக்கிறது. ஐயோ மரித்துவிட்டால் என்ன நடக்குமோ என்ற அச்சம். மரித்தபின்பு அவர்கள் இளைப்பாறுதலுக்குள்ளாக பிரவேசிப்பார்கள். அதன்பின்பு கர்த்தருடைய வருகையின் போது அவர்கள் ஜீவனுள்ளவர்களாக எழுப்பப்படுவார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படும். பின்பு நித்திய நித்தியமாக தேவனோடு என்றென்றும் வாழும் பாக்கியத்தை அடைவார்கள். ஆகையால் அன்பானவர்களே, நாம் பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம் என்ற சந்தோஷத்துடனே ஒவ்வொருநாளும் வாழுங்கள். இந்த பாக்கியம் கர்த்தருடையவர்களுக்கு மட்டுமே என காண்கிறோம். இந்த பாக்கியத்தை நீங்களும் பெற்றுக்கொள்ள உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## கணவன்மார்களுக்கான பத்து கட்டளைகள்

- ★ மனைவியோடு விவேகத்துடன் வாழ்ந்து, மதித்து நடந்து கனப்படுத்துங்கள் ( I பேதுரு.3:7)
- ★ உங்களின் உச்சபட்ச இசைவு, தேவனுக்கு அடுத்தபடியாக மனைவியிடம் இருக்க வேண்டும். உறவுகளும், நண்பர்களும் அடுத்த கட்டம்தான் (ஆதி.2:24)
- ★ மனைவி உங்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும், மதிப்புள்ளவள் என்பதையும் அடிக்கடி சொல்லுங்கள் (பிலி. 2:3; நீதி.31:10–11)
- ★ ஆரம்பத்தில் மனைவியின் அன்பை எப்படி வென்றெடுத்தீர்களோ அதேவிதமாய் தொடர்ந்து நடந்து கொள்ளப் பாருங்கள் (உன்.5:10–16)
- ★ மனைவியின் ஆதரவோடு குடும்பத்தை ஒழுங்குபடுத்துவதில் உங்களை ஈடுபடுத்துங்கள் (எபே.6:4)
- ★ உங்களால் முடிகின்ற ஒவ்வொரு சின்ன காரியத்தையும் மனைவிக்குச் செய்யுங்கள் (மத்.5:37)
- ★ உங்கள் கண்கள் எப்பொழுதும் உங்கள் மனைவியின் மேல் இருக்கட்டும். அயலான் மனைவியின் மீதல்ல. (நீதி. 5:15–20; யோபு 31:1; எரே. 5:8).
- ★ மனைவியின் கண்ணோட்டத்தையும் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகுங்கள் (ஆதி. 21:12).
- ★ ஒவ்வொரு நாளிலும் மனைவியின் மீது அன்பு காட்டுங்கள் (உன். 8:1).
- ★ மனைவியிடம் அதிக கஞ்சத்தனமாக நடந்து கொள்ளாதீர்கள். (எஸ்தர். 5:3).

# கேடு சூழ்ந்த குடும்பம்

## Family that Dwelts in Wickedness of Evils

E. Z. Selvanayagam

சமுதாயம் என்னும் மாளிகைக்கு குடும்பமே அஸ்திபாரம். அவைகள் கூட்டமாக சமுதாயத்துக்கு வலு சேர்க்கிறது. ஆனால், எல்லாக் குடும்பங்களுமே சமுதாயத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்து விடுவதில்லை. சில குடும்பங்கள் தங்களுக்கும் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குமே அவமானத்தைத் தேடித் தந்து சமுதாயத்துக்குக் கேடு விளைவிக்கிறது. இப்படிப்பட்ட ஒரு குடும்பத்தின் அவல நிலையை மாற்கு தம் நூலில், படம் பிடித்துக் காட்டுகிறார். தயவுசெய்து மாற்கு 6:17-28 வரையுள்ள வசனப்பகுதியை வாசித்து தியானியுங்கள்.

இங்கே குறிக்கப்பட்டிருக்கிற ஏரோது, ஏரோது அந்திப்பா என்பவன் ஆகும். இவன், ரோமர் காலத்தில் எப்படியோ ஆட்சியைப் பிடித்து தக்க வைத்துக் கொண்ட பெரிய ஏரோது என்று வர்ணிக்கப்படும் இதுமேயா நாட்டவனின் மகன்களில் ஒருவன். இந்த கொலைகாரக் குடும்பம் கொன்று குவித்த உயிர்களுக்குக் கணக்கேயில்லை. இந்தப் பெரிய ஏரோது என்னும் கொடியவன் தன் சொந்த மனைவி, இரண்டு மகன்கள் ஆகியோருடைய இரத்தத்தைக் குடித்தவன். இரண்டு வயதுக்குட்பட்ட ஆண்குழந்தைகளையெல்லாம் கொல்லும்படி உத்தரவு பிறப்பித்தவன் இந்த சண்டாளன்தான் (மத் 2:16). இந்த கொடியவனின் வாரிசாகிய அந்திப்பா தன்னுடைய சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளை அபகரித்துத் தன் மனைவியாக்கிக் கொண்டான். பிலிப்பு மூலமாக இவளுக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. அதன் பெயர் சலோமி என்று வரலாறு குறிப்பிடுகிறது. ஒழுக்கக் கேட்டால் உதயமான இந்தக் குடும்பத்தைப் பற்றி வேதாகமம் கூறுவதைக் கவனிப்போம்.

**1. இது ஒரு சட்ட விரோதமான திருமணம்:**

( வ.17,18 ) பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி இது ஒரு அசுத்தமான உறவு. (லேவி 20:21). புதிய ஏற்பாடு இதை விபச்சாரம் என்று கூறுகிறது. (ரோமர் 7:3). ஆகவே, யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய ஊழியக்காரன் என்ற

முறையில் அது சட்ட விரோதமானது என்று சுட்டிக் காட்டினார் ( மத் 14:4) ஒரு நாட்டை ஆளும் அரசன் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகச் செயல்பட்டால், அவன் நீதிபரிபாலனம் செய்வது எப்படி? இன்றைக்கு சமுதாயமும், நாமும் சீரழிந்து போய்க்கொண்டிருப்பதற்குத் தலைவர்களும், அரசோச்சுபவர்களும் செய்கிற முறைகேடுகளே காரணம். அதனால் மக்கள் ஒழுக்க நெறிகளுக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. கற்பு, நெறி என்பது பழங்கதை யாகிவிட்டது. அவர் மற்றவர்களை விட என் உணர்வுகளைச் சிறந்த முறையில் புரிந்து கொள்கிறார், என்முதல் திருமணம் தவறுதலாக நடைபெற்றுவிட்டது என்பதை இப்பொழுது தான் புரிந்து கொண்டேன்.மகிழ்ச்சி தரும் வகையில் வாழ எங்களுக்கும் உரிமை உண்டு என்றெல்லாம் சமாதானம் கூறி தங்கள் ஒழுக்கக் கேடுகளுக்கு நியாயம் கற்பிக்கின்றனர். இப்படிப் பெரும்பான்மையோர் நடந்து கொண்டாலும் தேவனுடைய நீதி இதற்கெல்லாம் வளைந்து கொடுக்காது.

**உ. வக்கிரப் புத்தியுடையவர்:**

(வ.19,20) சில பேரிடம் அவர்கள் செய்வது தவறு என்று சுட்டிக் காட்டினால் மனம் வருந்தி திருந்தி நடக்க முயற்சி செய்வார்கள். மற்ற சிலரோ மூர்க்க வெறிகொண்டு புத்தி சொன்னவர்களின் மீது சீறிப் பாய்வார்கள். தாவீது பத்சேபாளிடம் முறை கேடாக நடந்து கொண்டதை நாத்தான் தீர்க்கதரிசி கண்டித்தார். அவர் துக்கப்பட்டு தன் தவறுக்காக எவ்வளவு வருந்தினார் என்பதை சங்கீதம் 51 ஐ வாசித்து அறிந்து கொள்ள முடியும். ஏரோதியாளோ, இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவள். தன்னுடைய வாழ்க்கையை விமர்சிக்கிற யோவான் ஸ்நானகனை ஒழித்துக் கட்டத் துடிக்கிறாள். ஏரோது அவளுக்கு இடங்கொடுக்கவில்லை. ஏனெனில், ஸ்நானகனுடைய பரிசுத்தத்தையும், நீதியையும் குறித்து அவனுக்குப் பயம் உண்டு (வ.20).

யோவான் ஸ்நானகன் ஏரோதியாளுக்கு ஓர் அநியாயமும் செய்ய வில்லை. நியாயத்தைத்தான் எடுத்துச் சொன்னார். அவளுடைய உள்ளத்திலும், இல்லத் திலும் தேவனுடைய ஆலோசனைகளுக்கும், நீதிக்கும் கொஞ்சம்கூட இடம் கிடையாது. ஆகையால், அவள் எரிச்சல் அடைந்தாள். ஆம், சகோதரர்களே, இன்றைக்கு அநேகருடைய மனப்போக்கு இதுதான். கர்த்தருடைய ஆலோச னைகளுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பது அவசியம் என்ற உணர்வு மங்கி மறைந்து கொண்டிருக்கிறது. அதனால் அவர்கள் ஆரோக்கி யமான உபதேசத்தை விட தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதனைகளைப் போதிக்கும் கள்ளப் போதகருடைய கட்டுக் கதைகளுக்கு செவி கொடுத்து அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்; உண்மைக்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

அநேக குடும்பங்களில் சத்திய வேதத்தை விட ஆபாச நூல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உலக உல்லாசத்திற்கு முதலிடம், ஆண்

டவருடைய அருளுரைகளுக்கு அலட்சியம். நல்லொழுக்கப் பயிற்சிகளைவிட நடனக் கலைக்கு முக்கியத்துவம். பாவத்தைக் கண்டிப்பவர்கள் கண்டனத்துக் குள்ளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஓரம் கட்டி ஒழித்துக் கட்ட ஒன்றுபடு கிறார்கள். இத்தகைய இழிந்த வாழ்க்கை நெறிகளின் மீது நாட்டம் கொள்ளும் எந்த சமுதாயமும், எந்த நாடும் உருப்படும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

## 3. சிற்றின்பக் கேளிக்கைகளில் ஈடுபாடு :

(வ 21,22) இந்த ஏரோதுவின் பிறந்த நாள் உலக வரலாற்றிலேயே மிகவும் பயங்கரமான விளைவுகளை உண்டாக்கிய விழா என்று சொன்னால் மிகையாகாது. அப்போஸ்தலன் பேதுரு கோடிட்டுக் காட்டியுள்ள சகல தீய காரியங்களும், காம விகாரம், துர்இச்சை, மதுபான வெறி, களியாட்டு போன்ற அனைத்தும் அங்கே இடம் பெற்றிருந்தன ( I பேது 4:3 ). இதை துன்மார்க்க உளையென்றும், இதிலே சிக்கிக் கொள்ள விரும்பாத கிறிஸ்தவர்களை உலகம் ஏளனம் செய்யும் என்றும் எச்சரிக்கிறார். (I பேது 4:4).

ஏரோதியாளின் மகள் ( சலோமி ) ஆடிய நடனத்தால் இரண்டு பெரும் புள்ளிகள் தங்கள் தலைகளை இழந்தனர். முதலாவது, ஏரோது மன்னனின் தலை. அதாவது, சிற்றின்ப கேளிக்கையும், மதுவும் தந்த மயக்கத்தால் புத்தியையும் நிதானத்தையும் இழந்தான் ஏரோது. அதன் விளைவு, தான் மதித்து நேசித்த யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கொய்து கொண்டு வர உத்தரவு பிறப்பித்தான். ஆம் நண்பர்களே, சிற்றின்பக் களியாட்டுகளும் மதுவும் எத்தகைய தீமையான கேடுகளைக் கொண்டு வரும் என்பதை எண்ணிப் பாருங்கள். சலோமியின் அன்பும் பண்பும் அல்ல, அவள் ஆட்டமும் அங்க அசைவுகளுமே அவனை மதியிழக்கச் செய்தன. அந்த நடனத்தை ரசித்து மகிழ்ந்த அத்தனை ஆண்களும் அவனைப் போலவும் அவனை விட அதிகமாகவும் நிதானமிழந்து காமம் தலைக்கேறிய நிலையில் தவித்திருப்பார்கள் என்பதற்குச் சந்தேகம் உண்டா?

எத்தனை கிறிஸ்தவக் குடும்பங்களில் இவ்விதமான ஆட்டங்களும், கூத்துகளும் வரவேற்கப்படுகின்றன. எத்தனை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இவைகளை கற்றுத்தர வேண்டும் என்று விரும்பி உற்சாகப் படுத்திப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்! பெற்றோர்களே, அவர்கள் உங்க ளுக்கு மகளாக சிறுமியாக இருக்கலாம். மற்ற ஆண்களுக்கு .....? வேண்டாம் இந்த விஷ விளையாட்டு. புத்தியைத் தடுமாறச் செய்யும் வழியை அசட்டை செய்ய இடம் கொடுக்காதிருப்போமாக! உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை என்று யோவான் எச்சரித்திருப்பதைச் சிந்தித்துப்

பாருங்கள். (யோவான் 2:15) சின்னப்பிள்ளை தானே என்று நீங்கள் நினைக்கலாம். அப்பிஞ்சு உள்ளங்களில் நீங்கள் விதைக்கிற விஷவிதை வளர்ந்து மரமாகி நிற்கும்போது நீங்கள் கதறி அழுவீர்கள். ஐயோ, என் மகன் இப்படித் தகாத வழியில் சென்று கொண்டிருக்கிறானே, ஐயோ, என் அருமை மகளுடைய போக்கு என் குடும்ப கௌரவத்தை நாற்றமெடுக்கச் செய்துவிட்டதே என்று புலம்புவீர்கள். அது காலம் கடந்த கதறல் - பயன்தராது, ஆகவே, பெற்றோர்களே, உஷார்.

### 4. ஒரு நீதிமான் தலையை விலை பேசிய பரிசு ( வ.22-23 )

இப்படி ஒரு கொலை பாதக ஆசையை நிறைவேற்றும்படி அவள் கேட்பாள் என்று ஏரோது நினைக்கவேயில்லை. அவன் திகிலடைந்தான். ஆனாலும், முடியாது என்று சொல்ல இயலாத சூழ்நிலை. கௌரவப் பிரச்சனை. அவள் வேண்டுகோளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. சகோதரிகளே, அவசரப்பட்டு, சிந்திக்காமல் வாக்குறுதிகளை அள்ளி வீசுவது எவ்வளவு ஆபத்தானது என்பதைப் பாருங்கள். ஏரோது மன்னனின் சிந்தையில்லாத வாக்குறுதியில் ஒரு நீதிமானின் தலை கொய்யப்பட்டது எவ்வளவு கொடுமை! குழந்தைகளை நேசிப்பது, அவர்களுடைய நியாயமான தேவைகளை நிறைவேற்றுவது என்பதும், அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுத்து கெடுப்பதும் இரண்டு வித்தியாசமான காரியங்கள்.

### தூய்மையற்ற பிணைப்பு:

பெற்றோர் - பிள்ளைகள் உறவு மிகவும் நேர்த்தியான அனுபவம். தாயும் - பிள்ளையும் ஒத்த குணமுடையவர்களாய் இருப்பது சிறந்தது. தங்கள் எண்ணங்களையும் அபிலாஷைகளையும் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியாகவும் அந்நியோந்நியமாகவும் இருப்பது நியாயம். பெற்றோர்களும், பிள்ளைகளும் ( அது ஆண் மக்களாயிருந்தாலும், பெண்மக்களாக இருந்தாலும் ) நெருக்கமாக இருக்க வேண்டும். ஆனால் துர்க்குணத்தில் அல்ல. இங்கே ஏரோதியாளும், அவள் மகள் சலோமியும் கொண்டிருந்த நெருக்கம் விஷத் தன்மையுடையது. அது ஒரு பெரிய சதித்திட்டத்தை நிறைவேற்றத் துணைபோன கூட்டு முயற்சி.

ஏரோதியாளின் துன்மார்க்க காரியங்களைக் கண்டித்து உணர்த்த முயன்று ஒரு சான்றோனின் மேல் அவளுக்கு ஏற்பட்டிருந்த குரோத மனப்பான்மையை தீர்த்துக் கொள்ள மகளைப் பயன்படுத்திக் கொண்டாள். இது சற்றும் எதிர்பாராமல் நடந்து விட்ட பயங்கரம். அநேக பெற்றோர்கள் தங்கள் தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தங்களின் பிள்ளைகளின் செல்வாக்குகளையும், பதவிகளையும் பயன்படுத்தி அவர்கள் ஆன்மாவை கஷ்டப்படுத்தி விடுகிறார்கள். என்ன கொடுமை! தாங்கள் செல்வந்தர்கள் ஆகவேண்டும்,

பிரபல்யம் அடைய வேண்டும் என்ற ஆசையில் பிள்ளைகளை நடனப் பயிற்சிக்கும், மற்றும் காமக் களியாட்டுகளைக் கற்றுக் கொள்ளவும் உற்சாகப் படுத்தும் பெற்றோர்கள் அவர்களுடைய வாழ்க்கையை எவ்வாறு பாழ்படுத்தி அவர்களை அழிவின் பாதையில் இட்டுச் செல்லுகின்றனர் என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**ஒரு துயரம் தோய்ந்த வாக்குறுதி நிறைவேற்றம் ( வ.26 - 28 )**

தான் மதித்து நேசிக்கிற ஒரு தேவ மனுஷனுடைய, ஒரு நீதிமானுடைய தலையை வெட்டி அதை ஒரு தட்டில் வைத்துத் தர வேண்டும் என்ற அந்தப் பெண்ணின் கொடிய வேண்டுகோளை ஏரோது மன்னன் கேட்டபோது அவன் துடிதுடித்துப் போயிருப்பான்! பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்து, அந்த வாக்குறுதி நிறைவேறாததால் நன்மையைவிட தீமையே உண்டாகும் என்று தெரிந்தால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் தவிர்ப்பது விவேகமே, அது தவறல்ல. ஆனால், ஏரோது மன்னன் தன் வாக்குறுதியிலிருந்து பின் வாங்க முடியாதபடி அவன் வறட்டுக் கௌரவம் குறுக்கிட்டது. கூடப் பந்தியிலிருந்தவர்களினிமித்தம். (வ.26) அவன் விரும்பாத ஓர் ஆணையை நிறைவேற்ற உத்தரவிட்டான்.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் வாக்குக் கொடுக்கும் போது விழிப்போடு இருங்கள். அதையும் மீறி ஒரு சூழ்நிலையில் நீங்கள் கொடுத்த வாக்குறுதி எதிர்பார்த்ததற்கு விரோதமான விளைவுகளைக் கொண்டு வருகிறது என்று தெரிய வந்தால் அதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தலாம். வாக்குறுதி கொடுத்துவிட்டு இப்பொழுது தயங்குகிறீர்களே, இது நியாயமல்ல என்று வாதாடலாம். ஒருவேளை பிள்ளைகள் ஒரு பயங்கரமான விளைவு களைச் சந்திப்பதை விட வாக்குத்தவறுவது அப்படியொன்றும் மோசமில்லை.

**முடிவுரை**

தேவபயமற்ற ஏரோதின் குடும்ப வரலாற்றை உற்றுக் கவனிப்பீர்களானால், யோவான் ஸ்நானகனின் சிரச்சேதத்துக்குப் பிறகு ஏரோது மன்னனின் எஞ்சிய வாழ்க்கை நிம்மதியற்றதும், சமாதானம் குறைந்தம், பயம் சூழ்ந்ததுமாக இருந் ததைக் கவனிக்கலாம். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் பிரபல்யத்தை ஏரோது கேள்விப்பட்டபொழுது யோவான் ஸ்நானகன் மரித்தோரிலிருந்து எழுந்து வந்துவிட்டான் என்று கூறுகிறான் ( மாற்கு 6:16 ) ஏரோது குடும்பத்தில் நடந்த பயங்கரங்களே தேவபயமற்ற எல்லாக் குடும்பங்களிலும் நடைபெறும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், ஒன்று நிச்சயம், பாவத்தில் வாழ்கிறவன் சாபத் துக்குத் தப்பித்துக் கொள்ளவே முடியாது. ஆகவே, தேவனுக்குப் பயந்து கிறிஸ் துவை மையமாகக் கொண்டு வாழும் வாழ்க்கையை மேற்கொள்ள நாடுங்கள். ✝

# ஆவிக்குரிய காரியங்களில் ஆவலாயிருப்போம்

## Let us be interested in spiritual things

Benny Martin

இன்றைய நாட்களில் வாலிபர்கள் ஆவிக்குய காரியங்களில் அதிக ஈடுபாடு இல்லாமல் இருப்பதை நாம் காணமுடியும். அவர்களுடைய சிந்தனையும், செயலும் சரீரப்பிரகாரமான காரியங்களில் தான் இருக்கிறது. ஆவிக்குய காரியங்களில் ஈடுபடுவதற்கு நெகேமியா நமக்கு நிச்சயமாகவே ஒரு தூண்டு கோலாக இருக்கிறார். நாம் நெகேமியா என்கிற வேதாகம கதா பாத்திரத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம். நெகேமியா என்பதன் பொருள் யெகோவாவின் ஆறுதல். இந்த நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவுக்கு பான பாத்திரக்காரனாக சேவை செய்து கொண்டிருந்தார். அவர் பெர்சியா நாட்டின் தலைநகராயிருந்த சூசானில் உள்ள அரண்மனையில் இருந்த போதிலும் எருசலேமைப் பற்றியும், அங்கே தேவனுக்கடுத்த காரியங்களிலும் அவர் எப்படி அக்கறை உடையவராக இருந்தார் என்பது பற்றியும் நாம் பார்க்கலாம்.

### I. நெகேமியாவின் துக்கம் :

நெகேமியா சூசான் அரண்மனையில் பானபாத்திரக்காரனாகப் பணி புரிந்து கொண்டிருக்கும்போது, எருசலேமில் தன்னுடைய ஜனங்களாகிய யூதர்களைப் பற்றி யூதாவிலிருந்து வந்த சில மனிதர்களால் குறிப்பாக தன்னுடைய சகோதரரில் ஒருவனாயிருந்த ஆனானி மூலமாகக் கேள்விப்பட்டு அதிக துக்கமடைந்தார். இடிக்கப்பட்ட எருசலேம் மதில்கள் கட்டப்படாமல் கிடந்தது இன்னும் அதிக துக்கத்தை அவருக்கு ஏற்படுத்தியது. நெகேமியா 1:1-4 வசனங்களில் நாம் நெகேமியாவின் துக்கத்தையும் இஸ்ரவேலின் துரதிஷ்டமான நிலையையும் காணலாம். இன்றைய நாட்களில் அநேகம்பேர் கவலை இல்லாத வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக சந்தோஷத்தை நாடிச் செல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் அழிந்து போகின்ற ஆத்துமாக்களைக் குறித்து அக்கறை உடையவர்களாக காணப்பட வேண்டும். இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த போது பாடுகள் நிறைந்த மனிதனாக வாழ்ந்தார் என்று வேத வசனங்களில் நாம் காண்கிறோம். ஏசாயா 53 ஆம் அதிகாரத்தில் நாம் இதைத் தெளிவாக வாசிக்க முடியும். நாம் இந்த உலகத்தில் கிறிஸ்துவினிமித்தம்

பாடுபட்டால், துயரப்பட்டால் நாம் பாக்கியவான்களாயிருப்போம். நமக்கு பரலோகத்தில் ஆறுதல் உண்டு. இந்த உலகத்திலேயே நாம் ஆறுதல் அடைவோம். இப்போது நெகேமியாவின் மிகுந்த துக்கத்திற்கான காரணங்களைப் பார்ப்போம். நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவின் பான பாத்திரக்காரனாக பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் முதன் முறையாக ராஜாவின் சகத்தில் துக்கமாயிருந்தார். பெர்சிய ராஜாவுக்கு சேவை செய்கிறவர்கள் ராஜாவுக்கு முன்பாக முழு சந்தோஷத்துடனே காணப்பட வேண்டும், இல்லையெனில் மரணம் அல்லது வேலை இழப்பு போன்ற துரதிஷ்டமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இதை நெகேமியா நன்றாக அறிந்திருந்தபடியால் ராஜா நெகேமியாவைப் பார்த்து நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? என்று கேட்டபோது தான் மிகவும் பயந்ததாக நாம் நெகேமியா 2:2ல் வாசிக்கிறோம். அர்தசஷ்டா ராஜா நெகேமியாவின் குணாதிசயங்களை நன்கு அறிந்திருந்தபடியால் நெகேமியாவிடம் பிரியமாகவே இருந்தார். மேலும் நெகேமியா வியாதியாயிருக்கவில்லை என்பதை அறிந்திருந்த ராஜா நெகேமியாவுக்கு ஏதோ மனதில் துக்கம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு காரியம் என்னவென்று மென்மையாக அவரிடம் வினவினார். ராஜாவின் சாந்தம், இரக்கம் சம்பாஷணைக்கு வழி வகுத்தது. நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்த பிறகு அந்த சம்பாஷனை அல்லது உரையாடல் தொடங்கியது. உண்மையிலேயே இந்த நெகேமியா புஸ்தகம் முவதும் நெகேமியா தான் ஒரு ஜெப வீரன் என்பதை நிரூபித்திருக்கிறார்.

## II. எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணி

முதலாவது நாம் பாபிலோனிய சிறைப்பிடிப்பின் மூன்று கட்டங்கள் அல்லது எருசலேம் மூன்று முறை கைப்பற்றப்பட்டதை கவனிப்போம்.

யோயாக்கீம் நேபுகாத்நேச்சாருக்கு மூன்று வருடங்கள் சேவை செய்தான். அதன் பின்பு அவருக்கு எதிராக கலகம் செய்தான். நேபுகாத் நேச்சார் எருசலேமை கைப்பற்றி யோக்கீமை கட்டுகளுடன் பிடித்துச் சென்றான். அப் போது சில யூத இளைஞர்கள் (தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ) உட்பட பாபிலோனுக்கு சிறைபட்டுப் போனார்கள். அதுமாத்திரமல்ல, நேபுகாத் நேச்சார் எருசலேம் தேவாலயத்தில் இருந்த பணிமுட்டுகளை எடுத்து பாபிலோனிலிருந்த தன்னுடைய தேவனின் ஆலயத்தில் வைத்தான் (2 இராஜாக்கள் 24:1-7) (தானியேல் 1:1-7).

அடுத்ததாக யோயாக்கீன் எருசலேமில் மூன்று மாதங்களும், பத்து நாட்களும் ஆட்சி செய்த பிறகு நேபுகாத்நேச்சார் இரண்டாவது முறையாக

எருசலேமைக் கைப்பற்றினான். அப்போது அவன் யோயாக்கீன் உட்பட தேவா லயத்தின் சகல பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரண்மனையின் பொக்கி ஷங்களையும், தேவாலயத்தில் உண்டாயிருந்த பணிமுட்டுகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு பாபிலோனுக்குச் சென்று விட்டான் (2 இராஜா 24:10-16).

மூன்றாவது, நேபுகாத்நேச்சார் பத்தொன்பதாம் வருடம், ஐந்தாம் மாதம் ஏழாவது நாளில் அவனுடைய இராணுவ தளபதி நெபுசராதான் எருசலேக்கு விரோதமாக அனுப்பப்பட்டான். அவன் தேவாலயத்தையும், ராஜாவின் வீட்டை யும் இடித்துப்போட்டான். மேலும் இவர் எருசலேம் பட்டணத்தின் மதில்களை இடித் துப்போட்டான் (2 இராஜாக்கள் 25:8-21) இந்த இடிந்து போன மதில்கள் கட்டப் படாமல் கிடந்ததால் தான் நெகேமியா துக்கமாக இருந்தார். இந்த மதில்களைக் கட்டி எழுப்புவதற்கு ராஜாவிடமிருந்து அனுமதி பெற்றுக் கொண்டு எருசலேக்குச் சென்றார். நெகேமியா வேலை தொடங்குவதற்கு முன்பு ஆயத்த வேலைகளைச் செய்தார் அது நகரத்தை சோதனை செய்வது உட்பட அநேக காரியங்களை உள்ளடக்கியது (2:12-15). தேவாலயத்தைக் கட்டுவதற்கான பொருள்கள் பற்றி தான் நன்கு அறிந்தவராய் யூதர்களுக்கும், ஆசாரியர்களுக்கும், பிரபுகளுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் வேலையாட்களுக்கும் நன்கு பரிச்சயப்பட் டிருந்தார். மதில்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது எத்தனையோ எதிர்ப்புகள் வந்தது. அவைகளைக் கண்டு நெகேமியா துவண்டு போகவில்லை.

III. **நெகேமியாவிடமிருந்து பாடங்கள் :**

பொதுவாக தேவனுடைய வேலைகளில் ஒருவர் அக்கறை கொண்டு அதை நடைமுறைப்படுத்த தன்னை ஈடுபடுத்தும் போது சாத்தான் எவ்விதத்திலாவது அவரை சோர்வடையச் செய்வான், எப்படியாவது தேவனுடைய வேலையைத் தடுப்பதில் அவன் கெர்ச்சிக்கிற சிங்கமாக சுற்றித் திரிகிறான். நெகேமியா மதில்களைக் கட்டினபோது சாத்தான் எத்தனையோ தடைகளைக் கொண்டு வந்தான். ஆனால், எல்லா தடைகளையும் தேவனுடைய உதவியால் தகர்த் தெறிந்தார். நெகேமியா, பிரச்சனைகள் வந்த போதெல்லாம் ஜெபித்தார் (நெகேமியா 4:1-5,9); அவர் எதிரிகளோடு சமரசம் செய்து கொள்ளவில்லை. நெகேமியா எதிரிகள் மீது கண்ணை வைத்துக் கொண்டே வேலையாட்களை உற்சாகப்படுத்தி மதில்கள் ஐம்பத்திரண்டு நாட்களில் கட்டிமுடிக்கப்படும்படி செய் தார். நெகேமியா என்கின்ற மனிதனுக்குள் காணப்பட்ட ஒவ்வொரு குணாதிச யங்களும் நம் ஒவ்வொருவருக்குள்ளும் காணப்பட வேண்டும். நெகேமியா எப்படி பாழாய்க் கிடந்த மதில்களை கட்டி எழுப்ப மக்களை ஒன்று திரட்டி அவர்களை உற்சாகப்படுத்தி மதில்களைக் கட்டி எழுப்பினாரோ, அதுபோல நாம் கூட ஜனங் களை தேவனிடத்தில் கொண்டு செல்லும் பணியை மேற்கொள்ள வேண்டும். ✞

# சகலவிதமான ஆறுதலின் தேவன்

# The God Of All Comfort

Stanley E. Sayers

**பெ**ரும்பாலும் நாம் சோர்வின்போதும், துக்கத்தின்போதும் அல்லது பயம் நம்மை கவ்வும் வேளையின் போதும் நம்மை நாம் உள்நோக்கிப் பார்க்கும் போது மிகப்பெரிய பெலனை நாம் பெற்றுக்கொள்கிறோம். அட்லீனல் சுரப்பி நமக்குள் சுரப்பதால் அது நம்மை சோர்விலிருந்து விடுவிக்கிறது என்று சொல்லிவிட முடியாது. உலக அனுபவமிக்க அப்போஸ்தலனாயிருக்கிற பவுல் சொல்வதுபோல் சகலவிதமான ஆறுதலின் தேவன் நமக்கு தருகிற பெலனைவிட வேறு பெலனை நமக்கு யார் தரமுடியும் என்பதை நான் நிச்சயத்திருக்கிறேன் ( II கொரி. 1:3 ). அவர் நம்மை தாங்கும்படியாய் நம் அருகிலேயே இருக்கிறார். நம் தேவன் நம்மை விடுவிக்க வல்லவராயிருக்கிறார் என்று பாடல் பாடுகிறோம். இந்த எண்ணந்தான் பலவருடங்களாக பிரசங்கத்தி லிருக்கும் எனக்கு அதாவது, என் இருதயத்துக்கு ஆறுதலைத் தந்து கொண் டிருக்கிறது. நான் தனியாக நிற்கவில்லை என்பதை நிச்சயத்திருக்கிறேன்.

சங்கீதக்காரனாகிய தாவீது தன் ஆத்துமாவோடு தனியாகப் பேசும்போது இவ்விதமாக அறிவிக்கிறார். கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர் என்று. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன் ? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர் (சங்கீதம் 139:178). பல வேளைகளில் நாம் வேத வாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற மகத்தான வாக்குத்தத்தங்களை போதுமான உறுதிப்பாட்டுடன் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால், அதே நேரத்தில் நாம் அவசரக் கோலத்தில் அவைகள் எந்த அளவுக்கு உண்மையாயிருக்கிறது என்று உற்றுப் பார்க்கிறோம். உண்மையாகவே, நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.

நாம் அறிந்துகொள்ளத்தக்க உண்மையாகவே தேவன் நம்மை ஆதரிக்கிறாரா? ( சங்கீதம் 55:22 ). அவர் உண்மையாகவே நன்மைக்கேதுவாக சகலவற்றையும் நடத்தித் தருவாரா? ( ரோமர் 8:28 ). நமக்கெதிராய் காத்திருக்கும் ஆபத்திலிருந்தும், நம்மைச் சுற்றிலும் நெருங்கி நிற்கிற மதில்களிலிருந்து தேவன் நம்மை விடுவித்து காத்துக்கொள்வாரா? அவர் அப்படி நிச்சயமாகச் செய்வாரென்று விசுவாசிக்கிறேன். வாழ்க்கையில் தடம்மாறி நடக்கும் காரியங்களை என்னால் விளக்க முடியாது. அதே நேரத்தில், தெய்வீக வழிநடத்துதலையும் என்னால் முழுமையாக விவரிக்க முடியாது. வேதாகமம் எதைப் போதிக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொண்டு சந்தோஷப்படுகிறேன். சில வேளைகளில், வியாதிகள், கஷ்டங்கள், விபத்துகள் நம்மைத் தாக்கலாம். ஆனால், நாம் உண்மையாகவே தேவனை நம்பும்போது எல்லாமே நன்மைக்கேதுவாக நடக்கும்.

கர்த்தாவே உமக்கு என் பெலவீனமும், என்னையும் தெரியும்; சாத்தானுக்கு நான் வேண்டுமென்றும் உமக்குத் தெரியும். எனவே, இப்பிரச்சனையை நான் முற்றிலுமாக உம்மிடம் தந்துவிடுகிறேன் " என்று சொல்வதற்கு தைரியமான நம்பிக்கை தேவை. இப்படிச் சொல்லிவிட்டு அதன்படி நடக்க வேண்டும். வலி, வேதனை மற்றும் ஏமாற்றத்துடன் ஏறெடுக்கப்படும் மனிதர்களுடைய ஜெபத்தை தேவன் ஒருபோதும் அருவருப்பதில்லை. ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபிரெயர் 4:16).

எனக்கு நேரிடுகிறவைகளை என்னை அதிகமாக நேசிக்கும் கர்த்தருடைய கரங்களில் ஒப்புக்கொடுப்பதில் திருப்தியாயிருக்கிறேன். திருப்தியாயிருந்த பவுலின் தத்துவஞானம் இதுதான். நாம் தைரியமாகவும் நம்பிக்கையாகவும் நம்மை தேவனுடைய கரங்களில் ஒப்புக்கொடுத்துவிட்டால், நடக்கிறவைகள் எல்லாம் நன்மைக்கேதுவாக நடக்கும் (ரோமர் 8:28; சங்கீதம் 11:1). உங்களுக்கு விசுவாசம் பிரச்சனையாக இருக்கிறதா? அப்படியென்றால் எபிரெயர் 11 யை மறுபடியும் வாசித்து கலங்கும் உங்கள் இருதயத்தை தேற்றிக் கொள்ளுங்கள்.

கரிசனையுள்ள தேவனுடைய கண்கள் தேடுகிறதாயும் ஜெபிக்கிற தம்முடைய பிள்ளைகள் மேல் நோக்கமாயுமிருக்கிறது (I பேதுரு 3:18). கர்த்தர் உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் (சங்கீதம் 84 : 11). அவருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. நாம் வாழ்க்கைக் கயிற்றில் நடக்கும்போது தடுமாறி விழும் வேளையில் நம்மை தாங்கிப் பிடிக்கும் ஒரு வலையாக அவர் இருக்கிறார். அவர் ஒருபோதும் நீதிமானை தள்ளாடவிடார் ( சங்கீதம் 55:28). கர்த்தரை நம்புகிறவனோ

செழிப்பான் (நீதிமொழிகள் 28 : 25).

ஒரு வயதான மூதாட்டி தன் ஆரம்ப நாட்களில் தன் மார்க்கத்தின் இனிமையை அனுபவித்ததாகவும், ஆனால் அவருடைய அந்திய நாட்களில் துக்கம் தன்னை துவம்சம் செய்தபடியால் தன் மார்க்கத்தின் வல்லமையை சார்ந்திருந்ததாகவும் சொன்னார். இங்கே தான் தேவன் மிகவும் அவசியப்படு கிறார் என்று நான் நினைக்கிறேன். அந்த வயதான மூதாட்டி ஒரு கட்டத்திற்கு மேல் தான் தனியாகப் போக முடியாது என்பதை உணர்ந்தபடியால் தேவனை சார்ந்திருக்க விரும்பினாள் தேவன் அங்கே அவளோடு இருந்தார்.

தேவன் இருக்கிறார் என்னும் வாக்கியத்தை பதினாயிரம் குரல்கள் ஏகோபித்து முழங்கும்! காலங்காலமாகவே மனிதர்கள் யெகோவா தேவனைத் தேட வேண்டியதாயிருந்தது. அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ஆபிரகாம் லிங்கன் உள்நாட்டுப்போர் அச்சுறுத்தலின்போது முழுங்கால்படியிட்டு ஜெபிக்க வேண்டியதாயிருந்தது. ஏனென்றால், அவர் வேறெங்கும் திரும்ப இடமில்லாதிருந்தது. கடுமையான போராட்டங்களின் போது நாம் ஒன்றுமே செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படும்போது தேவன் இடைப்பட்டு தடைகளை தகர்த்தெறிந்து நம்மை விடுவிக்கிறார். இங்கேதான் தேவன் அவருடைய பரிசுத்த வார்த்தைகளின் சாட்சியங்களை வலியுறுத்துகிறார். இங்கேதான் நாம் காலங்காலமாக விசுவாசித்துக்கொண்டிருக்கும் வேதாகமம் நம் இருதயத்திற்குள் ஆழமாக ஊன்றப்படுகிறது. அதை எதுவும் அசைக்கமுடியாது.

உபத்திரவம் மற்றும் குழப்ப காலங்களில் மனிதர்கள் இரண்டு முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். ஒன்று - புயலை தங்களால் மட்டும் எதிர்க்க முடியாது. இன்னொன்று, பரலோகத்தில் தேவன் இருக்கிறார்! அவர் இன்றும் மனுஷருடைய இருதயங்களில் ஆளுகை செய்கிறார். வெளிப்படையாகவே நம் தேவன் சகலவிதமான ஆறுதலின் தேவனாயிருக்கிறபடியால் அவரை நான் என் முழு மனதோடு நேசிக்கிறேன். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்தி வங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் (II கொரி. 1:34).

புறஜாதிகளுக்கான தைரியமான அப்போஸ்தலனாகிய பவுல் தேவனில் அன்புக்குரியவனெவனோ அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான் என்று எழுதினார். (I கொரி. 8:3). ✝

# இயேசு நம் இரட்சகர்
## Jesus Our Savior
Hans Dederscheck



சூழ்நிலைகள் சரியாக அமைந்தால் மக்களின் வாழ்க்கையும் சரியாக அமையும். பணத்தால் பல காரியங்கள் சாத்தியமாகிறது. விருந்துகள், கொண்டாட்டங்கள், பயணங்கள், கொள்முதல், ஆடம்பரம் அல்லது குறைந்தபட்சம் ஒரு நல்ல வாழ்க்கைத்தரமாவது சாத்தியமாகிறது. ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பணத்தினால் பாவத்திலிருந்து விடுதலை யாருமே வாங்க முடியாது என்று சொன்னார். இங்கே தொகை முக்கியமல்ல. கிறிஸ்து மாத்திரமே நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க முடியும். அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் அவரிடம் வரும் எல்லோருக்கும் இரட்சிப்பை சாத்தியமாக்குகிறது.

பாவம் என்பது தேவனுடைய வார்த்தையை மீறுவது என்று வேத வாக்கியங்களில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. பாவம் தேவனுடைய தூயதன்மையை, நியாயத்தை இழிவுப்படுத்துகிறது. பாவத்தால் கறைபடிந்த மனிதனை தேவன் நேசிக்கிறார் என்றாலும் கூட அவர் பாவத்தை அறவே வெறுக்கிறார். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமலிருப்பது தேவனுடைய அதிகாரத்தை மறுப்பதாகும். இந்த மனப்பான்மை தேவனுக்கும் நமக்கும் பிரிவினையையும் மனிதனுடைய சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய மரணத்தை உண்டாக்குகிறதாயுமிருக்கிறது.

தேவனுடைய பிரமாணங்களை மீறுவதே பாவமாகும். அது மனிதனுக்கும்

தேவனுக்கும் இடையே ஒரு பிரிவினைச் சுவராக எழும்பி நிற்கிறது. இயேசு கிறிஸ்து தம்முடைய தியாகப்பூர்வமான சிலுவை மரணத்தால் விசுவாசிகளின் பாவங்களை மாத்திரம் மன்னிப்பதில்லை. பரம தகப்பனோடு அவர்களை ஒப்புரவாக்கவும் செய்கிறார். மிகத்துல்லியமாக இதற்காகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்து நம்முடைய பாவங்களைச் சுமந்து தம்முடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பை சாத்தியமாக்கினார். கிறிஸ்துவின் தியாகத்தை ஏற்றுக்கொண்டு அவருடைய போதனையின்படி வாழும் எல்லோருக்கும் பாவமன்னிப்பு அருளப்படுகிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. அவரில்லாமல் பாவத்திலிருந்து விடுதலை இல்லை. அவருடைய காரியங்களில்லாமல் நாம் பிதாவினிடத்தில் போகவும் முடியாது. உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனும் நமக்கு சாத்தியமே இல்லை. பெரும்பாலான ஜனங்கள் இந்த இரட்சிப்பின் செய்தியை விசுவாசிப்பதில்லை. ஏனென்றால், இவ்வுலகம் தன் கவர்ச்சியினால் மக்களைக் கவர்ந்து மக்களை குருடாக்கி இரட்சிப்பின் செய்தியைக்கேட்டு இரட்சிக்கப்படாதபடி மக்களுடைய காதுகளையும் அடைத்துவிடுகிறது.

தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி மனித இனத்துக்கு ஜீவனைக் கொடுத்தார். ஆகையால், ஒழுக்க ரீதியாக நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான விளக்கத்தைக் கொடுக்க அவருக்கு எல்லா உரிமையும் உண்டு. கர்த்தருக்கு எல்லாம் தெரியும். அவர் எல்லாவற்றையும் கேட்கிறார், அவர் எல்லாவற்றையும் பார்க்கிறார். தேவனுக்கு முன்பாக நம் வாழ்க்கை வெளியரங்கமாகவும் நிர்வாணமாயும் இருக்கிறது. நம் வாழ்வைக் கண்ணோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிற அவருடைய கண்களிலிருந்து ஒன்றுமே தப்ப முடியாது. ✝

## பொறுமையின் சிகரங்கள்

| | | |
|---|---|---|
| மோசே | – | யாத். 16 : 7 – 8 |
| யோபு | – | யோபு 1 : 21 ; யாக். 5 : 11 |
| தாவீது | – | சங்கீதம் 40 : 1 |
| பவுல் | – | II தீமோ. 3 : 10 |
| தெசலோனிக்கே சபையார் | – | II தெச. 1 : 3 |

# என் வாழ்க்கையில் தேவன் முதலிடத்தில் இருக்க வேண்டும்

# GOD MUST BE FIRST PLACE IN MY LIFE

Tim Childs

தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையானது, உறவுகளைப்பற்றி அதிகமாகப் பேசுகிறது. நாம் கிறிஸ்தவர்களாயிருக்கும்போது தேவத்துவத்தில் உள்ள ஒவ்வொருவரோடும் நம் உறவு முதலிடத்தைப் பிடிக்க வேண்டும். நீங்களும் நானும் அனுதினமும் தேவனிடத்தில் சேர்வது அவசியமாயிருக்கிறது (யாக்கோபு 4 : 8). ஏனென்றால், நமக்கும் தேவனுக்குமிடையே பல உலகக் காரியங்கள் வலம் வந்து நம்மை இரட்சகரிடமிருந்து பிரித்து விடுகின்றன.

தேவனோடு நமக்குள்ள உறவின் தன்மை எப்படியிருக்க வேண்டும்? தேவன் மனிதனுடைய உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் அறிந்திருக்கிறார். நம்முடைய மரபணுக்களைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும். நம் உடல் கோடிக்கணக்கான செல்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. நமக்கு எது சிறந்தது என்று அவருக்கு நன்றாகத் தெரியும். அவர் நம்மை ஆழமாக நேசிக்கிறபடியால் நாம் சோதனைகளை மேற்கொண்டு தேவனோடு ஐக்கியத்தைப் பெறவும், ஆவிக்குரிய உறவைத் தக்கவைத்துக் கொள்ளவும் நம்மை வழிநடத்தி நமக்கு பெலனைத்தந்து உதவுகிறார்.



பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பதுபோல் நீங்களும் நானும் தேவனோடு ஒன்றாயிருப்பது பரலோக நோக்கமாயிருக்கிறது. நீங்களும் நானும் அவரைப் போலவே சிந்திக்க வேண்டு மென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. மேலும், நாம் அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாறி ஆவிக்குரிய பிரகாரமாக வளரும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவனுக்கான அன்பில் என் சித்தமல்ல உம்முடைய சித்தத்தின்படி ஆககடவது என்று ஜெபிக்கும் அளவுக்கு வளருகிறவர்களாய் இருக்க வேண்டும்.

தேவன் நம்மை சமுதாயத்தின் அங்கங்களாகப் படைத்திருக்கிறபடியால் நாம் ஒருவருக்கொருவர் தகவல்களை பறிமாறிக் கொள்ள முடிகிறது. தேவன் நமக்கு இப்படிப் பட்ட ஆசீர்வாதத்தைத் தந்தது மட்டுமல்லாமல் மற்றவர்கள் முன்பாக நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் கற்பித்திருக்கிறார். உலகமானது எல்லைகளே இல்லை அல்லது நீ எல்லைகளை வகுத்துக் கொள் என்று சொல்கிறது. கிறிஸ்தவர்களாக நாம் தேவன் நமக்கு வகுத்திருக்கிற எல்லைகளுக்குள் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் கெட்ட குமாரன் தன் தகப்பனோடு உறவை துண்டித்ததுபோல் நாமும் தேவனோடு உறவை துண்டித்துக் கொள்ள வேண்டியதாயிருக்கும் ( லூக்கா 15:11). அந்த பாதை நம்மை மரணத்துக்கு கொண்டு சென்றுவிடும். கவனம் தேவை. ✝

## வீணாக்கப்பட்ட வருடங்கள்

எனக்குச் சொந்தமாக இருந்த பண்ணையை ஒருநாள் ஏறெடுத்துப் பார்த்தேன். களஞ்சியங்கள் இடிந்து விழுந்து, வயல்கள் புல்லும் பூண்டுமாய் வளர்ந்து கிடந்தது. நானும் என் பிள்ளைகளும் பல வருடங்களாக வளர்ந்த வீடு குட்டிச் சுவராகக் காட்சியளித்தது - கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

அதுபோல என் ஆத்துமாவையும் ஒரு நாள் ஏறெடுத்துப் பார்த்தேன். அதுவும் முள்ளும், குருக்கும் முளைத்து வளர்ந்து கிடந்தது. அலட்சியம் என்னும் விதை விதைக் கப்பட்டதால் முக்கியமில்லாதவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வருடங்கள் கழிந்து போயிற்று. பூமிக்கு நாட்டம் கொடுத்து பரலோக பொக்கிஷத்தை நழுவவிட்டேன்.

ஆ! கர்த்தாவே கண்ணோக்கிப் பாரும் என்று கிறிஸ்துவண்டை திரும்பினேன். இனி வாழ்வதற்கு அதிக வருடங்கள் இல்லை. கொஞ்சமே மீதி தெரிகிறது. வீணாக்கப்பட்ட வருடங்கள் போயே விட்டது. நாட்கள் திரும்ப வராது அந்த நாட்களைப் பயன்படுத்த வேண்டுமானால், கர்த்தரே இனி எல்லாவற்றிலும் எல்லாமுமாக இருக்க வேண்டும்!

# பழைய ஏற்பாட்டிற்கான இடம்

## The Place Of The Old Testament

Jimmy Jividen

**நா**ன் ஒரு பெண்ணிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றேன். அதில் அந்தப் பெண் கிறிஸ்துவின் சபை பழைய ஏற்பாட்டை விசுவாசிப்பதில்லை என்று தான் கேள்விப்பட்டதாக எழுதி அது உண்மையா? என்பதை அறிய விரும்பினார். என்னுடைய பதில், இதைக்குறித்து புதிய ஏற்பாடே பழைய ஏற்பாட்டைக்குறித்து என்ன சொல்கிறது என்பதை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

ஆதி திருச்சபையின் வேதாகமம் பழைய ஏற்பாடு என்பது வெளிப்படையான ஒன்று. தீமோத்தேயு சிறுவயதுமுதல் அறிந்திருந்த வேதவாக்கியங்களும் இவைகள் தான் ( I தீமோ. 3:15 ). இயேசு கிறிஸ்து தம்முடைய தனிப்பட்ட ஊழியத்தில் மேற்கோள்காட்டிய வேதவாக்கியங்கள் பழைய ஏற்பாட்டை சார்ந்தவைகள்தான். புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பழைய ஏற்பாட்டு வசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டிருக்கின்றன. அப்போஸ்தலனாகிய பேதுரு இந்தப் பழைய ஏற்பாட்டைப் பற்றிதான். தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் என்று சொன்னார் (II பேதுரு. 1:21).

பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகள், பிரயோஜனமுள்ளவைகள், எல்லாவகையிலும் உண்மையுள்ளவைகளாயிருக்கிறது. புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டைப் பற்றி சொல்லும் போது :

★ அவைகள் நமக்குப் போதனையாக எழுதப்பட்டிருக்கிறது (ரோமர் 15 : 4).

★ அவைகள் கிறிஸ்தவர்களுக்கு திருஷ்டாந்தங்களாக எழுதி வைக்கப் பட்டுள்ளது ( I கொரி. 10 : 11).

★ அவைகள் ஒருவரை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிறது ( கலா. 3 : 24).

★ அவைகள் கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவேறின (மத். 5 : 17, 18).

குழந்தைகளுக்கான வேதபாட வகுப்புகள் பழைய ஏற்பாட்டு கதாப்பாத்திரங்களை வலியுறுத்துகின்றன. ஒருவர் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களின் மொழி நடையை அறிந்து கொள்ள பழைய ஏற்பாட்டை அறிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது.

இருந்தபோதிலும் பழைய ஏற்பாடு, சபையின் ஆராதனைக்கோ அல்லது செயல்பாட்டுக்கோ ஓர் அளவு கோலாக இருக்க முடியாது. எப்படி பவுலின் நிருபங்கள் பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள் வனாந்திரத்தில் ஆராதனை செய்ததற்கு அளவுகோலாக இல்லையோ அதே போல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டு சபையின் ஆராதனைக்கோ அல்லது செயல்பாட்டுக்கோ ஓர் அளவு கோலாக இருக்க முடியாது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் செய்ததுபோல் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் பலிபீடங்களைக் கட்டுவதில்லை. மிருக பலிகளைச் செலுத்துவதில்லை. ஆசாரிய முறைமையைப் பின்பற்றுவதில்லை. பழைய ஏற்பாடானது இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்பாக தேவன் எப்படி ஜனங்களிடத்தில் இடைப்பட்டாரோ அந்த ரீதியில் புரிந்து கொள் ளப்படவேண்டும். பழைய ஏற்பாட்டு பிரமாணங்களையும் சடங்காச்சாரங் களையும் புதிய ஏற்பாட்டு சபைக்குள் கொண்டு வருவது பழைய ஏற்பாட்டை சரியாகப் புரிந்து கொள்ளாததின் விளைவாகத்தான் இருக்கிறது. இது இரண்டு ஏற்பாடுகளையும் ஒருவர் சரியாகப் படிக்கவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. ✝

---

## நாம் மறந்து விட்டோமா?

★ பாவ மன்னிப்புதான் மிகப் பெரிய தேவை என்பதை... (மாற் 8:36–37)

★ நம்முடைய பாவங்களுக்காகக் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய விலையை ( பேதுரு.1;4)

★ கிறிஸ்தவர்கள் உலகத்திலிருந்து வேறுபட்டவர்கள் என்பதை ( யோவான் 2;15–17)

★ பரலோகமும், நரகமும் உண்டென்பதை (மத் 25:46)

# ஊசியின் காதில்

# Eye Of A Needle

John Allan



லூக்கா 18 : 25 ல் இயேசு கிறிஸ்து '' ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று சொன்னார். உண்மையாகவே ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவதை கற்பனை செய்து பார்ப்பதற்கே கடினமாயிருக்கிறபடியால், சிலர் இவ்வாக்கியத்தை உருவக நடையில் வியாக்கியானம் செய்கிறார்கள். உருவக நடையிலான வியாக்கியானம் மிகச்சிறந்த உள்நோக்கத்தைக் கொண்டிருந்தாலும் அது சரியான வியாக்கியானமல்ல. கீழ்காணும் கருத்துக்களைக் கவனியுங்கள்.

முதலாவது, வியாக்கியானத்தின் அடிப்படை விதி வேதவாக்கியங்கள் உருவக நடையில் வியாக்கியானம் செய்யப்படுவதற்கு சூழ்நிலை உருவானாலொழிய பொதுவாக சொல் அர்த்த ரீதியாகவே வியாக்கியானம் செய்யப்பட வேண்டும். இந்த வசனத்தை நெருக்கமாக நாம் பார்த்தாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்துப் பார்த்தாலும் அது சொல் அர்த்த ரீதியான வியாக்கியானத்திற்கே வழிவகுக்கிறது. இது நிச்சயமாகவே உருவக நடையிலான வியாக்கியானத்திற்கு வழிவகுக்கவில்லை.

இரண்டாவது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த ஊசியின் காதை வைத்து அவர் சொல்ல முயற்சிக்கும் கருத்தை நாம் மனதில் கொள்ள

வேண்டும். அந்த பணக்கார வாலிபன் இயேசு கிறிஸ்துவை பின்பற்ற அவர் கொடுத்த வாய்ப்பை, அவன் ஆஸ்திகளைத் துறக்க மனதில்லாதிருந்தபடியால் நழுவவிட்டான். இயேசு கிறிஸ்து இந்த உதாரணத்தை ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதின் கடினத்தை விளக்குவதற்காகப் பயன்படுத்தினார். இந்த உதாரணத்திற்கு சொல் அர்த்த ரீதியான விளக்கமே உகந்ததாகும்.

அடுத்ததாக, இயேசு கிறிஸ்துவின் உதாரணத்தைக் கேட்டவர்கள் நடந்து கொண்ட விதம் இங்கே மிகவும் முக்கியமானது. அதைக் கேட்டவர்கள் : அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும் என்றார்கள். அங்கே கூடி நின்றவர்கள் இயேசுவின் வார்த்தைகள் சரீரப்பிரகாரமாக சாத்தியமில்லை என்பதைப் புரிந்து கொண்டார்கள். இது லூக்கா 18 : 27 ல் இயேசு கிறிஸ்துவின் பதிலோடு கச்சிதமாகப் பொருந்துவதைக் கவனியுங்கள். அதற்கு அவர் : மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் என்றார்.

ஐசுவரியவான் தேவனில்லாமல் இரட்சிக்கப்படுவது கூடாத காரியம் என்பதை மிக நேர்த்தியாக இது வியாக்கியானம் செய்கிறது. 1. கடினமானதாக இருந்தாலும் அது சாத்தியமே என்று வியாக்கியானம் செய்யும் உருவக நடையிலான வியாக்கியானமா? அல்லது ஒரு மனிதனுக்கோ அல்லது ஒரு மிருகத்துக்கோ சரீரப்பிரகாரமாக அசாத்தியமான ஒன்றைப் பற்றி வியாக்கியானம் செய்யும் சொல் அர்த்த ரீதியான வியாக்கியானமா? எவ்வித சந்தேகமுமின்றி சொல் அர்த்த ரீதியான வியாக்கியானமே மிகச் சிறந்ததாகும்.

சொல் அர்த்த ரீதியான வியாக்கியானம் ஐசுவரியவான் இரட்சிக்கப்படுவது சாத்தியமில்லை என்று மறுத்தால், உருவக நடையிலான வியாத்தியானத்திற்கு அவசியம் ஏற்படும். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஐசுவரியவான் இரட்சிக்கப்படவே முடியாது என்று போதிக்கவில்லை. மாறாக, அவர் ஐசுவரியவான் தேவனில்லாமல் இரட்சிக்கப்பட முடியாது என்று தான் போதித்தார். இக்காரியத்தில் வேதாகமத்தை விசுவாசிக்கிற யாரும் இயேசு கிறிஸ்துவோடு வாக்குவாதம் செய்ய மாட்டார்கள் என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

எந்த மனிதனாலும் ஒட்டகத்தை ஊசியின் காதின் வழியாக நுழைக்க முடியாது. அதே போல், எந்த மனிதனும் ஐசுவரியவானாக இருந்தாலும் சரி, ஐசுவரியமில்லாதவனாக இருந்தாலும் சரி தேவனில்லாமல் இரட்சிக்கப்பட முடியாது.

✞

# தேவனுடைய கிருபையால் யார் மூடப்பட்டிருக்கிறார்?

# Who is Covered by the Grace of God?

J.C. Choate

" கிருபை " என்பது தேவனால் மனிதனுக்கு நீட்டிக்கப்படும் நன்மையும் தயவுமாய் இருக்கிறது; மனிதனால் இதை சம்பாதிக்கவும் முடியாது. இதற்கு மனிதன் தகுதியானவனும் அல்ல. வேறு விதமாகச் சொன்னால், நம்மை நாமே இரட்சிக்க முடியாத நிலையில் இருந்தபோது கர்த்தர் நம்மை இரட்சித்தார். இதுதான் கிருபை என்பதன் பொருளாகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைப்பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல என்று எழுதினார் ( எபேசியர் 2:8, 9 ). இவ்வசனங்கள் மனிதன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியாது என்று சொல்கின்றன. அதேபோல் மனிதனால் தன் இரட்சிப்பை, நற்கிரியைகளைக் கொண்டு சம்பாதிக்கவும் முடியாது. அப்படி முடிந்திருந்தால் என்னை நானே இரட்சித்துக் கொண்டேனே என்று பெருமை பாராட்டி தேவனுடைய அவசியத்தை நிராகரித்து விடுவான். ஆனால், பவுல் இரட்சிப்பு தேவனுடைய ஈவு என்று அறிவிக்கிறார். இரட்சிப்பை நமக்கு நல்க தேவனுக்கு மாத்திரமே வல்லமை உண்டு. நாம் அவருடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.

மனிதன் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டாலும்கூட அவன் கிருபையினாலே மாத்திரம் இரட்சிக்கப்படுவதில்லை! இரட்சிப்பு என்பது கிருபையினாலே மட்டும் என்று இருந்திருந்தால் எல்லோருமே இரட்சிக்கப்படுவார்கள். ஏனென்

றால், தேவன் எல்லா ஆத்துமாக்களையும் நேசிக்கிறார், கிறிஸ்து எல்லாருக் காகவும் மரித்தார். இருந்தபோதிலும், பவுல் நாம் செய்த நீதியின் கிரியைகளி னிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின் படியே, மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5) என்று எழுதினார்.

எபேசியர் மற்றும் தீத்து நிருபங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வசனங் களை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒருவருடைய நற்கிரியைகளினாலோ அல்லது மோசேயின் பிரமாணத்தின் கிரியைகளினாலோ ஒருவர் இரட்சிப்படைய முடியாது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். ஏனென்றால், இரட்சிப்பு என்றும் தேவனுடைய கிருபையால் தான் உண்டாகிறது. இருந்தபோதிலும், இரட்சிப்பு நிபந்தனைக்குட்பட்டது. தீத்துவில் இடம்பெற்றுள்ள வசனப்பகுதி மறுஜென்ம முழுக்கினால் நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகச் சொல்கிறது. அது நாம் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதைத்தான் குறிக்கிறது. அதேபோல் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதல் என்பது ஞானஸ்நானத்தின்போது நமக்கு வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் வரத்தைக் குறிக்கிறது. இதை நாம் அப்போஸ்தலர் 2:38 ல் வாசிக்கலாம். பேதுருவும் மற்ற அப்போஸதலர்களும் எருசலேமில் திரளான கூட்டத்திற்குப் பிரசங்கித்து இயேசுவை தேவனுடைய குமாரனென்று வலியுறுத்தினபோது அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டு நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்போஸ்தலர் 2:38) என்றான்.

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதிகள் இரட்சிப்பு ஒருவர் கர்த்தருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படிய விரும்புவதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது. வேதவாக்கியங்களில் எழுதப்பட்டிருப்பதற்கு இசைவாக நடக்க ஒருவர் தன்னால் முடிந்தவரை எல்லாவற்றையும் செய்யும்போது, அவர் மனந்திரும்பி கீழ்ப்படியும் போது தேவன் தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் அந்த நபரை இரட்சிக்கிறார்,

எனவே, இங்கே செய்தி என்ன? மனந்திரும்பிக் கீழ்ப்படியும் விசுவாசி மீது தேவன் தம்முடைய கிருபையை ஊற்றுவதினால் கிடைப்பதுதான் இரட்சிப்பாகும்.

ஆனால், தேவனுக்குக் கீழ்ப்படிய மறுக்கும் ஒருவருடைய கதி என்ன?

கிருபை அந்த நபரை மூடிக்கொண்டு அவருடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கிறதா? இல்லை. தேவன் என்ன எழுதிக் கொடுத்திருக்கிறாரோ அதன்படி தான் எப்போதும் செய்வார். அதற்கு மாறாக ஒருபோதும் செய்யமாட்டார். தேவனுடைய வார்த்தையானது இரட்சிப்பில் தேவனுடைய பங்கு கிருபை என்றும், மனிதனுடைய பங்கு கிரியையென்றும் சொல்கிறது. இங்கே விசுவாசம் என்பது கீழ்ப்படியச் செய்யும் விசுவாசமாயிருக்கிறது. அதாவது இரட்சிப்பின் காரியத்தில் தேவன் தம்முடைய பங்கை நிச்சயமாக நிறைவேற்றுகிறார். மனிதனுடைய பங்கு தான் கேள்விக்குறியாயிருக்கிறது. மனிதன் தன் பங்கை சரியாகச் செய்யாத பட்சத்தில் அவனுக்கு கிருபை தேவனால் கொடுக்கப்படாது.

நாம் இதுகாறும் பார்த்த வசனங்களின்படி தேவனுடைய கிருபை எல்லோரையும் மூடுவதில்லை. அவரை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படியும் அளவுக்கு அவரை நேசிப்பவர்களுக்கே இது வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. இவ்விதமாக தேவன் அவர்களை இரட்சித்து தம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவின் சபையில் சேர்த்துக் கொள்கிறார்.

ஒருவர் கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படும்போது, அவர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் கர்த்தருடைய குடும்பத்தில் தொடர்ந்து உண்மையாக அங்கம் வகிக்க வேண்டும். அப்போதுதான் அவர் நித்தியமாக இரட்சிக்கப்பட முடியும்.

ஒருவர் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தாலும் அவருக்கு இரட்சிப்பு உண்டு என்று ஒருபோதும் வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை; மாறாக, வெளிப்படுத்தின விசேஷம் 2:10ல் குறிப்பிட்டிருக்கிறபடி ஒருவர் ஜீவக் கிரீடத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் மரணபரியந்தம் அவர் உண்மையுள்ளவராயிருக்க வேண்டும்.

இது ஒருவருடைய உண்மைத்தன்மை அவரை இரட்சித்துவிட்டது என்று பொருள்படாது அல்லது ஒருவர் தன் உண்மைத்தன்மையால் இரட்சிப்புக்குத் தகுதிபெற போதுமான அளவு நற்கிரியைகளை செய்துவிட்டார் என்றும் பொருள்படாது. அதற்குமாறாக, அவர் தன் உண்மைத்தன்மையால் பிதாவின் கைகளிலிருந்து ஊற்றப்படும் கிருபையைப் பெற்றுக் கொள்வதற்குத் தொடர்ந்து தகுதிபெறுகிறார் என்று தான் பொருள்படும்.

கர்த்தருடைய சபையில்கூட சிலர் வேத வாக்கியங்கள் கிருபை மற்றும் விசுவாசத்தைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதை அறியாதிருக்கிறார்கள். அவர்கள் உண்மையும் தேவபக்தியும் உள்ள மக்கள். அவர்கள் கர்த்தருடைய

சபையில் அங்கம் வகிக்காவிட்டாலும்கூட தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்படுவார்கள் என்று நினைக்கிறார்கள். அவர்களுடைய வாதம் என்னவென்றால், கிறிஸ்தவர்கள்கூட பூரணராயிராதபடியால் இரட்சிக்கப்பட தேவனுடைய கிருபையை சார்ந்திருக்க வேண்டியதாயிருக்கிறதோ அதேபோல் மற்ற உபதேசங்களில் இருப்பவர்களும் மற்ற மதத்தைச் சார்ந்தவர்களும் தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்லுகிறார்கள்.

மேற்சொல்லப்பட்ட வாதத்தைப் பின்பற்றுபவர்கள் ஒரு முக்கியமான காரியத்தை அலட்சியம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட மக்கள் இரட்சிப்பை அடைவதற்கான தேவனுடைய திட்டத்திற்குக் கீழ்ப்படிவதில்லை, அதாவது, மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலமாக மறுபடியும் பிறந்த தேவனுடைய ஒரே குடும்பத்தில் அங்கம் வகிப்பதன் அருமையை உணராதவர்கள். நம் குடும்பங்களில் பிறக்காதவர்கள் எப்படி நம் ஆஸ்திகளை அல்லது உடைமைகளை பெறுவதற்கு தகுதியில்லாதவர்களோ அது போல். தேவனுடைய குடும்பத்தில் பிறக்காதவர்கள் தேவனுடைய கிருபையைப் பெறுவதற்குத் தகுதியானவர்களல்ல. தேவனுடைய குடும்பத்தின் உள்ளே இருப்பதற்கும், வெளியே இருப்பதற்குமிடையே மிகப் பெரிய வித்தயாசம் இருக்கிறது.

நீங்கள் கிறிஸ்தவரா? கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினரா? அப்படியில்லையென்றால், தேவனுடைய கிருபை உங்களை இரட்சிக்கும்படி அவருக்கு நீங்கள் கீழ்ப்படியும்படி வேண்டிக்கொள்கிறோம்.

✝

## ஞானஸ்நானத்தின் நோக்கம்

| | |
|---|---|
| பாவமன்னிப்பு | - அப். 2 : 38 |
| பாவங்கள் கழுவப்படுதல் | - அப். 22 : 16 |
| கிறிஸ்துவின் சரீரத்திற்குள் வருதல் | - கலா 3 : 26 - 27 |
| ராஜ்ஜியத்தில் சேர்க்கப்படுத்ல | - யோவா 3 : 3 - 5 |
| புதிய மனிதனாக பிறத்தல் | - II கொரி. 5 : 17 |
| புதிய வாழ்வு பெறுதல் | - ரோமர். 6 : 4 |

# நேரமே, என்னிடமிருந்து நழுவிச் செல்லாதே!

# Time, Don't Run Out On Me!

Michael L. King

**நா**ம் அதிகமாக வாசிக்காத பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனப் புத்தகமாகிய எரேமியா தீர்க்க தரிசனப் புத்தகத்தில் சோகம் நிறைந்த வாக்கியம் இடம்பெற் றிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், அப்போஸ் தலனாகிய பவுலும் எரேமியா தீர்க்கதரிசின புத்தகத்தை வாசித்து, தங்கள் போதனை களிலும், எழுத்துக்களிலும் அதை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். இது எரேமியாவின் காலத்தில் வாழ்ந்த மக்களுடைய நிலைமை யைப் பற்றிய புலம்பலாயிருந்தது. அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை என்று எழுதினார்.

உலகத்தில் பெரும்பாலா னோருக்குக் கோடைக்கால விடுமுறை முடிவு என்பது கசப்பான ஒன்றாகத் திகழ்கிறது. கோடைக்கால முடிவு என்பது பள் ளிக்குத் திரும்பும் குழந்தை களுக்கு சுதந்திரத்தின் முடிவாகி விடுகிறது. ஏனென்றால், அவர்களுக்கு மலைபோல் எழும்பி நிற்கும் வீட்டுப் பாடங்கள் அச்சுறுத்தலாயிருக்கும். தொழி லாளர்கள் கோடைக்கால விடுமுறையை உற்சாகமாகக் கொண்டாட முடியாத காரணத்தால் மிகுந்த சோகத்தில் மூழ்குவ துண்டு. கோடைக் காலம் வரை வேலைகள் ஒத்திப்போடப்படுவதால் செய்ய வேண்டிய வேலைகள் குவிந்து விடுகின்றன. இங்கே, இந்த வசனப்பகுதி ஒரு விவசாயியைப் பற்றிப் பேசுகிறது. அங்கே கோடைக்காலம் முடிந்துவிட்டது. அறுவடையோ வயல்வெளியில் கிடக்கிறது. குளிர்காலத்திற்கான ஜீவாதாரம் ஏதுமில்லாதிருந்தது.

கோடைக்காலம் முடிந்த பிறகு என்ன செய்வது என்பதை உண்மை அடைப்படையில் பார்த்தால் கவலையளிக்கிறது. எரேமியா தீர்க்கதரிசி தன்னுடைய வேலை முடியாததைக் குறித்தும் தன் ஜனங்கள் கோடைக்காலம் முடிந்த பிறகும் இரட்சிக்கப்படாதிருந்ததைக் குறித்தும் அதிகமாகக் கவலைப்பட்டார். விளையாட்டுப் போட்டிகளில், விளையாட்டு வீரர்கள், நாங்கள் தோற்கவில்லை எங்களுக்கு நேரம் போதவில்லை வெற்றிக்கான புள்ளிகளை நெருங்கியிருந்தோம். ஒரே ஒரு புள்ளி கிடைத்திருந்தால் போதும் வெற்றி பெற்றிருப்போம் என்று தோல்வியை ஒத்துக் கொள்ளாமல் பேசுவதை நாம் எத்தனைமுறை கேள்விப்பட்டிருக்கிறோம்.

அதுபோலவே ஆத்தும இரட்சிப்பைப் பற்றி நாம் பார்க்கும் போது முழு மனதோடு கீழ்ப்படியாமல் பெயரளவில் மாத்திரம் சம்மதத்தைக் கொடுத்து கீழ்ப்படிவது போதுமானதல்ல. அவர்கள் இன்னும் இழந்த நிலையில் தான் இருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் அகிரிப்பா ராஜவுக்கு சுவிசேஷத்தை அறிவித்த பிறகு அகிரிப்பா பவுலை நோக்கி, நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்.

ஆனால், அதற்குப் பவுல் நீர் மாத்திரமல்ல இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும் கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர முழுவதும் என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்கிறேன் என்றான்.

அறுவடைதான் எல்லாமே, அது வாழ்வில் செழிப்பையும், வாழ்வாதாரத்தையும் கொண்டு வரும் அல்லது பயத்தையும், பட்டினியையும் கொண்டு வரும். ஆவிக்குரிய பிரகாரமாக நான் பேசுகிறேன். நாம் கோடைக் காலத்தைப் பயத்தோடும், நம்பிக்கையின்மையோடும் முடிக்க வேண்டிய அவசியமில்லை. யூதா தேசம் முழுக்க ஒழுக்க ரீதியாக விழுந்து போனது, மார்க்க ரீதியாக தேவனை விட்டு விலகித் தொடர்ந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்கினார்கள். யூதாவின் நடத்தை கேடுள்ளதாக இருந்தது. அவர்கள் மனந்திரும்ப மறுத்தார்கள் (எபே. 8 : 4 - 7). யூதா தேவனுடைய பிரமாணத்தை மதிக்க மறுத்துவிட்டது (8 : 8 - 12). தேவன் எரேமியா மூலமாக விடுத்த எச்சரிப்புகளை யூதா ஒட்டுமொத்தமாக நிராகரித்து விட்டது. அவர்களை முற்றிலும் அழித்துப் போடுவேன் என்று ஏற்கனவே கர்த்தர் எச்சரித்திருந்தார் (8 : 13).

யூதாவை தவறான பாதையில் வழிநடத்தின ஞானிகள் வெட்கமடைந்தார்கள் (8:9). அவர்கள் ஜனங்களுடைய ஆத்தும இரட்சிப்பை அறுவடை செய்வதற்குப் பதிலாக வெட்கத்தைக் கொண்டுவந்தார்கள். அதுமாத்திரமல்ல தங்கள் மதியீனத்தின் கனியாகிய பயத்தையும் பயங்கரத்தையும் கொண்டுவந்தார்கள்.

அவர்கள் காலம் கடந்துபோய்க் கொண்டிருக்கிறது என்னும் தேவ எச்சரிப்பை மறுத்தார்கள் (8:13-17). அவர்கள் மீது வரவிருந்த அழிவிலிருந்து தங்ளைக் காப்பாற்றிக் கொள்ள அரணான பட்டணங்கள் இருந்தன. ஆனால், அவர்கள் அவைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். அவர்களுடைய செயல்பாடுகளின் உச்சகட்டமாகிய கோடைக் காலம் முடிந்தபோது பாபிலோனின் வல்லமையான பட்டயம், நோய், பஞ்சம், அக்கினி மற்றும் சிறைபிடிப்பால் தண்டிக்கப் பட்டார்கள்(14: 1;15:2-4;21:9; 24:10; 33: 23). யூதா செய்யத்தகாத செயல்களைச் செய்ததற்குப் பொறுப்பேற்க மறுத்து விட்டது. அவர்களுக்கு எச்சரிப்பு விடுக்கப்படாமலில்லை. ஆனால், குளிர்காலத்தில் வரப்போகும் அழிவைக் குறித்துக் கவலைப்படாமல் மகிழ்ச்சியாயிருந்தார்கள். எரேமியா **அழுகையின் தீர்க்கதரிசி** என்றழைக்கப்படுவதற்கான காரணம் இப்போது நமக்குப் புரியும். **என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களினால் நானும் காயப்பட்டேன்; கரிகறுத்திருக்கிறேன்; திகைப்பு என்னைப் பிடித்தது** என்று துக்கத்துடன் சொன்னார் (8 : 21). **கீலேயாத்திலே பிசின் தைலம் இருந்தது, இரணவைத்தியனும் அங்கே இருந்தார்; ஆனால் யூதா சுகமடைய மறுத்தது** (8:22).

நம்முடைய கோடைக்காலம் முடியும்போது சுதந்தரம் இருக்குமா அல்லது சுட்டரிக்கும் அக்கினி இருக்குமா? இரட்சிப்பு இருக்குமா அல்லது இழப்பு இருக்குமா? ஆத்துமா அறுவடை இல்லாமல் நம் வாழ்க்கையின் கோடைக் காலம் முடிய நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. குறைந்தபட்சம் நம்மோடு தொடர்பில் இருப்பவர்களுடைய ஆத்துமாக்களையாவது நாம் அறுவடை செய்ய வேண்டும். நாம் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையென்றல் நம் கையைவிட்டு அது நழுவிச் சென்றுவிடும் (கொலோ 4:5).

✝

# இது உங்களுக்கு ஒன்றுமில்லையா?

# Is it Nothing To You?

Maxie B.Boren



**நொ**றுக்கப்பட்ட எருசலேமின் அழிவுச் சிதைவுகளின் மத்தியில் இருந்துகொண்டு, மாபெரும் தீர்க்க தரிசியாகிய எரேமியா இருதயத்தின் ஆழங்களிலிருந்து அழுகிறார். அவர் உண்மையாக தேவனுடைய வார்த் தையை ஜனங்களுக்கு அறிவித்தார். எரேமியா, ஜனங்களிடம், அவர்கள் தங்கள் அக்கிரமங்களிலிருந்து விலகி, தேவனிடம் திரும்புமாறு வேண்டிக்கொண்டார். ஆனால், ஜனங்களோ அவருடைய வார்த்தையைக் கேட்கவில்லை.

எரேமியா மிகுந்த புலம்பலோடு, வழியிலே நடந்துபோகிற சகல ஜனங்களே, இதைக்குறித்து உங்களுக்குக் கவலையில்லையா? என்று வேண்டி கேட்டுக்கொள்கிறார் ( புல.1:12 ). இது, விசாரிப்பதைப் போன்ற ஒரு கேள்வியாயிருந்தது. ஆனால், யாராவது கவலைப்பட்டார்களா? இல்லை, இல்லவேயில்லை. இது, எத்தனை பரிதாபமும், சோகமும் நிறைந்த காட்சியென்று சற்று சிந்தனை அல்லது கற்பனை செய்து பாருங்கள்! அங்கே, மகா பட்டணமாகிய எருசலேமின் அழிவுச் சிதைவுகளின் மத்தியில் எரேமியா மாத்திரம் நொறுங்கிய இருதயத்தோடு தனியாகக் காணப்பட்டார்.

உண்மையாகவே, இங்கே இரண்டு சோகக் காட்சிகளை நாம் காண்கிறோம். முதலாவது, எருசலேம் பட்டணத்தின் அழிவும், இரண்டாவது, ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டதுமாயிருக்கிறது. முதலாவது, வரவிருந்த அழிவைத் தடுப்பதற்கு வாய்ப்பிருந்தும் ஜனங்கள் தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கத் தவறியதால் அந்த வாய்ப்பை நழுவ விட்டார்கள்!

இங்கே நாம், இன்றையை நாட்களுக்கு ஒப்பான சம்பவத்தைக் காண்கிறோம். உண்மையுள்ள சுவிசேஷப் பிரசங்கியார்கள் ஜனங்கள் தங்கள் பாவப் பழக்க வழகக்கங்களிலிருந்து திரும்பி தேவனுக்காக பக்திவைராக்கிய மாயிருக்கவேண்டுமென்று மன்றாடுகிறார்கள்! ஆனால், அவர்களுடைய புத்திமதிகளும் எச்சரிப்புகளும் கேளாதவன் காதில் ஊதிய சங்குபோலவே இருக்கிறது. இது எங்கேபோய் முடியுமென்று எண்ணும்போது அழுகை வருகிறது. இச்சூழ்நிலையில் என் இருதயத்தில் எதிரொலிக்கும் கனத்த குரல் என்னவென்றால் – யாராவது அக்கறைப்படுகிறார்களா? வழியிலே நடந்துபோகிற ஜனங்களே இதைக்குறித்து உங்களுக்குக் கவலையில்லையா?

கட்டுரையை எழுதுவதும், அதை வாசிப்பதும் எப்படி நிச்சயமோ அதே போல், நியாயத்தீர்ப்பும் நிச்சயம்!. மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே, அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் ( அப்.17:31 ). ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோம.14:12).

இதைக் குறித்து உங்களுக்குக் கவலையில்லையா? என்னும் கேள்வி, திரும்பத் திரும்ப நம் காதுகளில் ரீங்காரமிடுகிறது. நான் அக்கறைப்படுகிறேன் என்பது உங்கள் பதிலாயிருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். மேலும், அது என் மன்றாட்டாகவும் இருக்கிறது. பின்பு நாம் வருத்தப்படாதபடிக்கு, கர்த்தருக்கு முதலிடத்தை நம் வாழ்க்கையில் கொடுப்போம்.

---

## தேவனுடைய வார்த்தை

| | | |
|---|---|---|
| ஒரு நாளைக் குறித்திருக்கிறார் | - | அப். 17 : 31 |
| நியாயந்தீர்ப்பு நியமிக்கப்பட்டிருக்கிறது | - | எபி. 9 : 27 |
| நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் | - | II கொரி 5 : 10 |
| நியாயந்தீர்ப்பு நம்மிடத்தில் துவங்கும் | - | I பேதுரு 4 : 17 |
| புத்தகங்கள் திறக்கப்படும் | - | வெளி. 20 : 12 |

சபை

" ... ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் " (யோவான் 8:24)

# நாங்கள் விசுவாசிக்கிறோம்

# We Believe

Bobby Key

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் மற்ற யாரையும் புண்படுத்த விரும்புவதில்லை; அதேபோல் மறைக்கப்பட்ட உண்மைகள் என்று எதையும் சொல்வதில்லை அல்லது சில உண்மைகள் எங்களுக்குத்தான் தெரியுமென்று பீற்றிக் கொள்வதில்லை. அதே நேரத்தில் மற்ற பிரிவினை சபைகள் போதிக்காத, நடைமுறைப்படுத்தாத சத்தியத்தை நாங்கள் போதிக்கிறோம், அவைகளை நடைமுறைப்படுத்துகிறோம் என்று விசுவாசிக்கிறோம். வேதாகமம் தேவ ஆவியினால் ஏவப்பட்ட புத்தகம் என்பதை ஆரம்பத்திலிருந்து முடிவு வரை விசுவாசிக்கிறோம். நாம் கர்த்தர் மீதும் அவருடைய சத்தியத்தின் மீதும் கொண்டுள்ள விசுவாசம் வேதவாக்கியங்களினால் நமக்கு உண்டாகிறது. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17). நம்முடைய உறுதியான அதிகாரத்தின் குரல் கிறிஸ்துவாயிருக்கிறார். ஆகவே, நாம் ஆலோசனைச் சங்கத்திலிருந்தோ, போப்பிடமிருந்தோ தீர்மானம் அல்லது முடிவு வருமென்று எதிர்பார்க்கவேண்டிய அவசியமில்லை.

புதிய ஏற்பாடு, ஒருவர் கிறிஸ்தவராவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு என்று போதிக்கிறது. அது என்னவென்றால் 1. தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும், வேதாகமத்தினிடத்திலும் விசுவாசமாயிருத்தல் 2. பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் 3. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடுதல் 4. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுதல் போன்றவைகளைச் செய்யவேண்டும். இந்த ஞானஸ்நானம் பாவமன்னிப்பிற்கான ஞானஸ்நானமாகத்தான் இருக்க வேண்டும். இந்த எளிய கற்பனைகளுக்கு ஒருவர் மனதாரக் கீழ்ப்படியும்போது, கிறிஸ்துவின் இரத்தம் அவரை பழைய பாவங்களிலிருந்து கழுவிச் சுத்திகரிக்கிறது. கீழ்ப்படிதலுள்ள

விசுவாசி அப்போது தேவனால் சபையில் சேர்க்கப்படுகிறார் ( கலா.3:27; எபே.1:7; அப்.2:47).

கர்த்தருடைய சபையின் ஆராதனை புதிய ஏற்பாட்டை மாதிரியாகக் கொண்டது ( யோவான் 4:24 ). ஆராதனையின் பங்குகளாவன: பாடல் (கொலோ. 3:16); ஜெபம் (அப்.2:42;20:7; I கொரி.11:23-29); வேதாகமத்தைப் படித்தல் (II தீமோ.2:1,5) ; சபையின் பணிக்காக காணிக்கை கொடுத்தல் (I கொரி. 16:2 ). இவைகளையெல்லாம் செய்வதற்காக கர்த்தருடைய சபை வாரத்தின் முதல் நாளிலே கூடுகிறது (I கொரி.16:2; எபி.10:25; வெளி.1:10).

நம்முடைய ஆசையெல்லாம் மற்ற சபைகளிடமிருந்து நம்மை வித்தியாசமாகக் காட்டவேண்டுமென்பதல்ல. மாறாக, புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற சபையை அடையாளப்படுத்த வேண்டுமென்பதுதான். நீங்கள் எங்களோடு சேர்ந்து ஆராதிக்க உங்களை அன்போடு அழைக்கிறோம்.

## நான் ஞாயிறு மாலை ஆராதனையிலும் கலந்துகொள்ளுகிறேன். ஏனென்றால் :

- ★ நான் போக விரும்புகிறேன், அங்கே நான் போகிறேன்
- ★ நான் மற்றெங்கும் போவதைவிட அங்கேயிருக்கவே ஆசைப்படுகிறேன்.
- ★ நான் மற்றெங்கும்விட அங்கேயிருக்கவே ஆசைப்படுகிறேன்
- ★ என் பிள்ளைகள் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் என் மாதிரியைப் பின்பற்றுவார்கள்
- ★ என் ஆத்துமா அங்கே போதிக்கப்படுபவைகளால் பலப்படுத்தப் படுகிறது
- ★ என் இருதயம் ஆவிக்குரிய பாடல்களைப் பரத்திற்கு ஏறெடுக்கும் போது களிகூருகிறது.
- ★ சத்தியத்தைப் புரிந்துகொள்ளாதவர்களுக்குப் போதிக்கவும் அவர்களோடு விவாதிக்கவும் இப்போது நான் ஆயத்தமா யிருக்கிறேன்.
- ★ நான் நீதியின்மேல் பசி தாகமுள்ளவனாயிருக்கிறேன்.

# நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்

# You are the Temple of GOD

Kevin L. Moore



நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமா யிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம் (I கொரி 3:16,17)

இவ்வசனத்தின் உட்பொருளை அலசி ஆராய்வதற்கு முன்பாக, இதன் உண்மையான அர்த்தம் மொழியாக்கத்தில் தொலைந்துபோக வாய்ப்புண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மூல மொழியான கிரேக்க மொழியில் இதன் பொருள் தெளிவாகத்தான் இருக்கிறது. ஆனால், ஆங்கில மொழியில்

இது மொழிபெயர்க்கப்பட்டபோது, பவுல் ஒரு தனிநபருக்குச் சொன்னது போல ஒருமையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் ஆங்கிலத்தில் சுட்டுப் பெயரான You என்பது ஒருமையையும் குறிக்கும், பன்மையையும் குறிக்கும்.

இங்கே, I கொரி.3:16 ல், அப்போஸ்தலனாகிய பவுல் நீங்கள் தேவனுடைய ஆலயம் என்று பன்மையில்தான் சொல்கிறார். ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கு மாத்திரம் சொல்லவில்லை. அதாவது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குத்தான் எழுதுகிறார். இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய தேவனுடைய சபை ஆவிக்குரிய ஆலயமாகவும், பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமாகவும் இருக்கிறது.

அடுத்ததாக, அப்போஸ்தலனாகிய பவுல், ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார் என்று எழுதுகிறார். மறுபடியும் நாம் இங்கே பார்க்கும்போது. இது தனிப்பட்ட ஒரு கிறிஸ்தவனுக்கோ அல்லது கிறிஸ்தவளுக்கோ எழுதப்படவில்லை என்று நாம் பார்க்கிறோம் (6:18-20 ) அதுபோல், சபை என்றால் அது செங்கல் மற்றும் சிமெண்ட், மணல் கலவையினாலான ஒரு கட்டடம் என்று நாம் நினைத்துவிடக் கூடாது அல்லது அது ஒரு பரிசுத்தமாக்கப்பட்ட ஸ்தலம் என்றும் எண்ணிவிடக்கூடாது.

உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக நாம் ஒன்றுகூடும்போது, இணைந்து வேலை செய்யும்போது, நாம் கூட்டாகச் சேர்ந்து தேவனுடைய பிள்ளைகளாக நம்மை சமுதாயத்தில் அடையாளப்படுத்தும்போது, நாம் ஆவிக்குரிய ஆலய மாயிருக்கிறோம். நம்மில் ஒருவரும் தேவபக்தியற்ற செயல்பாடுகளினால் தேவ னுடைய ஆலயத்தைக் கெடுக்காமலிருப்போமாக (5:1,2; 6:1-11). அதேபோல், ஆவிக்குரிய உற்சாகமின்மை ( 11:30, 31), கள்ளப்போதனை ( 15:12, 34 ), தவறான ஆராதனை; தேவையில்லாத பிரிவினை ( 1:10,11; 3:3 ) போன்ற தேவபக்தியற்ற செயல்பாடுகளினால் நாம் தேவனுடைய ஆலயத்தைக் கெடுக் காமலிருப்போமாக, நம்முடைய பிரதான நோக்கம் தேவனுடைய ஆலயத் தைக் கட்டுகிறதாயிருக்க வேண்டும்.

I கொரிந்தியர் மூன்றாம் அதிகாரத்திலேயே சபை எவ்வளவு முக்கியமான தென்றும் அதில் அங்கம் வகிப்பதின் மாபெரும் சிலாக்கியத்தையும் தேவ பக்திக்கேற்ற வாழ்க்கை வாழ்வதற்கு நம்மை நாமே அர்ப்பணிக்கும் பொறுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து முழு ஈடுபாட்டுடனும், உண்மையுடனும் அவருடைய சேவையில் நிலைத்திருப்போம். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம் (3:17)

✝

## இயேசு கிறிஸ்து கட்டின சபையின் அடையாளக் குறிகள்

| அடையாளக்குறி | கிறிஸ்துவின் சபை | கிறிஸ்துவின் சபை அல்லாதது |
|---|---|---|
| ஸ்தாபகர் | கிறிஸ்து. மத்தேயு (16:18) | மனிதனால் ஆரம்பிக்கப்பட்டதா? அல்லது தேவனால் ஆரம்பிக்கப்பட்டதா? |
| அஸ்திபாரம் | கிறிஸ்து (I கொரி.3:11) | தேவனுடைய வார்த்தையின் மீது கட்டப்பட்டிருக்கிறதா? |
| ஆரம்ப தேதி | பெந்தகொஸ்தே நாள் கி.பி.33 (அப்.2 ஆதி) | இது.எப்போது ஆரம்பமானது? |
| தோன்றின இடம் | எருசலேம் (அப்.2ம் அதி) | இது எங்கே தோன்றியது? |
| பெயர் | கிறிஸ்துவின் சபை (ரோமர்16:16) | இது எப்படி அழைக்கப்படுகிறது? |
| அங்கத்தினர்கள் | அப்போஸ்தலர்கள், ஞானஸ்நானம் பெற்றவர்கள் அப்.2:36-47 | அங்கத்தினர்களுக்கான நிபந்தனைகள்? |
| ஆராதனை | (அப்.2:42;20:7, கொலொ 3:16) | ஆராதனையில் என்னென்ன பங்குகள் இடம் பெறுகின்றன? |
| பணி | யாக்கோபு (1:22-27) | என்ன பணியைச் செய்கிறது? |
| உபதேசம் | புதிய ஏற்பாட்டு உபதேசம் (Iதீமோ1:3) | எதைப் போதிக்கிறது? |
| ஆளுகை அமைப்பு | கிறிஸ்து தலைவர்; மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் | இதற்கு யார் தலைவர்? |
| அரசாங்கம் | தன்னாட்சியுடன் செயல்படும் சபைகள் | இதன் தலைமையகம் எங்கே? |
| செய்தி | வெளி. (22:18,19) | இது மனிதக் கொள்கைகளால் ஆளுகை செய்யப்படுகிறதா? |
| ஒற்றுமை | ஒரே சபை (எபேசியர்4:4-6) | மார்க்கப் பிரிவினை பைகளுள் ஒன்றா? |
| ஜீவன் | மரணபரியந்தம் உண்மையாயிருக்க வேண்டும் (வெளி2:10) | கிருபையிலிருந்து விழுந்துபோக முடியுமா? |
| நியாயத்தீர்ப்பு | எல்லோருக்கும் நியாயத் தீர்ப்பு (வெளி20:13) | யார் இரட்சிக்கப்படுவார்? |
| சேருமிடம் | நித்தியமானது | பரலோகம், நரகம் போன்றவைகள் உள்ளனவையா? |

**மேற்சொல்லப்பட்ட அடையாளக் குறிப்புகளில் எந்த அடையாளக் குறிப்புகள் நீங்கள் அங்கம் வகிக்கும் சபைக்குப் பொருந்துகிறது?**

# நான் ஜெபித்தபோது...

Betty Burton Choate

நான் பொறுமைக்காக ஜெபித்தபோது
ஏமாற்றம் என் வழியே வந்தது!
நான் பெலனுக்காக ஜெபித்தபோது
தாங்கமுடியாத பாரம் என்னை அழுத்தியது
நான் விசுவாசத்திற்காக ஜெபித்தபோது
சவால்கள் என் முன் வந்தது
அப்போது நான் ஜெபிக்காமலேயே இருந்திருக்கலாமா?
எனக்குள்ளேயே கேள்வியை எழுப்பினேன்.

சோர்வடைந்து, தளர்ந்துபோய் கண்ணீரினால்
என் கண்களை மூடினேன்
ஒரு கட்டத்தில் தேவன் உண்மையாகவே நம்
ஜெபங்களுக்கு பதில் தருகிறாரா? எனக்குள் சந்தேகம்,
ஆனால், சூர்யோதயம் என் பார்வையில்
புதிய தெளிவைக் கொண்டு வந்தது
நிசப்தமான இரவில் என் கேள்விகளை
வாரிக்கொண்டு போனது.

ஏமாற்றங்கள் பொறுமையை வரச்செய்தது
பாரங்கள் பலத்தை இரட்டிப்பாக்கியது
என்னை வாழ்வின் விளிம்பிற்கே தள்ளிய
சவால்களின் ஊடே விசுவாசம் மலர்ந்தது
ஆதலால் நான் அவருக்கு முன்பாகப் பணிந்து குனிந்து
அவர் என் ஜெபத்திற்குப் பதிலளித்தமைக்காகவும்
தம்முடைய ஞானத்தினால் என்னை வனைந்தமைக்காகவும்
அவருடைய பராமரிப்புக்காகவும் நன்றிகளைச் செலுத்துகிறேன்

# இசைக்கருவிகளை பயன்படுத்துவது, வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதா? இல்லையா?

## Instrumental Music : Biblical or Not?

**Charles Box**

நம் ஆராதனையின் மைய நோக்கம் தேவனாயிருக்கிறபடியால் நாம் எப்படி அவரை ஆராதிக்க வேண்டுமென்று அவரே தீர்மானிக்கிறவரா யிருக்கிறார். நாம் அவருடைய கற்பனைகளைப் பின்பற்றவில்லையென்றால், நம் ஆராதனை வீணான ஆராதனையாகிவிடுகிறது. அப்போஸ்தலனாகிய யோவான், தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளு கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்று எழுதியிருக்கிறார் (யோவான் 4:24). தேவனுடைய வார்த்தை எப்போதும் நம் வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

தேவன் நமக்கு குறிப்பிட்ட கட்டளைகளையும் கொடுக்கிறார், பொதுவான கட்டளைகளையும் கொடுக்கிறார். குறிப்பிட்ட கட்டளைகள் என்பது எதைச் செய்யவேண்டுமென்றும், அதை எப்படிச் செய்யவேண்டுமென்றும் சொல்லு கிறது. ஆகவே, நம் விருப்பப்படி செய்ய அனுமதியில்லை. பொதுவான கட்டளை என்பது எதைச் செய்யவேண்டுமென்று சொல்லுகிறது. ஆனால், அதை எப்படிச் செய்யவேண்டுமென்று உங்களைக் கட்டுப்படுத்துவதில்லை. தேவன் நோவாவை பேழையைச் செய்யப் பணித்தபோது குறிப்பிட்ட கட்ட ளையைக் கொடுத்தார் (ஆதி.6:1-14). நோவா தேவனை மகிமைப்படுத்துவதற் கான ஒரே வழி, தேவன் கட்டளையிட்டபடி அப்படியே செய்வதாயிருந்தது. தேவனுடைய பொதுவான கட்டளைக்கு ஓர் உதாரணம், நீங்கள் உலக மெங்கும் போங்கள் என்னும் கட்டளையாகும். இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிய எந்த வழி சிறப்பானதென்று தெரிந்தெடுக்க, நமக்கு உரிமை உண்டு.

ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதா, இல்லையா? புதிய ஏற்பாட்டு ஆராதனையில் தேவன் இசைக்கருவிகளைப் பயன்படுத்துங்கள் (பொதுவான கட்டளை) என்று சொன்னாரா? அல்லது, பாடுங்கள் ( குறிப்பிட்ட கட்டளை ) என்று சொன்

னாரா? தேவன் இசையைப் பயன்படுத்துங்கள் என்று கட்டளையிட்டிருந்தால் ஆராதனையிலிருந்து எந்தவிதமான இசையையும் அகற்ற வேண்டிய அவசிய மில்லை. ஆனால், தேவன் ஆராதனையில் எவ்வகையான இசையைப் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பாகக் கட்டளையிட்டுவிட்டார். அதாவது, பாடல் பாடவேண்டுமென்று குறிப்பாகக் கட்டளையிட்டுவிட்டார். எனவே, இங்கே இசைக்கருவிகளுக்கு இடமேயில்லை. சங்கீதங்களினாலும், கீர்த்தனை களினாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி என்று உள்ளது. (எபே.5:19).

இசைக்கருவிகளைப் பயன்படுத்தக் கூடாதென்று தேவன் எங்கே சொன்னார் என்று கேள்வி எழுப்பப்படுகிறது. ஆனால், நோவாவின் காரியத்தில் தேவன் கொப்பேரு மரத்தினால் ஒரு பேழையை உண்டாக்கு என்று குறிப்பாகச் சொன்னார். அப்படியென்றால், மற்ற மரங்களைப் பயன்படுத்தக்கூடாது என்று தானே அர்த்தம்! நீ கேதுரு மரத்தையோ, கர்வாலி மரத்தையோ, தேக்கு மரத்தையோ பயன்படுத்தாதே என்று சொல்லவில்லை. அதுபோலவே, தேவன் புதிய ஏற்பாட்டு ஆராதனையில் பாடல் பாடுங்கள் என்று குறிப்பிட்ட கட்டளையைக் கொடுத்துவிட்டபடியால், எவ்வகையான இசையையும் அது தடை செய்கிறது. தேவன் ஆராதனையில் பாடலைக் குறிப்பாகச் சொல்லி யிருக்கிறபடியால், நாம் தேவனைப் பிரியப்படுத்த அதைத் தான் செய்யவேண்டும் (எபி.13:15).

ஆராதனை என்பது தேவனுக்கு மரியாதை செலுத்தும் ஒரு செயலாகும். தேவனுடைய வார்த்தையை மதிக்கிறவர்கள் தேவன் கட்டளையிட்டதை மாத்திரம் செய்வார்கள். கிறிஸ்துவின் உபதேசம் புதிய ஏற்பாட்டு ஆராத னையில் இசைக்கருவிகள் பயன்பாட்டைப் பற்றி ஏதாவது போதிக்கிறதா? அதற் கான பதில் இல்லை என்று எல்லோருக்கும் தெரியும். எனவே, நாம் கிறிஸ்து வின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு ஆராத னையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த முடியாது. ஆராதனையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதென்பது தேவனுக்கு விரோதமான செயலாகும்.

உங்கள் ஆராதனை தேவனுக்கேற்ற ஆராதனையாக இருக்க வேண்டு மென்றால் முதலில் நீங்கள் கிறிஸ்தவராக வேண்டும். நீங்கள் கிறிஸ்தவராவ தற்கு முதலில் சுவிசேஷத்தைக் கேள்விப்படவேண்டும் (ரோமர் 10:17) அதை விசுவாசிக்க வேண்டும் (எபி.11:6), மனந்திரும்ப வேண்டும் (அப்.17:30) அறிக் கையிட வேண்டும் (மத்.10:32) இறுதியாக ஞானஸ்நானம் பெற வேண்டும் ( அப்.2:38). ஞானஸ்நானம் பெற்ற பிறகு, தேவனை ஆராதியுங்கள்! ✝

# உண்மையான மார்க்கம்

## *True Religion*

Bill Dillon

இன்று நாம் உலகில் வாழும்போது பலவிதமான மதங்களைப் பார்க்கிறோம்! உலகில் ஏன் இத்தனை மதங்களும், மார்க்கப் பிரிவினைகளும் உள்ளன? இவைகளில் எது சரியானது என்று நமக்கு எப்படித் தெரியும்? மனிதர்களுடைய மனதை அதிகமாகப் பாரப்படுத்தும் கேள்விகளாகவே இவை கள் இருக்கின்றன.

தேவன் இவ்வகையான ஆராதனையில் பிரியப்படுவாரா என்பதைப் பற்றி கவலைப்படாமல், தேவன் எப்படிப்பட்ட ஆராதனையையும் ஏற்றுக் கொள்வார் என்று மனிதன் யூகிக்கும் வரை கர்த்தர் உபதேசிக்காத பலவிதமான மதங்கள் இவ்வுலகில் முளைத்துக் கொண்டு தான் இருக் கும். இன்றைய நவீன மத உலகம் பலவிதமான பிரிவுகளையும், உன் விருப்பப் படி செய் என்னும் மன நிலையையும், தெய்வத்தை துள்ளலோடும், கைத்தட்டலோடும் வணங்கும் முறைகளையும் கொண்டிருக்கிறது. இத்தகைய மத பிரிவுகள் பரபரப் பை ஏற்படுத்தினாலும் இவைகளெல்லாம் பாவமாகும்.

கிறிஸ்தவத்திலிருந்து சற்று மாற்றி அமைக்கப்பட்ட மார்க்கங்கள் மனிதத் தன்மையை ஆரம்பமாகக் கொண்டிருக்கின்றன. அவைகள் அவரவர் வசதியின் மதங்களாயிருக்கின்றனவே தவிர உறுதிப்பாட்டின் மதங்களாயிருக்கவில்லை. அவைகளை இலட்சக்கணக்கான மக்கள் பின்பற்றினாலும் அவர்கள் பொய்யைத் தான் பின்பற்றுகின்றார்கள்.

ஆராதனையின் எல்லா வழிகளும் தேவனிடத்தில் அழைத்துச் செல்லுமா? அவைகள் ஒன்றுக்கொன்று முரண்படும்போது எப்படி அவைகள் தேவனிடத்தில் அழைத்துச் செல்லும்? நித்திய தேவன் நம்மை ஒருபோதும் சந்தேகத்தில் விடவில்லை.

இப்போது கேள்வி என்னவென்றால் எது உண்மையான சபை என்று நமக்கு எப்படித் தெரியும்? இதற்கான பதில், உண்மையான மார்க்கம் வெளிப்படுத்தப்பட்ட மார்க்கமாக இருக்கும். உண்மையான மார்க்கம் மனித சித்தத்தையோ, அல்லது மனித மனமாற்றத்தையோ, மனித ஆசையையோ ஆதாரமாக கொண்டதல்ல. அது நேரடியாக தேவனிடத்திலிருந்து வருகிறது. வெளிப்படுத்தப்பட்ட மார்க்கம் வசீகரமான, துடிப் புள்ள ஒரு தலைவனிடத்திலிருந்து வருவதில்லை. மாறாக, அது தேவனிடத்திலிருந்து வருகிறது.

தேவன் மனித இனத்தோடு பேசும் மார்க்கமே உண்மையான அதாவது வெளிப்படுத்தப்பட்ட மார்க்கமாயிருக்கிறது. வேதாகமம் தன்னைப் பற்றி இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறது. இவ்வுலகில் வேதாகமம் தான் மிகப் பழமையானதும், நம்பகத் தன்மை வாய்ந்த தகவல்களை உள்ளடக்கிய ஒரே புத்தகமாயிருக்கிறது. உண்மையான மார்க்கத்தின் செய்தி நம்மை மெச்சக்கூடிய ஒன்றாகவும், மதக்கற்பனைகளைத் தட்டி எழுப்பக்கூடிய ஒன்றாகவும் இராது. உண்மையான மார்க்கம் மனித மதியீனத்திற்கு தீனியாக அமையாது. அதேபோல் தேவனுடைய சித்தத்திற்கு மேலாக மனித சித்தத்தை உயர்த்தாது. உண்மையான மார்க்கம் மனிதனை மையமாகக் கொண்டதல்ல, மாறாக, தேவனையும் அவருடைய கட்டளைகளையும் மையமாகக் கொண்டிருக்கும்.

மத இருள் நிறைந்த இவ்வுலகில் உயரத்திலிருந்து ஒளிவீசும் வெளிச்சமாக வேதாகமம் திகழ்கிறது. இது மதக்குழப்பங்களினால் உண்டான இருளை அகற்றி மிளிர்கிறது. வேதாகமம் உண்மையுள்ளது, சரியானது. இது நித்திய நாள்வரை மிளிர்ந்துகொண்டேயிருக்கும். ✝

# " இதோ அடியேன், என்னை அனுப்பும் "

# Here Am I, Send Me

Gary C. Hampton

சுவிசேஷகனாகிய பிலிப்புவுக்கு, இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்னும் மன நிலை இருந்தது. சமாரியா பட்ட ணத்தில் பிலிப்புவின் பிரசங்கம் அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அநேகர் கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இருந்தபோதிலும், கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாய்ப் போ என்று சொன்னபோது. அந்தப்படி அவன் எழுந்துபோனான் என்று பார்க் கிறோம் (அப் 8:26,27) இவருடைய இந்தச் செயல் கர்த்தருடைய அழைப்புக்கு, ஏசாயவின் பதிலை நம் நினைவுக்குக் கொண்டு வரு கிறது. யாரை நான் அனுப்புவேன் யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன் (ஏசயா 6:8).

இன்றைக்கு எல்லோரும் பிலிப் புவைப் போலிருந்தால் குறைந்து கொண்டேருக்கும் சபையின் வளர்ச்சி விகிதத்தைக் குறித்துப் பேச வேண்டிய அவசியமேயில்லை! ஒவ்வொரு விசுவாசியும் ரோமாபுரி சபையாருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினவைகளை நினைவில் கொள்ளவேண்டும். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிற எவனும் இரட்சிக்கப்படு வான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள் வார்கள்? அவரைக்குறித்துக் கேள் விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப் பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லா விட்டால் எப்படிக் கேள்விப்படு வார்கள்? அப்போஸ்தலனாகிய பேதுரு பெந்தெகொஸ்தே நாளின் சம்பவங்களை விவரித்துச் சொன்ன போது யோவேல் 2:28-32 வசனங் களை அப்படியே மேற்கோள் காட்டு கிறார். அவருடைய மாபெரும் பிரசங்கத்தால் இருதயத்தில் குத்தப்பட்டவர்களை மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்

நானம் பெறுமாறு அவர் வலியுறுத்தினார் (அப் 2:38).

அப்போஸ்தலனாகிய பேதுரு பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்வதன் ஒரு பகுதியாகும் என்று நினைத்ததில் எவ்வித தவறுமில்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு பிரதான கட்டளையைக் கொடுக்கும் போது சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் ( மாற்கு 16:15, 16 ) என்றார்.

அப்போஸ்தலனாகிய பவுல் ஒருவர் கற்றுக்கொண்ட சத்தியத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வது மிக முக்கியமானது என்று நினைத்தார். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி ( II தீமோ 2:2).

இரட்சிப்பின் செய்தியோடு சபை வெளியே சென்று சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுவது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆதித் திருச்சபை உபத்திரவத்தால் சிதறப்பட்டபோதுகூட, சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப் 8:4). பிலிப்புவை சுவிசேஷத்தை அறிவிக்கப் பணித்தபோது, இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றார். அவருடைய இந்த செயலினால் எத்தியோப்பிய மந்திரி, இயேசுவைப்பற்றிய சத்தியத்தை அறிந்துகொண்டு ஞானஸ்நானம் பெற்று சந்தோஷத்தோடே தன் வழியே போனான். நீங்களும் நானும் எழுந்து போய் நற்செய்தியை அறிவிப்போம் என்று நம்புகிறேன்.

✝

## உண்மையாய்த் தொழுதல்

உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

# மக்களைப் போய் சந்தித்து யாரையாவது தொடுங்கள்

## Reach out and touch someone

Dwight fuqua



அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும், வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக் கொண்டுவா என்றார். ( லூக்கா 14: 23). ஒரு சாதாரண அழைப்பு எங்கே கொண்டுபோய் விடுமென்று ஒருபோதும் நமக்குத் தெரியாது. யாரையாவது ஆராதனைக்கு அழைக்க கொஞ்சம் தைரியமும், சில நிமிடங்களும் தான் தேவை. ஆனால், இந்த சாதாரண அழைப்பு அந்த நபர் சபைக்கு வந்து ஆராதனையில் கலந்து கொள்ளவும், சபையைப் பற்றிக் கற்றுக் கொள்ளவும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவும், வாழ்நாள் முழுவதும் மாபெரும் தேவதாசனாகவும், மற்றவர்களைத் தேவனிடத்தில் அவர் வழிநடத்துபவராகவும் மாற அந்த அழைப்பு வழிவகுக்கக் கூடும்.

ஒரு கூட்டத்தாரிடத்தில் பேசுவது உங்களுக்கு சற்று பயத்தை ஏற்படுத்தலாம். ஒரு தனிநபரிடத்தில் ஆழமான முறையில் வேதபாடத்தை நடத்த உங்களுக்கு சில சிரமம் ஏற்படலாம். ஆனால், உங்கள் குடும்ப அங்கத்தினரையோ, நண்பரையோ, அல்லது தெரிந்தவர்களையோ ஆராதனையில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கலாம். நம்மால் செய்யமுடியாத காரியங்களின் மீது கவனத்தைச் செலுத்துவதைவிட, நம்மால் செய்யமுடிகின்ற காரியங்களின் மீது கவனத்தைச் செலுத்தினால், உங்களால் மற்றவர்களை ஆராதனையில் கலந்து கொள்ளும் படியான அழைப்பு விடுக்க முடியும்!

நாம் ஆராதனைக்கு அழைப்பவர்களில் பெரும்பாலானோர் நம்

அழைப்பை ஏற்றுக்கொள்வதில்லை என்பது உண்மைதான். அதேபோல், பலர், நான் முயற்சிக்கிறேன் என்று நம் அழைப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள். எதுவுமே நடக்காவிட்டாலும் கூட நாம் நட்பை விரும்புகிறோம் என்று நினைத்தக் கொள் வார்களே தவிர எங்களை ஆராதனைக்கு யாருமே அழைக்கவில்லை என்று அவர்களால் சொல்லவே முடியாது.

ஒரு நிமிடம் நில்லுங்கள்! உங்கள் அழைப்பை ஏற்றுக்கொள்ளவும் பாராட்டவும் வெளியே பலர் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்! ஆம் இது உண்மைதான், இதை நம்புங்கள்! சமீபத்திய ஆய்வின்படி, பலர் சபையைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சூழலில் உங்கள் அழைப்பு அவர்கள் எதைத் தேடிக் கொண்டிருக்கிறார்களோ, அதுவாகக்கூட இருக்கலாம் அல்லவா!

சபை வளர்ச்சிடைய வேண்டுமா? சமுதாயத்தில் நம் மதிப்பையும், செல்வாக்கையும் உயர்த்தவேண்டுமா? நீங்கள் அதில் அங்கம் வகிக்க வேண்டுமா? மற்றவர்களை ஆராதனையில் கலந்துகொள்ள அழையுங்கள்! அவர்கள் வீட்டிற்கே சென்று அவர்களை ஆராதனைக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லுங்கள்! அவர்கள் ஆராதனைக்கு வரும்போது அவர் களோடு உட்கார்ந்து பேசுங்கள்! அவர்களை மற்றவர்களுக்க அறிமுகப்ப டுத்துங்கள்! அவர்களுடைய பிரச்சினைகளில் பங்கு பெற்று, அவைகளுக்கு தீர்வுகான உதவுங்கள்! அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள்! வெளியே போய் மக்களைச் சந்தித்து அவர்களுடைய வாழ்வைத் தொடுங்கள்! ஒரு சாதாரண அழைப்பு எங்கே கொண்டுபோய் விடுமென்று ஒருபோதும் நமக்குத் தெரியாது! இதை நம்மால் செய்யமுடியும்!

✝

## விழுந்து போவதற்கான சில காரணங்கள்

| | |
|---|---|
| சாத்தான் | - லூக். 22 : 31 |
| கள்ளப் போதகர்கள் | - அப். 20 : 29, 30 |
| வசனத்தைப் புரட்டுதல் | - II தீமோ 4 : 3 - 4 |
| உபத்திரவம், துன்பம் | - மத். 13 : 21 |
| கீழ்ப்படியாமை | - எபி 3 : 18 - 19 |
| உலக ஆசை | - II தீமோ. 4 : 10 |
| மாம்ச வாழ்க்கை | - ரோமர். 8 : 13 |

# ஏன் சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்ள வேண்டும்?

# why share the gospel?

Dan.R. Owen



நம் பாடத்தின் தலைப்பு சிலருக்கு கேலிக் கூத்தாகக் கூடத் தெரியலாம். ஆனால், நம் முடைய கலாச்சார மனநிலை சுவிசேஷத்தை நாம் ஏன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

நம் கலாச்சாரம் இவ்வுலகின் பாடுகளில் கவனம் செலுத்தி அதிலிருந்து விடுபடும் வழி களில் வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறது. இவ்வுலகில் மனிதப்பாடுகளிலிருந்து விடுப டுவது நல்லது என்பதை எல்லா இடங்களிலு முள்ள எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் இவ்வுலகிற்கு அப்பால் ஒரு வாழ்க்கை உண்டு என்ப தை விசுவாசிக்கின்றனர். ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகளல்ல என்று விசுவாசிக்கிறோம் (ரோமர் 8:18).

அப்படியென்றால், முற்றிலும் மாம்சீக சிந்தையுடைய இவ்வுலகிற்கு தேவ னுடைய மீட்பின் பணியைப் பற்றிய செய்தியை நாம் ஏன் பகிர்ந்துகொள்ள வேண்டும்?

**ஜனங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக இழந்துபோயிருக்கிறபடியால் நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.**

இவ்வுலகில் எல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள். இன்னும் பாவம்

செய்து கொண்டிருக்கிறார்கள். பாவம் மனிதர்களை தேவனிடத்திலிருந்து பிரித்து விடுகிறது. தேவனுடைய நீதி, பாவம் தண்டிக்கப்பட வேண்டும் அல்லது பாவத்திற்குத் தக்க தண்டனை கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறது. பாவத்தின் சம்பளம் நித்திய மரணம். இங்கே இழந்துபோவது என்பது இவ்வுலகில் நம்பிக்கையற்றவர்களும், தேவனில்லாதவர்களுமாயிருப்பது தான் ( எபே 2:12 ). மேலும், இழந்து போவது என்பது நித்திய தண்டனையை எதிர் கொள்வதாகும். எல்லா இடங்களிலும் ஜனங்கள் பாவத்தினால் இழந்துபோயி ருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரே தீர்வு கிறிஸ்துவின் நற்செய்திதான்.

**நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், அது நற்செய் தியாக இருக்கிறது.**

இது இழந்துபோன மனித இனத்துக்கான தேவனுடைய அன்பைப் பற்றிய செய்தியாயிருக்கிறது. சுவிசேஷம் தேவனுடைய அற்புதமான மீட்பின் பணியைப் பற்றிய நற்செய்தியை உள்ளடக்கியது. சுவிசேஷம் என்பது கிறிஸ்துவுக்குள் இருக் கின்ற கிருபை, இரக்கம் மற்றும் மன்னிப்பைப் பற்றிய செய்தியை உள்ளடக் கியதாகும். நம் சிருஷ்டிகராகிய தேவன் அளிக்கும் இந்த அற்புதமான காரியங் களை ஜனங்கள் எப்படி ஏற்றுக்கொள்வதென்று அவர்களுக்கு சுவிசேஷம் சொல் கிறது. சுவிசேஷம் இவ்வுலகில் எப்படி மனிதனும், தேவனும் இணைந்து நடந்து செல்லலாம் என்பதைப் பற்றிய அருமையான தகவல்களை உள்ளடக்கி யதாகும். சுவிசேஷம் தேவனோடு நித்திய ஜீவனைப் பெற்று வாழ முடியும் என்னும் நம்பிக்கையை உருவாக்குகிறது. இருக்கின்ற செய்திகள் எல்லாவற்றிலும் மிகச்சிறந்த செய்தி இதுவாக இருக்கிறபடியால் இதை நாம் நிச்சயமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும்! சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்கு சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன (ஏசாயா 52:17).

**தேவனுடைய வார்த்தை ராஜ்ஜியத்தின் விதையாயிருக்கிறபடியால் நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.**

தேவன் தம்முடைய வார்த்தைகளில்லாமல் வேறு எந்த மார்க்கத்தின் மூல மாகவும் நம் வாழ்க்கையில் கிரியை செய்வதில்லை. மனித இருதயத்தில் தேவ னுடைய வார்த்தை ஏற்றுக்கொள்ளப்படும்போது மாத்திரமே ஒருவருடைய எண் ணங்களையும், செயல்பாடுகளையும் தேவன் தம்முடைய கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறார். நாம் தேவனுடைய வார்த்தையை விதைக்கவேண்டும். ஏனென்றால், ஆவிக்குரிய வாழ்க்கையிலும், சரீரப்பிரகாரமான வாழ்க்கை

யிலும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை தேவனுடைய வார்த்தைக்கு மாத்திரமே உண்டு. தேவன் மனித உயிர்களோடு விதை என்னும் கதவு மூலமாகத்தான் தொடர்பு கொள்கிறார். ஆகவே தான், நம்மால் முடிந்த வரை எல்லா வழிகளிலும் விதையை விதைத்துக்கொண்டே இருக்கவேண்டும். அந்த உவமையின் கருத்தாவது. விதை தேவனுடைய வசனம் ( லூக்கா 8:11 ). நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ வசனத்தைக் கேட்கிறவனும், உணருகிறவனுமாயிருந்து நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார் (மத் 13:23).

**நம் வாழ்க்கையின் நோக்கத்தை உணர நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.**

தேவனுடைய நித்திய நோக்கம் கிறிஸ்துவுக்குள் ஆத்தும இரட்சிப்பாயிருக்கிறது. உயிர்த்தெழுந்த கிறிஸ்து தம்முடைய சபைக்கு பிரதான கட்டளையைக் கொடுத்தார். ஏனென்றால், சுவிசேஷம் உலக முழுவதிலும் பரவவேண்டு மென்பது தேவனுடைய திட்டமாயிருக்கிறது.அந்தப் பொறுப்பை அவர் தம்மு டைய சீடர்களிடம் ஒப்புக் கொடுத்தார். நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் ( மாற்கு 16:15,16). இரட்சிப்பின் செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதில் நமக்குப் பங்குண்டானால், தேவனுடைய நித்திய நோக்கத்தில் நாமும் பங்கு பெறுகிறோம். அது மட்டுமல்ல, தேவனுடைய நோக்கத்தையும் நாம் நிறைவேற்றி விட்டோம். அதாவது, இருள் சூழ்ந்த இவ்வுலகில் ஒளிவீசும்படியாக நாம் விடப்பட்டிருக்கிறோம். இந்த நோக்கத்தை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த மாபெரும் திட்டத்தில் நாம் பங்கு பெறுவதன் மூலமாகத்தான் நாம் இவ்வுலகில் நம் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்ற முடியும்.

**ஜனங்கள் சுவிசேஷமில்லாமல் அழிந்துபோகிறபடியால் நாம் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.**

சுவிசேஷம் இவ்வுலக வரலாற்றில் மிகப்பெரிய செய்தியாயிருக்கிறபடியால் நாம் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை ராஜ்ஜியத்தின் விதையாயிருக்கிறபடியால் நாம் அதைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். மேலும், நம் வாழ்க்கையின் நோக்கத்தை உணர நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஆத்துமாக்கள் நித்தியமாக இரட்சிக்கப்படத்தக்க சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் உண்மையான பணியிலிருந்து உலகம் உங்கள் கவனத்தை சிதறடிக்க நீங்கள் ஒரு போதும் அனுமதிக்க வேண்டாம்.

✝

# நாம் போராட்டத்தில் இருக்கிறோம்!

# We are at war !

Harvey M. Starling



இன்றைய நாட்களில் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய ஊழியக்காரர்கள் உலகத் தோற்றத்திலிருந்தே அப்படித்தான் இருந்து வருகிறார்கள். இப்போராட்டம் அல்லது யுத்தம் உண்மையானது. இந்த யுத்தம் தேவசாயலில் படைக்கப்பட்ட மனிதர்களுடைய ஆத்துமாக்களுக்காகத்தான் நடந்து கொண்டிருக்கிறது.

நரக சேனைகளோடு நாம் சமரசம் செய்துகொள்ள முடியாது. இன்னும் யுத்தம் தீவிரமாக நடந்துகொண்டு தான் இருக்கிறது. சிலர் இந்த யுத்தத்தை நம்மால் வெல்லமுடியாது என்று சொல்கிறார்கள். இந்த யுத்தத்தில் வெற்றிபெற நமக்கு மனித சக்தி, பொருளாதாரம், மரணபரியந்தம் போராடும் திறன் போன்றவைகள் குறைவுபடுகிறது என்று சொல்லுகிறார்கள். இது, அவர்கள் முடிவெடுக்கும் திறன் இல்லாமையால் திணறுவதைக் குறிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் மனித ஞானத்திலும், விவேகத்திலும் நம்பிக்கை வைத்து தேவனுடைய வழிகளை வெறுக்கின்ற உலகத்தோடு சிநேகம் வைக்க விரும்புவதையும் குறிக்கிறது.

இப்போராட்டத்திலிருந்து நாம் வெளியேறவும் கூடாது, அதே நேரத்தில், நாம் தோல்வியை ஒத்துக்கொள்ளவும் கூடாது. இலட்சக்கணக்கான மக்கள் தேவனுடைய ராஜ்யத்தின் தெளிவான எளிய செய்தியைக் காண ஆவலாயிருக்

கிறார்கள். அதே நேரத்தில் சகோதரர்களில் சிலர் ஆத்துமாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேவனுடைய ராஜ்ஜியத்திற்கடுத்த காரியங்களில் ஈடுபடுகிறார்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதைக்குறித்து எச்சரித்தார். ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் ஆத்துமவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத் 10:28) என்று.

தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதற்கு சகோரர்களிடத்தில் காணப்படும் பக்திவைராக்கியத்தையும், திறமையையும் கொண்டு பிராந்திய சபைகள் மூலமாக பெரிய திட்டங்களைத் தீட்டவேண்டும். அதன் பிறகு, தேவனுடைய ராஜ்ஜியத்தின் விதையை விதைப்பதிலும், இவ்வுலகில் ஒவ்வொரு தேசத்திலும் சபைகளைக் கட்டும் முயற்சியிலும் பொறுமையோடு நிலைத்திருக்க வேண்டும்.

முதல் நூற்றாண்டில் ஆதி கிறிஸ்தவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிய சுவிசேஷத்தை அறிவிப்பதில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தினார்கள். இன்றும் நாம் அதே இரட்சிப்பின் செய்தியை இழந்து போன உலகிற்கு எடுத்துச்செல்ல வேண்டும். அதாவது இன்றும் அதே தேவன் இருக்கிறார். அதே சுவிஷேசம் இருக்கிறது. சாத்தானுடனான இந்த யுத்தத்தில் வெற்றி இப்பொழுதும், எப்போதும் நம்வசம் உள்ளது என்ற உறுதியுடனும், அர்ப்பணிப்புடனும் இருக்கும் பலர் இந்த யுத்தத்தில் ஈடுபடுகிறார்கள்.

## இயேசுவின் மரணத்தால் நடந்தவைகள்

1. சபையாகிய ராஜ்ஜியத்தை கிரையமாகப் பெற்றார் (அப்.20:28)
2. யூதர்களையும், புறவினத்தாரையும் ஒப்புரவாக்கினார் (எபே.2:16)
3. பாவங்களை நிவர்த்தி செய்யும் கிருபாதார பலியானார் (I யோவான் 4:10)
4. புதிய பிரமாணத்தை நிலைநிறுத்தும்படியாய், பழையதை மாற்றிப்போட்டார் (எ.பி. 9:15-17;மத்.26:28;எபி.13:20)
5. சாத்தானின் வல்லமையை அழித்தார் (எபி.2:14; I யோவான் 3:8)
6. மரண பயத்திலிருந்த அனைவரையும் விடுதலையாக்கினார் (எபி.2:15)

# ரோமர் 9:30-10:13

Jerry Bates

1. ஏன் புறஜாதியார் நீதியை அடைந்தார்கள்? (வசனம் 30-32).

2. ஏன் யூதர்கள் நீதியை அடையவில்லை? (வசனம் 30-32).

3. யூதர்கள் இடறின இடறுதற்கான கல் எது? (வசனம் 32,33).

4. பவுல் இக்கருத்தை நிரூபிக்க எந்த தீர்க்கதரிசியை மேற்கோள் காட்டினார்? (வசனம் 33).

5. தேவனைப்பற்றி இஸ்ரவேலர்களுக்கிருந்த வைராக்கியம் ஏன் ஒன்றுக்கும் உதவாததாக இருந்தது? (வசனம் 10:2).

6. யூதர்கள் எந்த நீதியை அளவுகோலாகக் கொண்டு பின்பற்றினார்கள்? (வசனம் 10:3).

7. இஸ்ரவேலர்கள் அவ்வளவு பக்திவைராக்கியமாக இருந்தபோதிலும் இழந்துபோனார்கள் என்னும் உண்மை நமக்கு எதைச் சொல்கிறது?

8. விசுவாசிக்கிற எவனுக்கும் ....................................... உண்டாகும்படியாக .......................... நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (வசனம் 4).

9. மேற்சொல்லப்பட்ட வாக்கியம் எப்படி உண்மையாயிருக்கிறது?

10. ஒருவர் நியாயப்பிரமாணத்தினால் எப்படி நீதியை அடையமுடியும்? (10:5).

11. தேவனுடைய வார்த்தை தேவனுடைய ஜனங்களிடத்திலிருந்து எவ்வளவு தூரமாய் இருந்தது?(10:8)

12. தேவன் தம்முடைய ஜனங்களிடமிருந்து எப்படிப்பட்ட செயல்பாட்டை எதிர்பார்க்கிறார்? (10:9).

13. நாம் எதை விசுவாசித்து அறிக்கையிட வேண்டும்? (10:9).

14. ஏன் இந்த வசனம் விசுவாசத்தினாலே மாத்திரம் என்கிற உபதேசத்தைப் போதிப்பதில்லை? (10:10).

15. யூதர்களும், புறஜாதிகளும் இரட்சிக்கப்படும் விதத்தில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? (10:12).

16. கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்பதன் பொருள் என்ன? (10:13).

இப்படியிருக்க நாம் என்ன சொல்லுவோம்? நீதியைத் தேடாத புறவினத்தார் நீதியை அடைந்தார்கள். அது விசுவாசத்தினாலாகும் நீதியே. நீதிப்பிரமாணத்தை தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால் அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை. இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ இடறுதற்கான கன்மலையையும் சீயோனில் வைக்கிறேன். அவரிடத்தில் விசுவாமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று. சகோதரரே இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது. தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறேன். ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவ நீதியை அறியாமல். தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமானத்தின் முடிவாயிருக்கிறார். மோசே நியாயப் பிரமானத்தினலாகும் நீதியைக் குறித்து. இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான். விசுவாசத்தினாலாகும் நீதியானது. கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணும்படி பாதாளத்தக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்றும் சொல்லுகிறதுமன்றி இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும்

சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வாா்த்தையே. என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கைறிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை. எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம் பன்னராயிருக்கிறார். ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் புறஜாதியார் ஏன் நீதியை அடைந்தார்களென்றும், யூதர்கள் ஏன் அடைய வில்லையென்றும் வித்தியாசப்படுத்திக் காட்டுகிறார். அதற்கான காரணம் விசுவாசம் தான். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவர்மீதுள்ள விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கையிடும் யாவரும் இரட்சிப்பை அடையமுடியும். பொதுவாக, யூதர்கள் மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வதினால் இரட்சிப்பை அடைய முயற்சித்தார்கள். அவர்கள் அதிக பக்திவைராக்கியமுடை யவர்களாயிருந்தபோதிலும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதபடியினால் அவர்கள் இழந்துபோனார்கள். இது இன்றைக்கு நமக்கு மிகப்பெரிய பாடமாக இருக்கிறது. இன்றைய நாட்களில் பலர் பல்வேறுபட்ட நம்பிக்கைகளை கைக்கொள்வதினால், தங்கள் நற்கிரியைகளை நீதியாகக் கொண்டு இரட்சிப்பை அடைய முயற்சிக்கிறார்கள்.

---

## தேவனுடைய வார்த்தை

| | |
|---|---|
| வல்லமையுடையது | - எபி. 4 : 12, 13 |
| சுத்திகரிக்கக் கூடியது | - சங். 119 : 1 |
| ஆத்துமாவை சுத்தமாக்குகிறது | - II பேதுரு 1 : 22 |
| ஒருவனைப் பக்தியால் கட்டுகிறது | - அப். 20 : 32 |
| மனந்திரும்பச் செய்கிறது | - மத் 13 : 15 |
| பூரணமானது | - யாக். 1 : 25 |
| முழுமையானது | - II தீமோ. 3 : 16 - 17 |
| ஒழிந்து போகாதது | - மத். 24 : 35 |

# ஆராதனை
# Worship

Shan Jackson

**பே**சப்பட்ட வார்த்தைகள் மனதில் சித்திரங்களை வரையும் என்பதை நாமெல்லாரும் அறிந்திருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன், யாராவது நம்மைப் பார்த்து நாய் என்று சொல்லிவிட்டால் ஒரு நாய் நம் கண்ணில் வந்து விடுகிறது. அல்லது அதுபோன்ற வார்த்தைகளை யாராவது நம்மைப் பார்த்துப் பேசிவிட்டால் நம் கண்களில் அதுபோன்ற சித்திரங்கள் வந்து நிற்கிறது. உயிரற்ற பொருள்களைப் பற்றி யாராவது சொன்னால் கூட அவைகளும் நம் கண்களுக்கு முன்பாக வந்து நிற்கிறது. நம் பக்திரீதியிலான வளர்ப்புமுறை அல்லது நிகழ்கால புரிந்துகொள்ளுதலைப் பொறுத்து ஆராதனை என்றால் என்ன என்பதைப் பற்றிய மனச்சித்திரம் நமக்குத் தோன்றும்.

நான் கிறிஸ்துவின் சபையில்தான் வளர்க்கப்பட்டேன். ஆராதனை என்னும் வார்த்தையை நம் மனதில் தோன்றச் செய்யும்போது. ஒரு பிரசங்கியார் பிரசங்க மேடையிலிருந்து பிரசங்கிப்பதையும், மக்கள் இருக்கையில் அமர்ந்துகொண்டு வேதாகாமத்தை தங்கள் மடியில் வைத்தபடியே அதைப் புரட்டுவதும் தான் என் கண்களுக்கு முன்பாகக் தோன்றுகிறது. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்போது, குறிப்பாக அப்பம்பிட்கும் போதும். திராட்ச ரசத்தைப் பருகும்போதும் சோக முகத்தோடும், பாடல் பாடும்போது சந்தோஷமான குரலையும் நம்மால் கேட்கமுடிகிறது.

ஆராதனை என்றால் நம்மெல்லாருக்கும் ஒரு விதமான மனச்சித்திரம் மனதில் தோன்றும். நாம் எந்தப் பின்னணியில் வளர்ந்தோமோ அதைப் பொறுத்து ஆராதனை என்பது பாரம்பரியமான ஆராதனைமுறை அல்லது சடங்காச்சார ஆராதனை முறை, அங்கி உடுத்திய மதக்குருக்கள் போன்ற வைகள் நம் கண்களுக்கு முன்பாகத் தோன்றும். நீங்கள் ஒருவேளை அற்புத அடையாளங்கள் செய்வதாகச் சொல்லிக்கொள்ளும் பெந்தெகொஸ்தே சபை களில் வளர்க்கப்பட்டிருந்தால் பலர் கைகளை உயர்த்தி, கண்களை மூடி,

கைகளைத் தட்டி, பலர் ஆமென் அல்லேலூயா என்று சத்தமிடும் காட்சிகளை உங்கள் கண்களில் கொண்டு வருவீர்கள். ஒரு வேளை சிலருக்கு ஆராதனை என்னும் வார்த்தையைக் கேட்கும்போது ஒரு சபை கூட்டத்தில் ஜனங்கள் அமைதியாக உட்கார்ந்திருப்பதையும், அவர்கள் தலை குனிந்து ஜெபித்துக் கொண்டு, அல்லது தியானித்துக் கொண்டிருப்பதையும் தான் நம் மனக்கண்களுக்கு முன்பாகக் கொண்டு வருவோம்.

ஆராதனை இப்படியாக இருக்குமென்று ஜனங்களிடத்தில் வேறுபட்ட எண்ணங்கள் நிலவுகின்றன. ஆராதனை என்பதற்கான பொருளை விவரித்துச் சொல்வது நமக்குப் போதுமானது என்று நான் நினைக்கிறேன். நாம் ஆராதிக்கும் போது என்ன செய்கிறோம்? ஆராதனையின் பங்குகளான ஜெபம் மற்றும் பாடலின் போது நாம் என்ன செய்கிறோம்?

ஆராதனை என்பது ஏதோ ஒன்றிற்கு முழுமையான மதிப்பை செலுத்துவதாகும். ஒரு பொருளுக்கோ, ஒரு நபருக்கோ அல்லது ஒரு தெய்வத்துக்கோ ஆராதனை ஏறெடுக்கப்பட்டாலும் -ஆராதனை என்பது எல்லா வற்றிற்கும் மேலாக ஒன்றிற்கு மதிப்பைக் கொடுப்பதாகும். தேவனை நாம் ஆரா திக்கும்போது அவர் எல்லாரையும் விட மதிப்பு மிக்கவர் என்பதை நாம் அறிவிக் கிறோம். மேலும், தேவனை ஆராதிப்பதென்பது பொன், வெள்ளி ஆபர ணங்கள், வீடுகள், நிலங்கள் மற்றும் எல்லாவற்றையும் விட அவர் மேலானவர் என்பதை ஒத்துக்கொள்வதாகும். நாம் தேவனை ஆராதிக்கும் போது அவரு டைய வல்லமை, வரலாற்றில் இடம்பெற்ற சகல ராஜாக்கள், ஜனாதிபதிகள் மற்றும் தலைவர்களுடைய வல்லமையை விட மேலானது என்று நாம் சொல் லுகிறோம். நாம் தேவனை ஆராதிக்கும் போது அவருடைய பரிசுத்தத்தின் மகிமை சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் மகிமையை விடச் சிறந்தது என்று நாம் காட்டுகிறோம். தேவனை நாம் ஆராதிக்கும்போது அவரோடு ஒன்றையும் ஒப்பிடமுடியாது என்று நாம் சொல்கிறோம். அவர் எல்லாவற்றை யும் விட மேலானவரும், பெரியவருமாயிருக்கிறார். இப்பிரபஞ்சத்திலுள்ள எந்த ஒரு சிருஷ்டியின் மகிமையும் நம் சர்வ வல்லவருடைய மகிமைக்கு ஒப்பான வைகளல்ல.

**ஆராதனை சம்பந்தமாக வேதாகமம் இப்படி அறிவிக்கிறது:**

கர்த்தாவே தேவரீர், மகிமையையும், கனத்தையும் பெற்றுக் கொள்ளு கிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர். நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்.உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்ட வைகளுமாயிருக்கிறது என்றார்கள் (வெளி.4:11).

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத் தையும் பெற்றுக்கொள்ள பாத்திரமாயிருக்கிறார் என்று சொன்னார்கள் (வெளி. 5;12).

தேவன் ஒருவரே நம் துதி. அவர் என்ன செய்திருக்கிறார் என்பதற்காக அவர் பாத்திரராயிருக்றார். ஆனால், ஆராதனை என்பது ஏதோ ஒன்று மற்றெல்லா வற்றையும் விட மேம்பட்டதாயிருக்கிறது என்பதற்காகச் செய்யப்படும் தனிப்பட்ட தீர்ப்பல்ல. நாம் அதன்மீது ஆசைப்பட்டு அதைப் பின்தொடர வேண்டும். இதைப்பற்றி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, இப்படியாகச் சொல்லுகிறார். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும்,உன் முழு ஆத்துமா வோடும். உன் முழு மனதோடும் உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக (மாற்கு 12 ; 30). ஆராதனை என்பது ஏதோ ஒன்றிற்கு நாம் அதிக மதிப்புக் கொடுத்து நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் அதற்காகக் கொடுப்பதாகும். மேலும், ஆராதனை என்பது தேவனுடைய காரியங்களைப் பொக்கிஷமாக வைத்து அதற்காக நம்மிடமுள்ள எல்லாவற்றையும் கொடுப்பதாகும். ஆராதனை என்பது தேவனை அறிந்துகொள்வதற்காக என்னவெல்லாம் செய்யவேண்டுமோ, அவைகளையெல்லாம் நான் செய்வேன் என்னும் மனநிலையாகும்.

இப்போது நான் உங்களுக்கு முன்னே ஒரு கேள்வியை வைக்கிறேன். தேவனல்லாத ஒருவரையோ அல்லது ஒன்றையோ ஆராதிப்பது சாத்தியமா?

ஒன்றும் தெரியாதவர்கள்கூட இது சாத்தியம் என்று தான் சொல்வார்கள் உண்மையில் சொல்லப்போனால் இவ்வுலகில் ஒவ்வொருவருமே ஏதோ ஒன்றை ஆராதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஏனென்றால், தேவன் நம்மெல்லோரையும் ஆராதிப்பவர்களாகவே படைத்திருக்கிறார். நாம் தேவனை ஆராதிக்க மறந்தாலும் கூட வேறு ஏதாவது ஒன்றை ஆராதிக்க நாம் தூண்டப் படுவோம். எனவே, இங்கே கேள்வி என்வென்றால், நாம் ஆராதிக்கறோமா? என்பதுதான் (ரோமர் 1; 21 - 25).

நம்மில் பெரும்பாலானோர் மதசார்பற்ற சமுதாயத்தில் வாழ்கிறபடியால் சிலர் வெளிப்படையாகத் தங்கள் பக்தியை வெளிப்படுத்தாமலிருக்கலாம். ஆனால், நம் கலாச்சாரம் பணம், வெற்றி, அழகு, ஆரோக்கியம், பொழுது போக்கு போன்றவைகள் ஆராதிக்கும்படியாகத் தூண்டுகிறது. நம் வாழ்க்கை எதைச் சுற்றிலும் இருக்கிறதோ, நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அதன் அடிப்படையாகவே நாம் நம்மை நாமே ஆராதிப்பவர்களாக இருக்கிறோம். அதாவது, நம்முடைய நலன் , நம்முடைய சந்தோஷம் போன்ற

வற்றைக் குறித்து சதா சிந்திக்கும்போது நம்மை நாமே ஆராதிப்பவர்களாக இருக்கிறோம். எனவே, தேவனை ஆராதிக்கும்படியாக நமக்குள், தேவனால் கொடுக்கப்பட்ட உத்வேகம் திரிக்கப்பட்டு, மனிதன் தன்னைத்தானே உயர்த்தி இப்பிரபஞ்சத்தின் நடுவில் வைத்து அவன் தன்னைத்தானே ஆராதிக்க வழிவகுத்தது.

ஆகையால், நாம் கேட்கவேண்டிய கேள்வி ; நாம் எப்படி அவரை ஆராதிக்கிறோம்? என்பது தான். எவ்வகையான ஆராதனை தேவனைப் பிரியப்படுத்துகிறது? முதலாவது, உண்மையான ஆராதனை இருதயத்திலிருந்து வருகிறது. தேவனுக்குப் பிரியமான ஆராதனை என்பது இருதயம் பொங்கி வழியும் ஆனந்தமான நிலைதான் (யோவான் 4;19 ; 24), இதன் பொருள் என்ன? இதன் பொருள் நாம் தேவனை ஆராதிக்கும் போது நாம் எங்கே இருக்கிறோம் என்பதையெல்லாம் தேவன் பார்ப்பதில்லை. வெளிப்புறமான சூழ்நிலைகளை வைத்து நாம் அவரை ஏமாற்ற முடியாது. மாறாக, அவர் நம் இருதயங்களில் பிரியப்படுகிறார், நம்முடைய மார்க்கம் வெளிப்புறமாக இருந்தால் நாம் சடங்காச்சார அடிப்படையில் காரியங்களைச் செய்தால் நம் செயல்பாடுகள் நன்றாக இருந்தாலும் கூட அது ஆராதனை அல்ல.

நாம் இருதயத்திலிருந்து ஆராதிக்காவிட்டால் அது எதையும் சாதிக்காது. அது வெறும் பொழுதுபோக்காகத்தான் இருக்கும், இருதயத்திலிருந்து ஆராதனை ஊற்றெடுத்து வராவிட்டால் அது வெறுமையானதும் மதிப்பற்ற ஒன்றாகவும் தான் இருக்கும். தேவன் ஒருபோதும் பொய்யான ஆராதனையை விரும்புவதில்லை. அவர் எப்போதும் உண்மையான ஆராதனையத் தான் விரும்புகிறார். அதற்கு அவர் பாத்திரராயிருக்கிறார்.

தேவனை இருதயத்திலிருந்து ஆராதிப்பவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறவர்களாக இருக்கவேண்டும். அது தான் அவருக்குத் தேவை. நாம் இருதயத்திலிருந்து அவரைஆராதிக்காவிட்டால் நாம் செய்யும் மற்ற காரியங்களெல்லாம் ஒரு பொருட்டாக இருக்காது. நாம் பாடல் பாடும் போதும், ஜெபிக்கும்போதும் நம் இருதயம் உற்சாகமற்றதாக இருந்தால் அல்லது அரைகுறை மதையிருந்தால் நாம் தேவனுக்கேற்ற ஆராதனையை ஏறெடுக்க முடியாது.

ஆராதனை வேளையில் நம் சரீரமும், வாயும் எந்நிலையில் இருக்க வேண்டுமோ அந்நிலையில் இருக்காவிட்டால் அதாவது நாம் பாடல்களைப் பாடும்போது நம் செவிகள் கேட்கின்றன, முகங்கள் புன்னகை பூக்கின்றன. ஆனால், நம் இருதயங்களில் ஈடுபாடு இல்லாவிட்டால் அது வீணான

ஆராதனையாகிவிடும்.

நம் ஆராதனைக்குத் தடையாக இருக்கும் மற்றுமொரு காரியத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நாம் செய்கின்றவைகளெல்லாம் ஒரு பிரச்சனையே அல்ல என்று நினைத்தால் நாம் களையவேண்டிய காரியங்கள் எதுவுமில்லாமல் ஆராதனையை வளப்படுத்தவோ, மேம்படுத்தவோ இல்லாமல் போய்விடும். மேலும், நாம் தேவனிடம் அறிக்கையிடாத பாவங்கள் தடைகளாக வந்து நிற்கும். அப்போது நாம் தேவனை இருதயத்திலிருந்து ஆராதிக்கமுடியாதபடி அறிக்கையிடாத, மனந்திரும்பாத பாவங்கள் வந்து நிற்கும். நம் இருதயம் தேவனுக்கு முன்பாக கடினப்படும் போது தேவனை ஆராதிக்க முயற்சி செய்வது பிரயோஜனமற்றதாகும். அப்போது நாம் எவ்வளவு பெரிய ஜெபத்தை ஏறெடுத்தாலும் எதுவும் மாறுவதில்லை. நாம் இருதயத்திலிருந்து கீழ்ப்படியாவிட்டால், இருதயத்திலிருந்து ஆராதனையையும் ஏறெடுக்க முடியாது.

ஆனால், நம் இருதயம் தேவனுக்கு விரோதமாகக் காணப்படவில்லை என்பது என்ன ? கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் உங்களுக்கும் மற்றொருவருக்கும் இடையில் காணப்படும் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமென்றால் எப்படி ? நாம் தேவனை ஆராதிப்பதற்கு முன்பாக நமக்கு யாரிடம் பிரச்சனை இருக்கிறதோ அவர்களிடம் போய் ஒப்புரவாகி விட வேண்டும் அதேபோல் நமக்கும், வேறொருவருக்கும் ஒரு பிரச்சனை இருக்குமானால், நாம் தேவனை, ஆராதிப்பதற்கு முன்பாக நமக்கு யாரிடம் பிரச்சனை இருக்கிறதோ அது காலப்போக்கில் சரியாகி விடுமென்று நாம் காத்திருக்கக் கூடாது. ஒப்புரவாகுதல் என்பது உண்மையான ஆராதனைக்கு முன்பு அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது. இதற்கான இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள். ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைக் செலுத்த வந்து உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகிப்பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து (மத்.5 ; 23 , 24).

நம்முடைய இருதயத்தில் யாரோ ஒருவர் அல்லது ஏதோ ஒன்று முதலிடத்தைப் பிடித்தால், நாம் ஆவியோடும், உண்மையோடும் தேவனை ஆராதிக்க முடியாது. காரியங்கள் இப்படியாக இருக்குமானால் தேவன் விரும்புகிறபடி ஆராதனையை ஏறெடுப்பது இயலாத காரியம். ஏனென்றால் முதலிடத்தை யாருக்குக் கொடுக்கிறோமோ அவரே நம் இருதயத்தில் வாசம் செய்கிறார். எனவே, நாம் முதலிடத்தைத் தேவனுக்குக் கொடுக்க வேண்டும்.

**கடைசியாக, நாம் ஏன் ஆராதிக்க வேண்டும்?**

அதற்குப் பல காரணங்கள் உண்டு. தேவன் நாம் ஆராதிக்க வேண்டுமென்று அவரே அழைப்பு விடுகிறார். மேலும், கட்டளையிடுகிறார். ஆராதனை என்பது பிரதானமாக தேவனுக்கான ஒன்றாகவும், நம்மை உற்சாகப்படுத்தும் ஒன்றாகவும் இருக்கிறது. மேலும், உண்மையான ஆராதனை நம் ஜீவியத்தில் மாற்றத்தைக் கொண்டுவருகின்ற ஒன்றாக இருக்கிறது, ஆவியோடும், உண்மையோடும் கூடிய ஆராதனை இருதயத்திலிருந்து வரும். ஆராதனை நிச்சயமாக நம் வாழ்வினில் மாற்றறைத்தை நாடச்செய்கிறது. நாம் எதை ஆராதிக்கிறோமோ அதுவாகவே மாறிவிடுவது மனித இயல்பாக இருக்கிறது. நாம் எதற்கு அதிக மதிப்புக் கொடுத்திறோமோ அதுவாகவே நாமும் மாறிவிடுகிறோம். தேவனை ஆராதிப்பவர்கள் கிறிஸ்துவின் மூலமாக தேவ சாயலை அடைந்து விடுகிறார்கள். ஆராதனையில் தொடர்ந்து நம் இருதயத்தை, தேவனை நோக்கித் திருப்புகிறவர்களாக இருந்தால் கர்த்தருடைய கிருபையில் அவருடைய சாயலைத் தரித்துக் கொள்ளுகிறவர்களாகவும் அவருடை ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களுமாயிருப்போம். தேவனுடைய திவ்ய சுபாவத்தை நாம் எவ்வளவு அதிகமாக தியானிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அவரை உயர்த்துவோம்.

தேவனை ஆராதிப்பது நம் ஆசையாகவும், கடமையாகவும் இருக்கிறது. தேவன் ஆவியாயிருக்கிறார் என்று இயேசுகிறிஸ்து நினைவுபடுத்துகிறார். எனவே, அவர் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளப்படவேண்டும். நம் ஆராதனை சரியான மன நிலையோடு அதாவது ஆவியோடு இருக்கவேண்டும். மேலும், ஆராதனை உண்மையோடும் அதாவது தேவனுடைய வார்த்தையின்படி இருக்க வேண்டும். உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவரும் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் (யோவான் 4:23).

## இதை அறிந்திருக்கிறோமா ?

| | |
|---|---|
| பூமியும், அதின் கிறைவும் கர்த்தருடையது | - சங். 24 : 1 |
| நாம் உக்கிராணக்காரர்கள் | - I பேதுரு 4 : 10 |
| உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாயிருக்க வேண்டும் | - I கொரி. 4 : 2 |

# நாம் பாட வேண்டுமா?
# Must We Sing?

Mike Hinton



ஆராதனையில் எந்தப் பகுதியை அதிகமாக விரும்புகிறீர்கள் என்று நீங்கள் என்னிடம் கேட்டால் பாடல் என்று உடனடியாக என் பதில் வரும். சகோதரிகளோடு சேர்ந்து தேவனை துதித்துப்பாடுவது சிறுவயதிலிருந்தே எனக்குப் பிடித்தமான காரியம். ஆனால், ஒரு கட்டத்தில் அதாவது என் இளமைப்பருவம் மலர்ந்தபோது என் குரலில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. என் குரல் மென்மையான நிலையிலிருந்து சற்று கரடுமுரடான நிலைக்கு மாறியபோது நான் பாடலில் ஈடுபாடில்லாதவனாகக் காணப்பட்டேன். அக்குறுகிய காலம் தவிர மற்ற நாட்களில் நான் எப்போதுமே பாடித் துதிக்கவே விரும்புவேன். ஆனால், அக்குறுகிய காலத்தில் நான் என் விசுவாசத்தின் மீது பாடல் கொண்ட தாக்கத்தை முற்றிலுமாக உணரத் தவறினேன்.

ஆராதனையின் ஒரு பங்காக பாடல் இருப்பதால் நாம் பாட வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறபடியால் நான் பாடினேன் ( எபே.5:19; கொலோ.3:16 ). அக்கட்டளையில் இடம்பெற்றிருக்கிற எல்லா நோக்கங்களையம் முழுமையாகப் புரிந்துகொள்வதற்கே பல வருடங்கள் ஆயின. நம் சிருஷ்டிகர்த்தர் நம் மனதின் சிக்கல்களை முழுமையாகப் புரிந்து கொள்கிறார். நம்முடைய திறமைகளை எப்படி மேம்படுத்த முடியுமென்றும், அவைகளை எப்படி முழுமையாகப் பயன்படுத்த முடியுமென்றும் அவருக்கு நன்றாகவே தெரியும். பொதுவாகப் பார்த்தால் சில உண்மைகளையும், தகவல்களையும் பாடல் வடிவத்தில் கொடுத்தால் அது எளிதில் நினைவில் தங்கும்.

இதை உங்களுக்கு விபரமாக விளக்கும்படி முப்பது வருடங்களுக்கு முன்பு நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகி

றேன். 2005 நவம்பர் 10-ல் ஒரு கப்பல் நீரில் மூழ்கி முப்பதாவது ஆண்டு விழா வைக் கண்ட நாள். அக்கப்பலுக்குப் எட்மண்ட் பிட்ஜெரால்டு என்று பெயர் சூட்டப் பட்டிருந்தது. அக்கப்பல் WHITE FISH விரிகுடா என்னும் பகுதி அருகே பயங்கர மான சூறாவளிக் காற்றினால் மூழ்கிப்போனது. அதிலே பயணம் செய்த 29 பேரும் இரும்புத்தாது 26,000 டன்களும் மூழ்கிப்போனது.

கடந்த முப்பது வருடங்களில் நூற்றுக்கணக்கான கப்பல் சேதங்களை நான் செய்தித்தாள்களில் வாசித்திருக்கிறேன். அவைகளில் சில கப்பல் விபத்துக்கள் மிகப் பெரிய உயிரிழப்புகளை ஏற்படுத்தியிருந்தாலும் கூட ஒருசில சம்பவங்களையே என் னால் விபரமாகச் சொல்ல முடியும். ஆனால், இந்த எட்மண்ட் பிட்ஜெரால்டு கப்பலைப் பற்றிய விபரங்களை எவ்வித யோசனையுமின்றி உடனடியாகச் சொல்ல முடியும். ஏனென்றால், அச்சம்பவம் என் நினைவினில் எப்போதும் நிறைந்திருக்கிறது.

இக்கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் சிலரில் அக்கப்பல் சேதத்தைப் பற்றிய காரியங்களை நான் எப்படி இவ்வளவு தெளிவாக நினைவில் வைத்திருக் கிறேன் என்பதை அறிவீர்கள். இச்சம்பவத்தை அடிப்படையாக வைத்து உரு வாக்கப்பட்ட நாட்டுப்புறப் பாடல் 1976 - ல் Gordon Light Food - ஆல் பாடப் பட்டது. அப்பாடலை நான் அடிக்கடி கேட்டபடியால் அச்சம்பவம் என் நினைவில் பசுமையாகவே இருக்கிறது.

அதே விதி, அதாவது பாடல் முறை. வேதாகமத்தின் புத்தகங்களை, பன்னி ரெண்டு அப்போஸ்தலர்களின் பெயர்களை, எண்ணற்ற வேதாகமக் கதைகளைச் சுற்றியுள்ள அடிப்படை உண்மைகளை மனப்பாடம் செய்ய எனக்கு உதவியது. இச்சம்பவங்களை என்னால் வாசிக்கமுடியும். வேதாகமத்தை விளக்குகின்ற பிரசங்கங்களை, வகுப்புகளை என்னால் கேட்கமுடியும். ஆனால், எதுவுமே பாடல் வடிவத்தில் இருப்பதுபோல் இல்லை. ஏனென்றால், ஒரு சம்பவம் பாடல் வடிவத்தில் இருக்கும்போது அது நம் மனதிலிருந்து ஒருபோதும் நீங்காது.

இன்றைய நாட்களில் ஆராதனையில் பாடல் வேளையில் பெரும்பாலான ஜனங்கள் வாய்மூடி மௌனிகளாகவே இருப்பதுபோல் தெரிகிறது. அநேகர் வாயைத் திறந்து தேவனைத் துதித்துப் பாட மறுக்கிறார்கள். அவர்கள் இப்படிச் செய்யும்போது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை ஏறெடுக்காமல் அடக்கி வைக்கிறார்கள். நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியைச் செலுத்தும் படிக் குக் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (எபி.13:15). அதுமாத்திரமல்ல, அவர்கள் தங்கள் விசுவாசத்தை மிகச்சிறந்த ஊக்கியாகப் பயன்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள மறுக் கிறார்கள். நாம் பாடும் பாடல்கள் வெறும் வார்த்தைகளை உள்ளடக்கியதல்ல. அவை கள் ராகத்துடன் கூடிய ஆத்தும ஆதாய சக்திகளாகும். நான் ஆவியோடும், விண் ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன் (I கொரி. 14:15). ✝

# பாதம்
# The Foot

Owen Cosgrove

குவைத் நாட்டை காலிசெய்த பிறகு பிடிபட்ட ஈராக்கிய இராணுவ வீரனைப் பார்த்து ஒரு பெண் தன் கையில் காலணியைப் பிடித்துக் கொண்டு சத்தமாகக் கதறினாள்.

அப்போது, அங்கே நின்றுகொண்டிருந்த செய்தி வர்ண னையாளர், அப்பெண், நீ என் காலணி, நீ என் காலணி என்று கத்தியதாகச் சொன்னார். மேலும், அந்தச் செய்தி வர்ணனையாளர், கிழக்கத்திய நாடுகளில் ஒருவர் மற்றவரைப் பார்த்து நீ என் காலணி என்று சொல்லுவது மிகப் பெரிய அவமானச் சொல் என்று சொன்னார். மேலும், பெரும் பாலான கிழக்கத்திய கலாச்சா ரங்களில் பாதம் அல்லது கால் என்பது சரீரத்தின் அருவருப்பான உறுப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்த ஒரு அரபு மாணவன், அமெரிக்கர்கள் தங்கள் சட்டையைத் துவைக்கும் அதே தண்ணீரைக் கொண்டே தங்கள் காலுறையைத் ( Socks ) துவைப்பதைக் கற்பனை செய்து பார்க்கவே முடியாது என்று சொன்னார். நம்முடைய கலாச்சாரத்தில்கூட காலணிகள் தரக்குறைவாகப் பார்க்கப்பட்டு வெளியே கழற்றிவிடப்படுகிறது. ஆனால், சில நாடுகளில் அது மிகவும் அருவருப்பாகப் பார்க்கப்படுகிறது.



பாதங்களைப் பற்றிய மனநிலை: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாதங்களைத் தன் கண்ணீரால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து, பரிமளத் தைலத்தைப் பூசின ஸ்திரீயின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது ( லூக். 7:36-49 ). மேலும், மனுஷரால் மிதிக்கப்பட்டு வெளியே கொட்டப்படும் இழிவான மதத்தின் மதிப்பற்ற நிலையைக் காட்டுகிறது ( மத்.5:13 ). இது சுவிசேஷத்தைத் தள்ளுபவர்களைப் பற்றிய தேவனுடைய மனநிலையை நமக்கு நினைவுபடுத்துகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களை ஊழியத்திற்கு அனுப்பும்போது, **எவனாகிலும் உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால் அந்த வீட்டையாவது, பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும் போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள்** என்றார் (மத் 10 ; 14) இதிலிருந்தே சுவிசேஷத்தைத் தள்ளுகிறவர்களை தேவன் எவ்வளவாய் அவமதிக்கிறார் என்பது தெரிகிறது.

மேலும், பாதம் என்பது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவினதால், அந்தத் தாழ்மையான ஊழியத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது ( யோவான் 13:1-17 ). அதே நேரத்தில் பாதம் என்பது சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள் மீது தேவன் கொண்டிருக்கும் உயர்வான எண்ணத்தையும் வெளிப்படுத்துகிறது. **சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்** என்று சொல்லப்பட்டிருக்கிறது (ரோமர் 10:15).

பாதத்தின் தாழ்வான நிலை தேவன் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்துவின் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி அவரை முதன்மையானவராக ஏற்படுத்தினதை நினைவுபடுத்துகிறது. கிறிஸ்துவின் பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்குக் கூட தான் பாத்திரனல்ல என்று சொல்லியிருக்கிறார் யோவான் ( யோவான் 1:27 ). பாதம் என்பது உயர்வான ஒன்றாக நம்மால் பார்க்கப்படாவிட்டாலும்கூட, அது இல்லையென்றால், நாம் ஊனமுற்றவர்களாகத்தான் இருப்போம். எனவே, நாம் பாதங்களிலிருந்து மற்றுமொறு பாடத்தைக் கற்றுக்கொள்கிறோம். சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பும் மிக முக்கியமானதாகும் ( I கொரி. 12:22-24 ). பாதத்தைப் போல் அதிகமாகப் புறக்கணிக்கப் படுகிறதாகவும், முக்கியமற்றதாகவும் கருதப்படுகிற ஒன்றிலிருந்து காரியங்களைக் கற்றுக் கொள்வது ஆச்சரியமாயிருக்கிறதல்லவா?

✞

# நான் அடைந்துவிட்டேன் !

(வெளிப்படுத்தின விசேஷம் 3:17,18)

## I Have Got It Made!

Mike Sinapiades

**ந**ண்பா, நான் எல்லாவற்றையும் அடைந்துவிட்டேன்! ஆம், நண்பா நீ, எல்லாவற்றையும் அடைந்துவிட்டாய்.ஆனால், நீ எவைகளை அடைந்து விட்டாய்? என்னிடம் பணம், உடைமைகள் கௌரவம், அதிகாரம் போன்ற வைகள் உள்ளன. என்னால் இன்னும் சிலவற்றைச் சொல்லமுடியும். ஆம் நண்பா, இப்போது உன்னிடம் இருக்கிறவைகளெல்லாம் இவ்வுலகத்திற்குரியது. மேலும், இப்போது உன்னிடம் இருக்கிறவைகளை உன்னால் நீ இவ்வுலகத்தை விட்டுப் பறந்து செல்லும்போது எடுத்துச் செல்ல முடியாது. அதேபோல் ஆறடி நிலத்தில் உன்னை மூடும்போது இவைகள் உனக்குப் பயன்படாது. நீ இவ்வுலகத்தை விட்டுக் கடந்துபோகும்போது உனக்கு என்ன நடக்கும்?

இவ்வகையான சிந்தனை ஒரு நபரை என் நினைவுக்குக் கொண்டு வருகிறது. நான் ஒன்று செய்வேன் என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும், என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது நீ இளைப்பாறி புசித்துக் குடித்து பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான் (லூக்கா 12:18:19).

பூமிக்குரிய வாழ்க்கையில் வியாபாரத்தில் சிறந்து விளங்கி ஆஸ்திகளைப் பெருக்கின அந்த மனிதனுக்கு இப்படிப்பட்ட சிந்தைகள் பொருத்தமாக இருக்கும். ஆனால், ஆத்துமாவுடைய மனிதனுக்கு இது பொருந்தாது. ஏனென்றால், இவ்வுலகப் பொருள்களால் ஆத்துமாவை திருப்திப்படுத்தவே

முடியாது அப்படித்தானே? பழங்கால எப்பிக்கூரர்கள் தங்கள் வாழ்க்கைத் தத்துவமான புசித்து, குடித்து, பூரிப்பாயிரு என்பதைப் பின்பற்றினதால், ஏதாவது நித்திய நன்மையை அடைந்தார்களா? இந்த மதியீனமான ஐசுவரியவான் போன்றோர்க்கு இவ்வுலகத்தில் அவர்களால் சேர்க்கப்பட்ட ஆஸ்திகள் எப்படி பிரயோஜனப்படும்?

மனிதன் இப்பூமிக்குரிய பொக்கிஷங்களால் நிரப்பப்பட்டாலும் கூட இவ்வு லகம் கொடுக்கும் மிகச் சிறந்தவைகளால் கூட அவனுடைய நித்திய ஆவி திருப்பதியடையாது என்பது வாழ்க்கையின் வாஸ்தவமாகிவிடுகிறது. துரதிஷ்ட வசமாக மனிதனுடைய இந்தத் தவறு காலங்காலமாகத் தொடர்ந்து வருகிறது. மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதை மறந்து விடுகிறான் (மத் 4:4). இந்தப் பூமிக்குரிய வஸ்துக்களெல்லாம் கொஞ்சகாலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போல மறைந்து போகிறது. (யாக்கோபு 4:14).

எப்போதுமே மனிதன் மின்னும் பொன் தன் இதயத்தை இதமாக்கு மென்றும், கைநிறைய வைரம் தன் வறண்ட நாவின் தாகத்தைக் தணிக்கும் என்றும் திரளான ஆஸ்திகள் சோர்ந்து போன தன் கண்களுக்கு புத்துயிர் கொடுக்குமென்றும் கற்பனை செய்துகொண்டிருக்கிறான். உலகப் பொருள் களை அதிகமாக வைத்திருக்க வேண்டுமென்ற மனிதனுடைய அளவற்ற ஆசை துரிதமாகக் கடந்து போகின்ற இவ்வாழ்க்கையை மகிழ்விக்க முடியாது. நம்மு டைய உடைமைகளைக் குறித்து, சாதனைகளைக் குறித்து நாம் பெருமைப் படுவது இயற்கையானதென்றாலும் கூட வாழ்க்கையின் நிதர்சனத்தை ஆட்கொள்ளவும், ஒருவருடைய கண்களை அது குருடாக்கவும் நாம் அனுமதித் தால் அது நமக்கு நித்திய அழிவை ஏற்படுத்தும்.

நான் அடைந்து விட்டேன் என்னும் தத்துவத்தைத் தங்கள் வாழ்வின் தாரக மந்திரமாகக் கொண்டு அதினால் திருப்தியடையும் மக்களுக்கு அருமை இரட்ச கரின் பதில் என்ன? இப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய எச்சரிப்பு என்ன? மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும். தேவனி டத்தில் ஐசுவரியவானாயிராமல் தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான்(லூக்கா 12:20,21).

நம் ஜீவன் நம்மிடமிருந்து எப்போது வேண்டுமானாலும் எடுபட்டுப்

போகலாம் என்பதைக் குறித்த உணர்வுடையவர்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர். வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைக் குறித்துச் சிலரே உணர்வுள்ளவர்களாயிருந்தாலும், இவ்வுலகில் மிகச்சிறந்த ஆரோக்கியத்தைப் பெற்றிருந்தாலும், எவ்வளவு ஆடம்பரமாக வாழ்ந்தாலும் கூட அவருடைய ஜீவன் எப்போது வேண்டுமானாலும் எடுபட்டுப்போகலாம் என்பது உண்மையாயிருக்கிறது. யாருக்கு எப்போது சாவுமணி அடிக்குமென்று யாருக்குமே தெரியாது. ஆகவே, சரீரப்பிரகாரமான வாழ்க்கையில் வளம்பெற ஆசைப்படும் நாம் இதற்கு இணையாக அல்லது இதைவிட அதிகமாக ஆவிக்குரிய வாழ்வில் வளம்பெற கவனமாயிருக்க வேண்டும். இதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை(மத் 6:19,20) என்று அறிவுறுத்துகிறார்.

ஒரு மனிதனிடத்தில் எத்தனை திரளான ஆஸ்திகள் இருந்தாலும் அது அவனுடைய ஆசைகளை அடக்காது. ஒருவன் எவ்வளவாய் வைத்திருக்கிறானோ அவ்வளவாய் விரும்புகிறான் அல்லது ஆசைப்படுகிறான். இயேசு கிறிஸ்துவால் மாத்திரமே இளைப்பாறுதல் தரமுடியும் (மத் 11 : 28). நம்முடைய ஆவிக்குரிய தாகத்தை நம் எஜமானாகிய கிறிஸ்துவால் மாத்திரமே தணிக்க முடியும் (யோவான் 6:4). ஒருவர் தன் வாழ் நாள் முழுவதையுமே இப்பூமிக்குரிய ஆஸ்திகளைச் சேர்ப்பதிலேயே கழித்து தேவனுக்கு முன்பாக ஆவிக்குரிய பிரகாரமாக வளம்பெறவில்லையென்றால் அப்படிப்பட்ட மனிதன் பிறவாதிருந்தால் நலமாயிருந்திருக்கும்.

முதல் நூற்றாண்டில் ஆசியமைனர் பகுதியில் ஒட்டுமொத்த சபையே ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருந்தது. அவர்கள் தாங்கள் ஐசுவரியவான்களென்றும் தங்களுக்கு எதுவுமே தேவையில்லையென்றும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தனர். வேறுவிதமாகச் சொன்னால், தாங்கள் எல்லாவற்றையும் அடைந்துவிட்டதாகச் நினைத்துக் கொண்டார்கள். ஆனால், கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்! இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன் நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும் தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல் நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும் எனக்கு ஒரு

குறையுமில்லையென்றும் சொல்லுகிறபடியால், நான்: நீ ஐசுவரியவானாகும் படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும் உன் நிர்வாணமாகிய அவலட் சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும் நீ பார்வையடையும்படிக்கு உன் கண்க ளுக்குக் கலிங்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகி றேன். நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக் கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு (வெளி 3:16-19)


நண்பரே! நீங்கள் எல்லாவற்றையும் அடைந்து விட்டதாகச் சொன்னால் எவ்வகையில் எல்லாவற்றையும் அடைந்திருக்கிறாய்? சிந்தி.

✝

---

## மனைவிமார்களுக்கான பத்து கட்டளைகள்

- ★ உங்கள் தகப்பனின் பல கால உழைப்பினிமித்தம் நீங்கள் அனுபவித்த சொகுசு வாழ்க்கையை கணவனிடம் எதிர்பார்க்காதீர்கள்; ( பிலி.4:11; ஆமோஸ் 4:1).
- ★ புத்தியுள்ள ஸ்திரீகளாக இருந்து வீட்டைக் கட்டுங்கள். அதை இடிக்க வேண்டாம் (நீதி. 14:1).
- ★ சண்டைக்காரியாகவும், கோபக்காரியாகவும் இராமல், கணவனுக்கு அடங்கி நடங்கள் (நீதி. 21:19).
- ★ கணவன் தன் சரீரத்திற்கு அதிகாரி என்பதை மறவாதீர்கள் (I கொரி. 7:4).
- ★ கணவனுடைய அங்கீகாரம் தான் முக்கியம், மற்றவர்களுடையதல்ல என்பது எப்பொழுதும் நினைவிருக்கட்டும் (எசே. 16:32).
- ★ கணவனிடம் எரிச்சல்படாமல், சாந்தமும் அமைதியுமுள்ள ஆவியோடு நடந்து கொள்ளுங்கள் (I பேதுரு. 3:1–4).
- ★ புறம்பான அலங்கரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள் (I பேதுரு. 3:3).
- ★ கணவனுக்கு எது பிரியமாயிருக்கும் என்று பார்த்து உங்கள் ஆடை அலங்காரத்தை அமைத்துக் கொள்ளுங்கள் (உன். 4:9–11).
- ★ உங்களை கணவனுக்கு இருதயத்திலிருந்து தாழ்த்தி, அவர் வீட்டிற்குத் தலைமையாயிருக்க அனுமதியுங்கள் (கொலோ. 3:18; I பேதுரு. 3:6 ; எபே. 5:33).
- ★ உலகத்திலே, உங்கள் கணவர் தான் மேலானவர் என்பதை எல்லா வகையிலும் உத்திரவாதப்படுத்துங்கள் (பிலி. 2:3, உன். 5:6–16).



# அன்பை விளக்குதல்

## Defining Love

Bill Nicks

**ப**ழைய ஏற்பாட்டில் " hesed " என்னும் வார்த்தை உறுதியான அன்பு, நீடிய தயை, கிருபை, இரக்கம், உண்மைத்தன்மை, நன்மை போன்ற அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

1. புதிய ஏற்பாட்டில் " agape " என்னும் கிரேக்க வார்த்தை அன்பைக் குறிக்கிறது. மேலும் இது, a. தேவன் தன்னுடைய குமாரன் மீது கொண்டிருக்கும் மனநிலையையும் ( யோவான் 17:26 ). b. பொதுவாக மனித இனத்தின் மீது தேவனுடைய மனநிலையையும் (யோவான் 3:16). குறிப்பாக, கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் மீது அவருடைய மனநிலை யையும் (யோவான் 14:21). c. கிறிஸ்தவர்கள் சக கிறிஸ்தவர்களிடத்திலும், எல்லா மனுஷரிடத்திலும் கொண்டிருக்கும் மனநிலையையும். d. தேவனுடைய மைய தன்மையையும் ( I யோவா 4:8 ) விவரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

2. " phileo " என்னும் கிரேக்க வார்த்தை மென்மையான பாசத்தைக் குறிக்கக் கூடிய ஒரு வார்த்தையாகும். இது ஒரு தகப்பன் தன் குமாரன் மீது கொண் டிருக்கும் மென்மையான அன்பைக் குறிக்கும் ஒரு வார்த்தை. (யோவான் 3:35; 5:20 ). இவ்வார்த்தை சீஷர்கள் மீது கிறிஸ்து கொண்டிருந்த அன்பை குறிக்கும் வார்த்தையாகும் (யோவான்13:23; 20:2) " Agape " க்கும் " phileo " க்கும் இடையே வித்தியாசம் மற்றும் அன்பின் மதிப்பைப் பற்றி யோவான் 21- ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆயினும், இங்கே பேதுருவின் பதில் phileo - யின் பயன் பாட்டைத்தான் காட்டுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கேட்ட கேள்வி அன்பின் மாறாத நிலையைக் காட்டுகிறது. இது ஏதோ ஒன்றின் மீது ஒருவர் சதா சிந்தையுடையவராக இருப்பதைக் குறிக்கிறது. phileo என்பது இரு கூட்டாளிகளுக்கிடையே நிலவும் அன்பைக் குறிக்கும்.

3. Philostorgoi என்னும் கிரேக்க வார்த்தை நம் குடும்ப அங்கத்தினர்கள் மீது நாம் கொண்டிருக்கும் பாசத்தைக் குறிக்கிறது. இது நம் ஆவிக்குரிய குடும்பத்தாராகிய சபை அங்கத்தினர்கள் மீது நாம் காட்டும் அன்புக்கும் பொருந்தும். அன்பைக் குறிக்கும் கிரேக்க பதங்கள் ஒன்றுகூட பாலியல் சம்பந்தமான உறவுகளைக் குறிக்காது. ஆனால், துரதிஷ்டவசமாக இவ்வுலகமானது, அன்பு என்பதற்குக் காதல், காமம் போன்ற பொருள்களைக் கொடுத்திருக்கிறது (ரோமர் 12:10).

ரோமர் 13:13 ல் " Koite " என்னும் கிரேக்கப் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கணவன் மனைவியிடையே காணப்படும் நெருக்கமான உறவைக் குறிக்கக்கூடிய ஒரு வார்த்தையாகும். இவ்வார்த்தை எபிரெயர் 13 :4 ல் விவாக மஞ்சம் என்று சொல்லப்பட்டுள்ளது. மேலும், விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்சொல்லப்பட்ட வாக்கியங்களில் அன்பு என்னும் வார்த்தை பரிசுத்த ஆவியானவரால் எவ்வளவு அழகாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். ஆனால், இவ்வுலகம் அன்பு என்பதற்கு உடல் சம்பந்தமான, அசிங்கமான உறவு என்று அர்த்தம் கொடுக்கிறது. ஆனால், வேதம் அதைப் பரிசுத்தம் என்று மகிமைப்படுத்துகிறது. ஆகவே, அன்பே பெரியது (I கொரி 13:13).

## தேவன் வாக்களிக்காதவைகள்

| | | |
|---|---|---|
| துன்பமில்லாத வாழ்க்கை | - | II தீமோ. 3 : 12 |
| விரோதிகள் இல்லாத வாழ்க்கை | - | மத். 5 : 10 - 12 |
| கீழ்ப்படியாதவர்கள் இரட்சிப்படைவது | - | மத். 7 : 21 |
| நாளை பற்றிய உத்திரவாதம் | - | யாக். 4 : 13 - 15 |

# என் பிள்ளைகளுக்கு வேண்டுமென நான் விரும்புவது

## What I Want For My Children

Jimmy Ferguson

தகப்பன்மார்களுக்கு வீட்டின் தலைவர்கள் என்ற விசேஷித்த பொறுப்புகள் உண்டு. இப்பொறுப்பு தகப்பன்மார்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொரு தகப்பனும் கருத்தில் கொண்டு தேவனுடைய போதனைகளைத் தன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். சபையில் பல தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய நலனில் அக்கறையில்லாமல் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். அதே வேளையில் துக்கமுமடைகிறேன். இது பல இளம்பிள்ளைகள் வேதபாட வகுப்புகளுக்கும், ஆராதனைக்கும் வராமலிருப்பதில் வெளிப்படையாகத் தெரிகிறது. பல தகப்பன்கள் இளந்தலைமுறையினர் சபை காரியங்களில் விருப்பமில்லாமலிருப்பதைக் குறித்துக் கவலையில் இருக்கிறார்கள். இதில் தகப்பன்மார்களுக்கு பாதிப் பொறுப்பு இருக்கிறதா? அல்லது சபை ஒட்டுமொத்தப் பொறுப்பையும் ஏற்க வேண்டிய தாயிருக்கிறதா?

எனக்கு நான்கு மகன்களும், ஒரு மகளும் இருக்கிறபடியால் தேவன் என்மீது வைத்திருக்கிற பொறுப்பை முழுமையாக நான் அறிவேன். இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் ( சங்.127:3 ) என்று சங்கீதக்காரன் சொல்கிறார். என் பிள்ளைகள் தந்தையர் தினத்தில் அப்பா, உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்டார்கள். இக்கட்டுரை தந்தையர் தினத்திலும் மற்ற எல்லா தினங்களிலும் என் பிள்ளைகளுக்கு வேண்டுமென நான் விரும்பும் காரியங்களைப் பற்றியது தான்.

1. தன் வாழ்வில் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு முதலிடம் கொடுத்து அதையே என் பிள்ளைகளுக்குப் போதிக்கிற தகப்பனாக நான் இருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு சொன்னார் (மத்.6:33). கர்த்தர் என் வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கவில்லை என்று என் பிள்ளைகள் ஒருபோதும் நினைக்கக் கூடாது. அப்படி ஒரு சூழ்நிலையே வரக்கூடாது என்று ஆசைப் படுகிறேன். ஒவ்வொரு தகப்பனும் தன் பிள்ளைகள் கிறிஸ்துவை தன் வாழ்க் கையில் காணத்தக்க வாழ்க்கையை வாழ வேண்டும். தகப்பன்மார்களே, நம் வாழ்க்கையில் நாம் தேவனுக்கு அவர் ஒரு தகப்பன் என்கிற நிலையில் முக்கியத் துவம் கொடுக்கவில்லையென்றால், நம் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சை யிலும் போதனையிலும் வளர்க்க முடியாது ( எபே.6:4 ). நம் பிள்ளைகள் நம்முடைய வார்த்தைகளை காலப்போக்கில் மறந்தாலும், நம் வாழ்வின் மாதிரியை நீண்ட காலத்திற்கு மனதில் வைத்திருப்பார்கள்.

2. பெற்றோர்களிடத்தில் அன்பாயிருக்கவும், பெற்றோர்களுக்கு மரியாதை செலுத்தவும் அவர்களுக்குக் கீழ்ப்படியவும் வேண்டுமென்று போதிக்கிற தகப்பனாக நான் இருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

ஒரு வீட்டில் காணும் அழகான காட்சிகளுள் ஒன்று பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடம் அன்பை வெளிப்படுத்தும் காட்சிதான். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைக் கனப்படுத்தவும், அவர்களுக்குக் கீழ்ப்படியவும் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் (எபே.6:1-2). இன்று பல வாலிபர்கள் தங்கள் பெற்றோர்களை மதிக்காமலிருப்பதற்குக் காரணம் அவர்கள் போதிக்கப்படாதது தான்.

3. வாரத்தின் முதல் நாளை தன் குடும்பத்தோடு தேவனை ஆராதிப்பதற்கு ஒதுக்கி அதைக்குறித்துப் போதிக்கிற தகப்பனாக நான் இருக்க வேண்டுமென விரும்புகிறேன் (எபி.10:25).

தங்கள் பெற்றோர் ஞாயிற்றுக்கிழமை என்ன செய்வார்கள் என்று பிள்ளைகளுடைய மனதில் ஒருபோதும் கேள்விகள் எழவே கூடாது. தகப்பன்மார்களே, ஞாயிற்றுக்கிழமைகளில் உங்கள் பிள்ளைகள் " நாம் இன்று சபைக்குப் போகிறோமா? என்று கேட்கிறார்களா. தேவனை ஞாயிற்றுக்கிழமையில் அதாவது, வாரத்தின் முதல் நாளில் குடும்பமாக சபைக்கு சென்று ஆராதிப்பது பிரதான கடமை என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஆராதனை முக்கியமல்ல என்பதை உங்கள்

மாதிரியினால் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்துவிட்டு, உங்கள் பிள்ளைகளை நேசிக்கிறீர்கள் என்று உண்மையாகவே நீங்கள் சொல்லமுடியுமா? தகப்பன்மார்களே சற்று சிந்தியுங்கள், உங்கள் மோசமான மாதிரி அவர்களை இழந்துபோகச் செய்துவிடும்.

4. ஏன் மனைவியினிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் அன்பாகவும் அக்கறையாகவும் இருக்கிற தகப்பனாக நான் இருக்கவேண்டுமென விரும்புகிறேன்.

நம் பிள்ளைகளுக்காக நாம் செய்யும் மிகப்பெரிய காரியங்களில் ஒன்று அவர்களுடைய தாயை நேசிப்பதுதான் என்று சொல்லப்படுகிறது. எனக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தரும் அருமையான மனைவி இருக்கிறாள். அவள் என் குழந்தைகளுக்குத் தாயாக இருப்பதைக் குறித்து நான் பெருமைப்படுகிறேன். அதை என் பிள்ளைகள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன். மேலும், நான் என் பிள்ளைகளை நேசிக்கிறேன் என்பதை அவர்கள் அறியவேண்டுமென்றும் விரும்புகிறேன். இன்னும் அவர்களுக்கு சிறந்தவைகள் மட்டுமே கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறேன். தகப்பன்மார்கள் இதை வார்த்தையினாலும், மாதிரியினாலும் தெரியப் படுத்தவேண்டும்.

5. தன் மனைவியிடத்திலும், பிள்ளைகளிடத்திலும், கிறிஸ்தவத்தைக் குறித்து ஒருபோதும் தவறாகப் பேசாத, கிறிஸ்தவத்திற்கு ஒரு போதும் இடறலாயிராத தகப்பனாக இருக்கவேண்டுமென நான் விரும்புகிறேன்.

என் பிள்ளைகள், என் தகப்பனைப்போல் ஆக விரும்புகிறோம், என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் அவர் இயேசுவைப் போல் இருக்க முயற்சிக்கிறார் என்று சொல்ல நான் ஆசைப்படுகிறேன். இவ்வார்த்தைகள் நம் கண்களில் ஆனந்தக் கண்ணீரைக் கொண்டு வரும். நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக் கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி ( உபா.6:7 ). பிள்ளைகளுக்கு தேவனின் மகத்துவங்களை உணர்த்த வேண்டியது தகப்பனின் கடமை.

✞

# தாயின் பாரம்

## Mother's Load

Dan Gulley



ஒரு மனிதன் வேலை முடிந்து வீட்டிற்கு வருகிறான், வீட்டுக்கு வந்து பார்க்கும்போது வீடு முழுவதும் அலங்கோலமாகக் கிடக்கிறது. அவனுடைய பிள்ளைகள் வெளியே சேற்றில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வீட்டிற்குள் கண்ணாடி விளக்கு நொறுக்கப்பட்டிருந்தது. வீட்டின் முன்னறை பொம்மைகள் மற்றும் துணிகள் சிதறிக்கிடந்தன. சமயலறைத் தொட்டியில் பாத்திரங்கள் நிரம்பிக் கிடந்தன. தானியங்களும் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. மேஜைக்குக் கீழே உடைந்த கண்ணாடித் துண்டுகளும் கிடந்தன.

அந்த மனிதன் கீழே குவிந்து கிடந்த பொம்மைகள் மற்றும் துணிகள் மேல் நடந்து தன் மனைவியைப் பார்க்க படிகள் ஏறி மேலே போனான். அவளோ அப்பொழுது மெத்தையில் படுத்துக்கொண்டு ஏதோ ஒரு நாவலை வாசித்துக் கொண்டிருந்தாள். உள்ளே வந்த தன் கணவனைப் பார்த்து புன்னகை செய்து, இந்த நாள் நன்றாகப் போனதா என்று கேட்டாள்.

அவனோ, கடுங்கோபத்துடன், என் நாளை விட்டுத் தள்ளு, இங்கே என்ன நடந்தது? என்று கேட்டான். அதற்கு அவள் சொன்ன பதில் அவனை அதிர்ச்சியில் உறைய வைத்தது. நீங்கள் தினமும் வேலை முடிந்து வந்தவுடன் இன்று நீ என்ன செய்தாய் ? என்று கேட்பீர்கள். தினமும் நான் செய்யும் வேலையை இன்று நான் செய்யவில்லை என்றாள்.

வேலை செய்யும் பெண்கள் என்னும் வார்த்தைக்குப் பொருள் தெரிகிறதா ? பிழைப்பிற்காக வெளியே வேலை செய்யும் பெண்களாக இருந்தாலும் சரி, வீட்டிலிருந்து கொண்டு வீட்டைக் கவனிக்கும் பெண்களாக இருந்தாலும் சரி, தாயாக இருந்து வீட்டைப் பராமரிக்கும் எல்லாத் தாய்மார்களுமே கடுமையான உழைப்பாளிகள் தான்.

சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நீதிமொழிகள் ஆசிரியர் தாயினுடைய வேலைப் பளுவைப் பற்றி விபரமாக விவரித்திருக்கிறார் (நீதி 31 : 10- 31) அவள் வருடத்தின் 365 நாட்களும் மனைவியாகவும், தாயாகவும், வீட்டுப் பொறியாளராகவும், வீட்டை நிர்வாகிப்பவளாகவும் இருக்கிறாள். அவள் இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள். இரவிலே அவள் வீட்டு விளக்கு அணையாதிருக்கும் ( 31 : 15,18 ) நீதி. 31 : 27 ம் வசனம், மனைவியாகவும், தாயாகவும் இருப்பது சோம்பேறிகளுக்கான வேலை அல்ல என்பதையும், பெண்ணின் வேலை என்ன என்பதையும் சுருக்கமாகத் தெரிவிக்கிறது.

ஒரு தாயின் பணியை முழுமையாக விவரிப்பதென்பது எளிதானதல்ல. அவளுடைய வேலை 9:0 - 5:00. அலுவலகப் பணியைப் போன்றதல்ல. தாய் பன்முகத் தன்மை கொண்டு, பல பணிகளை ஒரே நேரத்தில் செய்யும் திறனைத் தன்னகத்தே கொண்டு விலைமதிப்பில்லா வேலைகளை வீட்டில் செய்கிறாள். அவள் செய்யும் வேலையை எந்த இயந்திரமும் ஈடுகட்ட முடியாது. பெண்ணின் தனித்துவம் வாய்ந்த வேலைத் திறனைப் பற்றியும், இன்றியமையாத பங்கைப் பற்றியும், வலிமைமிக்க நிலை பற்றியும், இரண்டு புதிய ஏற்பாட்டு வசனப்பகுதியில் சுருங்கச் சொல்லப் பட்டிருக்கிறது ( I தீமோ.5:14; தீத்து 2:4,5).

ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.

தேவ வசனம் தூஷிக்கப் படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும் தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லு.

மேற்சொல்லப்பட்ட வசனங்களில் இடம்பெற்றிருக்கும் குணாதிசயங்கள், திருமணத்திற்குப் பிறகு ஒரு தாயின் பாரங்கள் அல்லது பொறுப்பு பற்றி சொல்லுகின்றன. இவ்வார்த்தைகள் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு

தலைமுறைக்கு மாறும் கலாச்சார வாக்கியங்களல்ல. இவைகள் வீட்டில் ஒரு தாயின் பாரத்தை விவரிக்கும் வேத வசனங்களாகும்.

சில இல்லங்கள் தாய் இல்லாம லேயே சமாளித்துக் கொள்ளுகிற தென்பது உண்மைதான். ஆனால், கிட்டத்தட்ட எல்லா இல்லங்களிலும் தாய் தான் பொறுப்பாக வீட்டை நிர்வகிக்கிறாள். தாய்மை என்பதை சுலபமான ஒன்றாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒரு நாள், தாய்மார்கள் எல்லாம் கூடி வீட்டு வேலைகளைச் செய்ய மாட்டோம் என்று போராட்டத்தில் இறங்கி விட்டால் வீடு எவ்வளவு அலங்கோல மான குழப்பமான நிலையில் காணப்படும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்! தாயின் பாரத்தைச் சுமக்க விரும்பும் பெண் களுக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

✝

---

## ஒரு காலை ஜெபம்

ஓ! கர்த்தாவே, இன்றைக்கு நான் ஏற வேண்டிய மலையை
ஏறுவதற்கான பெலனை எனக்கு தந்து உதவும்
நீ காட்டும் குறுகலான வழியில் நடப்பதற்கு
உம்முடைய சித்தத்தை அறிந்து செயல்பட எனக்கு உதவி செய்யும்

நான் இந்நாளில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு யாராவது
ஒருவருடைய பாரத்தைத் தாங்க எனக்கு உதவி செய்யும்
என் சகோதரன் செய்ய வேண்டிய வேலையில்
நான் அக்கறையாயிருக்கிறேன் எனக் காட்ட எனக்கு உதவி செய்யும்

உம்முடைய தெய்வீக ஒளியைப் பலருக்கும் தெரியும்படியான
வாழ்க்கையை நான் எப்பொழுதும் வாழ எனக்கு உதவி செய்யும்
நான் எப்பொழுதும் எனக்கு முக்கியத்துவம் தராமல்
மற்றவர்கள் நலனில் நாட்டம் கொள்ள எனக்கு உதவி செய்யும்

உம்மை மென்மேலும் நேசிப்பதற்கு ஒவ்வொரு நாளிலும்
உம்மோடு கூட நடக்க எனக்கு உதவி செய்யும்
ஒருநாளில் நான் வாசிக்கும்
பரலோகத்தில் வந்து சேர எனக்கு உதவி செய்யும்.

# ஒழுங்குபடுத்தப்படாத முரட்டுத்தனமான பிள்ளைகள்

# Wild Undisciplined Children

Don Deffenbaugh

இன்றைய நாட்களில் வீட்டிலும், வெளியிலும் அடங்காமல் திரிகின்ற பிள்ளைகளை ஒழுங்குபடுத்த மறுக்கும் பெற்றோர்களை நினைத்து நான் அதிகமாகக் கவலைப் படுகிறேன். இளந் தலைமுறையினர் யாரையும் மதிக்காமல் அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்களோ அதை அவர்கள் விரும்பும் நேரத்தில் செய்கிறார்கள். அதே வேளையில், அது பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல் பிள்ளைகளுடைய செயல் பாடுகளில் தலையிடாமலும், அவர்களைக் கண்டுகொள்ளாமலும் இருக்கிற பெற்றோர்களை நினைத்தால் மனம் பதறுகிறது. இதைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிற தென்று பார்ப்போம்.

நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்னயாவையும், அவன் மேல் அந்நாளிலே வரப்பண்ணுவேன். அதைத் தொடங்கவும் அதை முடிக்கவும் போகிறேன். அவன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும் அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம் நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன் ( I சாமு. 3:12,13 ). ஏலி தன்னுடைய குமாரர்களின் மோசமான செயல்களுக்குப் பொறுப்பாளியாயிருந்தான். ஏலியின் பிரச்சனை என்னவென்றால், அவன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போனது தான்.

தாவீது தன் குமாரனாகிய அதோனியாவின் துன்மார்க்கமான செயல்பாடுகளுக்குப் பொறுப்பாளியாயிருந்தான் ( I ராஜா.1:6 ). அவனுடைய தகப்பன், நீ இப்படிச் செய்வானேன் என்று அவனை ஒருக்காலும் கடிந்துகொள்ளவில்லை என்று சொல்லுகிறது.

வேதாகமத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் செயல் பாடுகளுக்குப் பொறுப்பாளிகளா யிருக்கிறார்கள் என்பதை வாசிக்க முடியும். அப்போஸ்தலனாகிய பவுல், பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போத னையிலும் அவர்களை வளர்ப்பீர் களாகஎன்று எழுதுகிறார் (எபே.6:4).

எபிரெயர் ஆசிரியர் சொல் லும்போது அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சயை அற்பமாக எண்ணாதே. அவரால் கடிந்து கொள் ளப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகி றாரோ அவனை அவர் சிட்சித்து தாம் நேசிக்கிற எந்த மகனையும் தண்டிக் கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந் தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிற வர்களாயிருந்தால் தேவன் உங்க ளைப் புத்திரராக எண்ணி நடத்து கிறார்: தகப்பன் சிட்சியாத புத்திர னுண்டோ? ( எபி. 12:5-7 ) என்று சொல்லுகிறார். தயவு செய்து ஏழாம் வசனத்தில் தகப்பன் சிட்சியாத புத்திர னுண்டோ? என்னும் கேள்வியைக் கவனியுங்கள்.

அடங்காத, ஒழுங்கற்ற இளைய தலைமுறையினர் தேசத்தின் தலைவர்களாகவும், தாய், தகப்பன் மார்காளகவும் ராஜ்ஜியத்தின் பிரஜை களாகவும் இருந்தால் தேசத்திற்கும் வீட்டிற்கும், சபைக்கும் என்ன நடக் கும்? என்பதை சற்றே நிதானித்துப் பாருங்கள். தேவன் உண்மை யுள்ளவர்!

---

## பரலோகம் செல்லுவதற்கு.....

- நான் எப்படிப் பரலோகம் செல்ல முடியும்என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

  அது ஒளியும், வழியுமாயிருக்கிற இயேசுவின் மூலம் முடியும்

- தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது, சத்தியத்தை விசுவாசியுங்கள். எந்த பயமுமில்லாமல் இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்யுங்கள்.
- மனந்திரும்பி, திருமுழுக்குப் பெறுங்கள் - இது உங்களுக்கான கட்டளை இது பாவமன்னிப்பையும், புதிய வாழ்க்கையையும் தருகிறது.
- ஒவ்வொரு நாளிலும் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள்.
- ஆம், ஒளியும், வழியுமாகிய இயேசுவின் மூலம் பரலோகம் செல்ல முடியும்.


# இளம் வயதினருக்கு பிரசங்கி புத்தகம்

## Ecclesiastes For Young People

Paul Holland

பிரசங்கி புத்தகம் முழுவதிலும் சாலொமோன் ஞானி தேவனில்லாத வாழ்க்கை மாயை, மாயை எல்லாம் மாயை என்று வலியுறுத்துகிறார் ( பிர.1:2 ). இப்புத்தகத்தை நீங்கள் வாசிக்கும்பேது மாயை, காற்றுக்குப் பிரயாசப்படுவது போன்றவைகள் எத்தனை முறை சாலொமோன் ஞானியால் பயன்படுத்தப்பட்ருக்கிறது என்பதைக் கோடிட்டுப் பார்க்கும்படியாக உங்களை உற்சாகப்படுத்துகிறேன். மாயை, காற்றுக்குப் பிரயாசப்படுவது போன்ற வார்த்தைகள் சுயநல காரணங்களுக்காக வாழ்வதின் சாராம்சத்தைக் காட்டுகிறது.

இப்புத்தகத்தின் கடைசியில் சாலொமோன், நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் என்று குறிப்பிடுகிறார் ( பிர. 12:1 ) இந்தப் பிரசங்கி புத்தகம் இளம் வயதினர் மதிப்புள்ள, அர்த்தமுள்ள, நீடித்த வாழ்க்கையை வாழ விரும்பினால், தேவனுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக எழுதப்பட்டது.



இளம் வயதினர் தங்கள் சிருஷ்டிகரை நினைக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள், அவரால், அவருக்காக சிருஷ்டிக்கப்பட்டார்கள். இது வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தையும், ஒரு புதிய திசையையும் கொடுக்கிறது. இளம் வயதினர் தேவனுடைய குணாதிசயத்தையும் குறிப்பாக அவருடைய நற்குணங்களையும் குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் தேவனுடைய வார்த்தையை வாசித்து, தியானித்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

தேவன் வயதானவர்களுக்கு மாத்திரமல்ல, மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுகிறவர்களாகிய வாலிபர்களுக்கும் தேவனாயிருக்கிறார். திருமணம் முடிந்து சில வருடங்களாகித் தங்கள் குழந்தைகளை வளர்க்க வழிகாட்டுதலுக்காக ஏங்கும் இளம் பெற்றோர்களுக்கும் அவர் தேவனாயிருக்கிறார். இளம் வயது பிள்ளைகளை வழிநடத்த ஆயத்தமாகும் நடுத்தர வயது பெற்றோர்களுக்கும் அவர் தேவனாயிருக்கிறர். மிகவும் வயதான பெற்றோர்கள் சரீர உபாதைகளுக்கு உட்படுவதால் அவர்களைப் பராமரிக்கும் வயதான பெற்றோர்கள் சரீர வேதனைகளையும், வலிகளையும் அனுபவித்துக் கொண்டு தேவனை சீக்கிரமாகக் காணவேண்டுமென்று வாஞ்சிக்கிறபடியால் அவர்களுக்கும் அவர் தேவனாயிருக்கிறார்.

பிரசங்கிப் புத்தகம் எல்லோருக்குமானது. நாமெல்லோரும் அதை அவசியம் வாசிக்க வேண்டும். ✞

## ஆத்துமாவின் அளவீடு ...

பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து : ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்.

# நான் யார்?

## Who Am I?

### Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கொடுக்கப் பட்டுள்ள ஒவ்வொரு குறிப்புகளையும் கவனமாக வாசித்து யோசியுங்கள். முதல் குறிப்பிலேயே என் பெயரை நீங்கள் யூகித்துவிட்டால் 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நான் யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையா ளத்தை நீங்கள் உறுதிசெய்து விட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்க, கொடுக்கப்பட்டுள்ள வேதவசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.



1. நான் ஆசாரியனாயிருந்தேன்
2. என் மனைவி ஆரோன் வம்சத்தைச் சார்ந்தவள்
3. நான் கர்த்தருக்கு முன்பாகக் குற்றமற்றவனாயிருந்தேன் என்று வேதவசனங்கள் சொல்லுகின்றன.
4. என் மனைவி மலடியாயிருந்தாள். நானும் என் மனைவியும் வயது சென்றவர்களாகவும் இருந்தோம்.
5. நான் தேவாலயத்தில் தூபங்காட்டுகிற வேளையில் தேவதூதன் எனக்குத் தரிசனமானான்.
6. அந்தத் தூதன் என் மனைவி எனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் என்று சொன்னான்.
7. தூதனின் வார்த்தைகளை நான் விசுவாசியாதபடியால், என் குமாரன் பிறக்கும்வரை நான் ஊமையாக்கப்பட்டேன்.
8. என் குமாரன் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துவான் என்று தூதன் என்னிடம் சொன்னான்.
9. என் மனைவி பெயர் எலிசபெத்.
10. என் குமாரன் பெயர் யோவான்.

விடை : சகரியா

# நான் எங்கே இருக்கிறேன்?

## Where Am I?

Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கொடுக்கப் பட்டுள்ள ஒவ்வொரு குறிப்புகளையும் கவனமாக வாசித்து யோசியுங்கள். முதல் குறிப்பிலேயே என் பெயரை நீங்கள் யூகித்துவிட்டால் 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நான் யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையா ளத்தை நீங்கள் உறுதிசெய்து விட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்க, கொடுக்கப்பட்டுள்ள வேதவசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.



1. நான் நைல் நதியின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளேன்.
2. என் நிலப்பரப்பு சுமார் 900 சதுர மைல்களாகும்.
3. என் நிலம் கால்நடைகளை மேய்ப்பதற்கு ஏற்றதாயிருந்தது. ஆனால், பயிரிடுவதற்கு ஏற்றதாயிருக்கவில்லை.
4. எகிப்தியர்கள் என் நிலத்தைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கவில்லை
5. பார்வோன் ஓர் அந்நிய தேசத்துக் குடும்பம் என் நிலத்தில் வந்து குடியேற அனுமதி அளித்தான்.
6. தேவன் எகிப்தியர்கள் வாதைகளால் வாதித்தபோது, என் நிலம் வண்டு மற்றும் கல்மழை போன்ற வாதைகளால் வாதிக்கப்படவில்லை.
7. அந்நிய தேசத்துக் குடும்பம் என் நிலத்தில் குடியேறினபோது யோசேப்பும் எகிப்தின் ஆட்சியில் இருந்தான்.
8. என் நிலத்தில் குடியேறிய அந்த அந்நிய தேசத்து குடும்பம் யோசேப்பின் தகப்பன் , சகோதரர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தை உள்ளடக்கியதாயிருந்தது.
9. யோசேப்பின் குடும்பம் என் நிலத்தில் ஆடு மாடுகளை வளர்த்தது.
10. என் நிலத்தில் யோசேப்பின் குடும்பத்திற்கு பார்வோனின் மந்தையை மேய்க்கும் பணி கொடுக்கப்பட்டது.

விடை : கோசேன்

# நேரத்தைப் பயன்படுத்துதல்



## The Use Of Time

SPC Alex Gibson

உங்களில் யாருக்காவது விஷம் எப்படி வேலை செய்கிறது என்று தெரியுமா? அது கேளிக்கைகளில் காட்டப்படுவதுபோல் செயல்படுவதில்லை. ஏனென்றால், விஷம் குடித்தவர் மீது யாரோ ஒருவர் விழுந்து விஷத்தை முறிப்பதற்கு முயற்சி செய்வதை அங்கே காட்டுவார்கள். விஷம் குடித்தவர்களுடைய முகம் வேறுபட்டு அவர்கள் சாகிறதற்கு முன்பு நீண்ட நேரம் அப்படியே அதே நிலையிலேயே இருப்பார்கள்.

அருமையானவர்களே, அந்த விஷத்தைப் பற்றிய விஷயத்தைத் தான் இக்கட்டுரையில் நான் பேச ஆசைப்படுகிறேன். ஆனாலும், நான் சரீரப் பிரகாரமான விஷத்தைப் பற்றி இங்கே பேசவில்லை. வாழ்க்கையில் நாம் தெரிந்துகொள்ளும் காரியங்களினாலும், வாழ்க்கையில் நமக்கு முக்கியமாகத் தோன்றும் காரியங்களினாலும் நம் ஆத்துமாக்களுக்கு நாம் ஆவிக்குரிய வாழ்வில் விஷத்தை ஊற்றுகிறவர்களாகிறோம்.

பழங்கால நாகரீகங்கள் பற்றி உங்கள் வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். அப்பழங்கால சிதைவுகளிலிருந்து, அக்கால மக்களின் கல்லறைகளையும், கோயில்களையும் கண்டுகொள்கிறோம். எகிப்தில் இப்போதும் நாம் பிரமிடுகளைக் காணமுடியும். கிரேக்க நாட்டில் இன்னும் பல கோவில்கள் உண்டு. அவர்களுடைய தேவர்கள் மற்றும் தேவிகளுடைய சிலைகளும் அங்கே அதிகமாக உள்ளன. இன்னும், ஐரோப்பாவில் தேவாலயங்களையும், மாதா கோயில்களையும், நிலத்தடி சமாதிகளையும் காணலாம்.

அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் பழங்கால சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் அவர்களுடைய தெய்வங்கள் அவர்களுக்கு எவ்வளவு முக்கிய

மானவைகளாயிருந்திருக்கின்றன. என்கேள்வி என்னவென்றால், நம் தேவன் நமக்கு எவ்வளவு முக்கியமாக இருக்கிறார்? நாம் அவருக்காக மரிக்கும் அளவுக்கு அவர் தகுதியுள்ளவரா? நான் அப்படித்தான் நம்புகிறேன். ஆயினும், இன்றைய உலகில் ஜனங்கள் அர்த்தமுள்ள காரியங்களிலிருந்து பொழுது போக்கான காரியங்களுக்கு ஈர்க்கப்படுகிறார்கள்.

அடிப்படையாகவே நான் நேரத்தைக் கேளிக்கையாகக் களிக்கும் பழக்கத்தை உடையவனல்ல. ஆனால், ஒவ்வொரு நாளையும் உற்சமாக மாகவும், கேளிக்கையாகவும் கழித்து வேலை செய்யாமல் சோம்பலாக இருந் தால் எனக்கு அதிகம் கொழுப்பு ஏறி, மருத்துவ செலவுகள் அதிகமாகிவிடும்.

ஒருவேளை நான், வேலையையும், விளையாட்டையும் சமமாக வைத்து சமாளித்தால் கூட, தேவனுக்கு நேரத்தை ஒதுக்கவில்லையென்றால் என்னவாகும்? நான் உலகத்தின் பக்கம் அதிகமாக இழுக்கப்பட்டு, தேவனோடு செலவு செய்யும் நேரம் சுருங்கி விடுகிறது. நாம் இப்படிச் செய்யும்போது ஆவிக்குரிய வாழ்வில் விஷத்தை எடுத்துக் கொள்கிறோம். அப்போது நாம் நம் தரத்திலிருந்து இறங்கி, எளிதாகக் கோபப்பட்டு, கெட்ட வார்த்தைகள் நம் வாயிலிருந்து வரவும், சோதனை வலையில் விழுந்துவிடவும் அனுமதித்து விடுகிறோம். இப்படியாக நாம் கொஞ்சம் கொஞ்சமாக விலகி ஆவிக்குரிய வாழ்வில் நோய்வாய்ப்பட்டு விடுகிறோம். ஆவிக்குரிய வாழ்வில் விஷம் கடைசியாக ஆவிக்குரிய மரணத்திற்கு வழிவகுத்து விடுகிறது.

இன்று உலகில் இவைகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன? இதற்கு ஆதாரம் வேண்டுமா? உலகத்தின் மக்கள் Harry potter போன்ற புத்தகங் களை வாசிப்பதிலும், அதைத் திரைப்படமாகக் காண்பதிலும் நேரத்தைச் செலவு செய்கிறார்கள். இந்த Harry potter வீடியோக்களை U Tube ல் கோடிக் கணக்கானோர் பார்க்கிறார்கள். அடுத்ததாக, பல தொலைக்காட்சி நிகழ்ச்சி களைப் பார்த்து மக்கள் தங்கள் நேரத்தை வீணடிக்கிறார்கள். தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் எல்லா நிகழ்ச்சிகளும் மோசமான நிகழ்ச்சிகளல்ல. ஆயினும், அவைகள் நாம் தேவனுக்கு செலவழிக்க வேண்டிய நேரத்தை நம்மிடமிருந்து பறித்துக் கொள்கின்றன.

இப்போது நான் ஒரு கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். நம்முடைய பொழுதுபோக்கு பெரும்பாலான நேரத்தை எடுத்துக் கொள்வதால், நான் குற்ற உணர்வு உள்ளவனாகக் காணப்படுகிறேன். நான் இசையைக் கேட்பதில் சுமார் மூன்று மணிநேரம் ஒரே நாளில் செலவழித்துவிட்டு, வெறும் ஒரு மணி நேரம்

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதில் செலவழித்தேன். நான் இங்கே செல வழித்த நேரம் இசைக்கு மட்டுமல்ல, வேலை முடிந்தபிறகு இணையதளத்தில் செலவு செய்த நேரத்தையும், வாகனம் ஓட்டிய நேரத்தையும் இதில் சேர்க்கவில்லை.

ஆகவே, இங்கே பிரச்சனை என்னவென்று பாருங்கள். இந்த சமமற்ற நிலை என்ன செய்கிறது? இது நமக்கும், தேவனுக்குமிடையே ஒரு இடைவெளியை ஏற்படுத்தி விடுகிறது. நம் நல்ல தேவன், பெரும்பாலும் நம்மோடு மெல்லிய குரலில் (வேதவசனம்) பேசுகிறார். அந்த குரலை, பாடலைக் கேட்கப் பயன்படுத்தும் I – pad மூலமாகக் கூட கேட்க முடியாது. இங்கே முக்கிய கருத்து என்னவென்றால், பொழுதுபோக்கு என்னும் விஷத்தால் ஜனங்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைச் சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இவ்வுலகத்திற்குரிய காரியங்களில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தி தேவன் கொடுத்த நேரத்தை அவருக்குத் திருப்பிக்கொடுக்கத்தக்கதாக அதைக் குறித்து நின்று யோசிப்பது கூட இல்லை.

தேவனுக்கு திரும்பக் கொடுங்கள் என்னும் சொற்றொடர் பெரும்பாலான நேரங்களில் பணத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், நான் இங்கே அதை நேரத்திற்குப் பயன்படுத்துகிறேன். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்கிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது ( யாக்.1:27 ). சுத்தமான பக்தி என்பது, மற்றவர்களிடம் அன்பு காட்டுவதாகும். அதற்கு நேரம் என்னும் விலையை நாம் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஜனங்களுக்கு பணத்தை வாரி இறைப்பது மட்டும் அவர்களுடைய தேவைகளைச் சந்திக்காது. நமக்கும் ஆவிக்குரிய கவனச்சிதறல்களுக்கு அருமருந்தாய் அமையாது என்பதை அறியவேண்டும். சுத்தமான பக்தி என்பது தேவனோடு நேரத்தைச் செலவழித்து அதற்குப் பிறகு வெளியே போய் உங்களைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு ஏதாவது நன்மை செய்வதாகும்.

நிச்சயமாகவே, நீங்கள் ஆவிக்குரிய அல்லது சரீரப்பிரகாரமான தேவையில் இருப்பவர்களுக்கு அருகில் தான் வசிக்கிறீர்கள். அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள நேரத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால், தேவனுடைய அன்பை அவர்களிடம் காட்டுவதற்கு இது வாய்ப்பாக இருக்கும். மேலும், யாரோ ஒருவருக்கு உதவி செய்யும்போது நீங்கள் தேவனோடு நெருங்கிய தொடர்பு

வைத்துக்கொள்ள ஏதுவாயிருக்கும். இதை முயற்சி செய்துபாருங்கள். இதைக்குறித்து வெட்கப்படாதீர்கள். தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத் திருக்கிறார் " (II தீமோ.1:7). பலவீனமும், கோழைத்தனமும் கிறிஸ்தவர்களின் சிறந்த பண்புகள் அல்ல. தேவன் நமக்கு அன்பு, பலம் மற்றும் இச்சையடக்கத்தைத் தந்திருக்கிறார். இவை, ஆவிக்குரிய வாழ்வின் விஷத்தை முறிக்கும் அல்லது முறியடிக்கும் காரியங்களாயிருக்கின்றன.

நீங்கள் சுதந்திரமாக உங்கள் எண்ணங்களை, கருத்துக்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளலாம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

✞

---

## எச்சரிக்கையாயிரு ...

★ இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தை உன் இருதயத்தில் இருக்கக்கடவது

★ நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும் வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி

★ அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக் கடவது.

★ அவைகளை உன் வீட்டு நிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக

★ உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களாகிய உன் பிதாக்களுக்கு ஆணை யிட்டுக் கொடுத்த தேசத்தில் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும்போதும், நீ கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும்

★ நீ நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளையும் நீ வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும், நீ நடாத திராட்சைத் தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளையும், அவர் உனக்குக் கொடுப்பதினால், நீ சாப்பிட்டுத் திருப்தியாகும்போதும்......

# புதிய பிரமாணத்தின்படியான பாடல்

★ அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள் (மத்.26:30).

★ நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள் (அப் 16:25).

★ இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன் (I கொரி.14:15).

★ சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி (எபே.5:19)


★ கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும். கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி (கொலோ. 3:16)

★ உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும் (எபி.2:12)

★ உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் (யாக்.5:13)

★ உயிரற்றவைகளின் மூலமாக ஜீவனுள்ள தேவனை ஆராதிக்க முடியாது. இதயம் உயிருள்ளது. இசைக்கருவி உயிரற்றது. ✝

## சத்திய வழி



❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)

❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி **5.30 p.m.**

❖ நிகழ்ச்சி : வேதாகம கல்வி & அஞ்சல் வழி வேதாகம கல்வி

தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜூனன்

❖ தமிழன் TV : திங்கள் காலை **6:00** மணி & சனி மாலை **6:15 - 6:30** மணி

❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை **5.30-5.45**)

**Srilanka all Asia Service**




ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : **04543 263278** செல் : **94435 58041**

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : சகோ. P.C. பிலேமோன் ராஜா

❖ தமிழன் TV : ஞாயிறு காலை **6:45** மணி & வெள்ளி காலை **6:00** மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை

❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி

தொடர்புக்கு : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

: செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகம கல்வி

**வேதாகம அஞ்சல் வழி கல்வியில் ஒரு புதிய அத்தியாயம். ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகம கல்வி இது.**

தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகம கல்வி
த.பெ.எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

E.Z.S. ராஜநாயகம்: 98427 30382
P.R. சுவாமி : 098440 70763
P.C. பிலேமோன் ராஜா: 9244204420
B. அர்ஜுனன் : 994435 58041

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

☐ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.

Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385

E-mail : rajarichal@yahoo.co.in


பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ____________________